ஓர் ஆய்வு நோக்கு

# பண்டைத்தமிழர் பண்பாட்டுக்கோலங்கள்

நா. நவநாயகமூர்த்தி

கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத்தமிழர் பண்பாட்டுக்கோலங்கள்

(ஓர் ஆய்வு நோக்கு)

நா. நவநாயகமூர்த்தி

வானதி வெளியீடு
வானதி பவனம், பனங்காடு அக்கரைப்பற்று,
1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானதி வெளியீடு - 2

## பதிப்புத்தரவுகள்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பண்டைத் தமிழர் பண்பாட்டுக்கோலங்கள். |
| ஆசிரியர் | : | நா. நவநாயகமூர்த்தி. |
| வகை | : | ஆய்வு இலக்கியம் (கட்டுரைத்தொகுதி) |
| மொழி | : | தமிழ் |
| வெளியீடு | : | வானதி வெளியீடு<br>வானதி பவனம், பனங்காடு.<br>அக்கரைப்பற்று. கி. மா. |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| அச்சுப்பதிப்பு | : | செலக்ஷன் அச்சகம்<br>மத்திய கல்லூரி வீதி,<br>அக்கரைப்பற்று. |
| கொம்பியூட்டர் ரைப் செற்றிங் | : | அபா ரைப்பிங் அகடமி<br>பிரதான வீதி,<br>அக்கரைப்பற்று. |
| ஒப்பு நோக்கல் | : | மா. லோகநாதன்<br>ஆசிரிய ஆலோசகர்<br>அக்கரைப்பற்று. |
| வெளியிட்ட நாள் | : | 15. 12. 1996 |
| பக்கங்கள் | : | 70 |
| விலை | : | ரூ. 60/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இசையே இறைவனாக
இன்பத் தமிழே உறவாக
கலைகளே கண்களாக
கருதியே வாழ்ந்து சென்ற
சங்கீதபூஷணம்
கணபதிப்பிள்ளை
எங்கள் நல்லாசான்
அவர்கட்கு,
காணிக்கையாக இந்நூல்
பணிவுடன் சமர்ப்பணம்.



"சங்கீதபூஷணம், சைவப் புலவர்"
திரு. சி.கணபதிப்பிள்ளையவர்கள்

| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 20-07-1919 |
| மறைவு | : | 18-12-1992 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


பக்கம்

| | | |
|---|---|---|
| i. | அணிந்துரை | i |
| ii. | சிறப்புரை | vi |
| iii. | என்னுரை | x |
| iv. | நன்றிக்குரியவர்கள் | xi |
| 1. | மட்டக்களப்பு நகரம் தோன்றிய காலம் | 1 |
| 2. | சங்கமன் கண்டி நகரம் | 7 |
| 3. | மண்முனையிலிருந்து ஆட்சி புரிந்த உலகநாச்சியார் | 13 |
| 4. | சைவத் தமிழரிடையே சூரிய வழிபாடு | 17 |
| 5. | தமிழ் பிராஹ்மி எழுத்துக்கு முன் பண்டைக்காலத்தில் வழங்கிய தமிழ்எழுத்து | 22 |
| 6. | சிலம்பு சொல்லும் கலைகள் | 26 |
| 7. | பண்டைத்தமிழரின் ஓவியக்கலை | 29 |
| 8. | சிற்பக் கலையின் தோற்றம் | 35 |
| 9. | தமிழிசை பற்றி சங்க இலக்கியங்கள் | 40 |
| 10. | இந்துக்களின் கதிர்காமம் | 45 |
| 11. | காஷ்மீரத்தில் இந்துமதமும் வடமொழி இலக்கியமும் | 50 |
| 12. | மாமன்னர் அசோகரும் பௌத்தமும் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அக்கரைப்பற்று, பனங்காடு, தந்த ஆய்வறிஞர் திரு.நா. நவநாயகமூர்த்தி கடந்த பல வருடங்களாக, ஆய்வுக்கட்டுரைகளை குறிப்பாக தென்கிழக்கிலங்கை வரலாறு தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை எழுதிவருவதை நாம் அறிவோம். பல்கலைக் கழகத்தில் படிக்காத மேதையான இவர் தமிழர்வரலாறு, பண்பாடு, சமயம், மொழி, கலாசாரம், என்பவற்றின் மேல் கொண்ட தணியாத தாகம் காரணமாக ஆய்வுத்துறையில் ஏகலைவனாகச் செயற்பட்டு, பல அரிய தகவல்களை தமது கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இக்கட்டுரைகளில் சில ஏற்கனவே "தொல்லியல் சிந்தனைகள்" என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளன. இப்போது மேலும் சில கட்டுரைகள் "பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் என்ற இந்நூலில் இடம் பெறுகின்றன.

இக்கட்டுரைகள் பின்வரும் தலைப்புக்களில் அமைந்துள்ளன மட்டக்களப்பு நகரம் தோன்றிய காலம், சங்கமன் கண்டி நகரம், மண்முனையிலிருந்து ஆட்சிபுரிந்த உலக நாச்சியார், சைவத் தமிழரிடையே சூரிய வழிபாடு, பிரஹ்மி எழுத்துக்கு முந்திய தமிழ் எழுத்து, சிலம்பு சொல்லும் கலைகள், பண்டைத் தமிழரின் ஓவியக் கலைகள், சிற்பக்கலையின் தோற்றம், தமிழிசை பற்றிச் சங்க இலக்கியங்கள், இந்துக்களின் கதிர்காமம், காஷ்மீரத்தில் இந்துமதமும் வடமொழி இலக்கியமும், மாமன்னர் அசோகரும் பௌத்தமும்.

இவற்றைப் பார்த்த மாத்திரத்தே பொதுவாக பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்களும் குறிப்பாக தென் கிழக்கிலங்கை வரலாற்றுக் கோலங்களும் கட்டுரைகளின் தொனிப் பொருளாக அமைவதைக் காணலாம். இவற்றில் எழுந்தமானமாக ஒரு கண்ணோட்டம் செலுத்தும் போது ஆசிரியரின் உழைப்பும், பெரும் முயற்சியும் தெரிகின்றன.

கட்டுரைகளை நெருங்கிப் பார்க்கும் போது அவற்றின் ஆய்வுப் பண்புகளும் புலப்படுகின்றன. இவை கிழக்கிலங்கை வரலாறு தொடர்பான புதிய ஒளியைப் பாய்ச்சுகின்றன. சில வரலாற்றுத் தகவல்களுக்கு இன்னும் அதிகமான சான்றுகள் தேவை என்ற எண்ணம் எழுந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு மேலும் ஆய்வுகளைச் செய்யலாம் என்ற சமாதானம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கை தொடர்பாக முறையான ஆய்வுகள் இன்னும் செய்யப்படவில்லை. அதனால் காத்திரமான ஆய்வு நூல்களும் வெளிவரவில்லை "மட்டக்களப்பு மான்மியம்" என்ற ஏட்டுச் சுவடியின் நூற்பதிப்பு மட்டுமே (மகாவித்துவான் F.X.C. நடராசா பதிப்பித்தது - 1952) தமிழில் கிழக்கிலங்கை தொடர்பாகக் கிடைக்கும் ஒரே ஒரு வரலாற்று ஆவணமாகும் இதிலும் பல செய்திகள் ஆதாரமற்றவையாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் அன்பர் நவநாயகமூர்த்தியின் ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு நூல்களிலிருந்து பெற்ற தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டிருப்பது ஆறுதல் தரும் செய்தியாகும். அந்த வகையில் இக்கட்டுரைகள் மேலும் ஆய்வு செய்வதற்கான புதிய வாசல்களைத் திறந்து விடுகின்றன எனலாம்.

முதல் கட்டுரையான "மட்டக்களப்பு நகரம் தோன்றிய காலம் என்னும் கட்டுரையில் சில முக்கியமான செய்திகள் சொல்லப்படுகின்றன. இலங்கைவரலாற்றில் சேனன், கூத்திகன் ஆகியோருடைய ஆட்சி முக்கியமானதாகும். தமிழ் மன்னர்களான இவர்கள் ஆட்சி கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாவதாகக் கொள்ளப்படுகின்றது. இச் செய்தி மகாவம்சத்திலும் இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு நகரை உருவாக்கியவன் கூத்திகனே என ஆசிரியர் கூறுகிறார். இது மேலும் ஆய்வுக்குரியது. ஆனால் கூத்திகனது சகோதரனான சேனன் (கி.மு 237-215) அனுரதபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான் என்பது வரலாற்றாசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது இதற்கு ஆதாரமாக H.W Codrington எழுதிய "இலங்கையின் சுருக்க வரலாறு" ஆசிரியரால் குறிப்பிடப்படுகிறது.

இவ்விரு மன்னர்களினதும் காலத்தில் தமிழ் மக்கள் பெரும் அளவில் குடியேற்றப்பட்டார்கள் என்பதையும் அவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் குடியேற்றப்பட்டார்கள் என்பதையும் தர்க்கரீதியான ஊகமாக (logical inferena) கொள்வதில் தவறில்லை

இவர்கள் பேச்சுமொழி தமிழாக இருந்தபோதும் எழுத்து வரிவடிவம் பிரஹ்மியாக இருந்தது என்பது ஒரு முக்கியமான தகவல். இதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பழங்கால கல்வெட்டுக்கள் (Inscriptions) யாவும் பிரஹ்மி மொழியில் இருப்பது, இதற்கொரு வலுவான சான்றாகும் இதே காலப்பகுதியில் தென்கிழக்கிலங்கையில் தமிழர்கள் பரவலாக வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றாக அம்பாறை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட, மீன் சின்னம் பொறித்த பிரஹ்மிக் கல்வெட்டுகளையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இது மிக முக்கியமானதொரு வரலாற்றுத் தகவல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே ஏனைய கட்டுரைகளிலும் சான்றாதாரங்களுடன் சில செய்திகள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுள் இடம்பெறும் ஆய்வுகளும், முடிவுரைகளும் பின்வரும் புதிய தகவல்களைத் தருகின்றன

(1) மட்டக்களப்பு நகரம் தோன்றிய காலம் -

ஆதியில் மட்டக்களப்பு என்ற பெயர் கொண்ட பிரதேசம் தற்போதைய மட்டக்களப்புக்குத் தெற்கே, வீரமுனை முதல் திகவாபி வரை பரந்திருந்த இடமாகும்.

(2) சங்கமன்கண்டி நகரம்

சங்கமன் என்ற குறுநில மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதே சங்கமன்கண்டி நகரம். "கண்டி" என்பது அக்காலத்தில் முக்கிய நகரைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. கி.பி.1540ல்தான் தற்போதைய கண்டி நகர் "கண்டி" என்னும் பெயரைப் பெற்றது.

(3) மண்முனையிலிருந்து ஆட்சிபுரிந்த உலக நாச்சியார்.

மண்முனையில் ஆட்சி செய்த உலகநாச்சி, தென்கிழக் கிலங்கையில் ஆட்சி செய்த குணசிங்கன் அனுரதபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்த சந்திரகுப்த மௌரியன் ஆகியோர் சமகாலத்தவர்கள்.

(4) சைவத் தமிழரிடையே சூரிய வழிபாடு:

சூரியனைக் குறிக்க வழங்கிய ஒரு சொல் "எல்" என்பது. சூரிய வணக்கம் இலங்கையின் பூர்வகுடி மக்களிடம் இருந்தது (ஈழத்திற்கு "எல்லம்" என்ற ஒரு பெயர் முன்பு வழக்கிலிருந்தது என்பது இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.)

(5) தமிழ் பிராஹ்மி எழுத்துக்கு முந்தியதமிழ் எழுத்துக்கள:

சிந்து வெளி நாகரிக காலத்தில் தமிழ் மொழிக்கு உருவ எழுத்து வழக்கிலிருந்தது தமிழில் உள்ள தொன்மையான கல்வெட்டுக்கள் (கி.மு 3ம் நூற்றாண்டு) பிராஹ்மியில் அமைந்தவையே. சிந்து வெளி நாகரிகமே சித்திர எழுத்தைக் கண்டது என்பதால் அது முன்னைய திராவிட மொழிக்குரியதே என்ற கொள்கை மேலும் வலுப்படுகின்றது. இவ்வாறே ஏனைய கட்டுரைகளிலும் சில புதிய தகவல்கள் முன்வைக்கப்படுகின்றன. இக்கட்டுரைகள் வெளிப்படுத்தும் பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கோலங்களைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கட்டுரைகள் 1 முதல் 5 வரை .... வரலாறு

(ஆ) கட்டுரைகள் 6 முதல் 9 வரை .... கலைகள்

(இ) கட்டுரைகள் 10 முதல் 12 வரை ... சமயம்

இக்கட்டுரைகள் எழுதப்பட்ட முறையில் உள்ள சில சிறப்பம்சங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம் :-

(1) கட்டுரைகளில் முன்வைக்கப்படும் புதியசெய்திகளுக்கான சான்றாதாரங்களைத் தகுந்த முறையில் கோவைப்படுத்தியிருப்பது. இவற்றிலிருந்து தர்க்கரீதியான அனுமானங்களை (ஊகங்களை) வலுப் படுத்துவது, புராண, இதிகாசக் குறிப்புகளை மட்டுமல்லாது வரலாற் றாசிரியர்களின் கூற்றுக்களையும் சான்றாதாரங்களாகத் தந்திருப்பது

(2) சான்றாதாரங்களுக்காகத் தரப்படும் கூற்றுக்களை அடிக்குறிப்புகளில் விபரமாகக் கொடுத்திருப்பதுடன் தேவையானவிடத்து அக்கூற்றுக்களை முழுமையாகவே தந்திருப்பது. அடிக்குறிப்புகளைத் தகுந்த முறையில் விளக்கியிருப்பது.

(3) கட்டுரைகளை வாசிக்கும் எவரும் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில், குழப்பமில்லாமல், தெளிவான நடையில் அமைத்திருப்பது.

இவ்வகையில் இக்கட்டுரைகள், வரலாற்று மாணவர்களுக்கு மட்டுமல்லாது, ஆய்வாளர்களுக்கும் பயன்படக்கூடியவை. தென்கிழக்கு வரலாறு தொடர்பான புதிய ஒளி இக்கட்டுரைகளில் வெளிப்படுவதை எவரும் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

அன்பர் நவநாயகமூர்த்தி, ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இப்பணியில் ஈடுபட்டுள்ளார். அவர் தனது உள்ளுணர்வினாலும் உள்ளார்ந்த ஆற்றலினாலும், பல விடயங்களைத் தெரிந்து தெளிவு பெறுகின்றார். இதை அவர் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு செயற்படுகிறார் அவருடைய தேடல் சத்தியமானது. இது இறைவன் அவருக்குக் கொடுத்த அருட்கொடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகாலங்களில் மட்டக்களப்பு வரலாறு எழுதியபலர் கர்ணபரம்பரைக் கதைகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டனர். அன்பர் நவநாயகமூர்த்தி இக்கட்டுரைத் தொகுப்பின் மூலம் புதிய பாதையைக் காட்டுகிறார். புதிய பாதையில் நடை போடுகிறார்.புகழுக்காகவோ, பெயரக்காகவோ இதை அவர் செய்யவில்லை. மறைந்து போன.... மறைக்கப்பட்டுப் போன உண்மை வரலாற்றுத் தகவல்களை மக்கள் அறிய வேண்டும் என்ற சத்திய வேட்கையுடனேயே இதை அவர் செய்கின்றார்.

பல்கலைக் கழகப் பிரமுகர்களும், பட்டதாரிகளும் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்கான சில சட்டதிட்டங்களை சில வாய்ப்பாடுகளை அறிந்திருப்பர். அவற்றை அளவு கோலாக எடுத்துக் கொண்டு இக்கட்டுரைகளை அணுகினால், உண்மைகளைத் தரிசிக்க முடியாமல் போகலாம். அந்த அளவுகோல்களை ஒரு !பக்கம் வைத்துவிட்டு, திறந்த மனதுடன் இக்கட்டுரைகளை நோக்குவதன் மூலம், உண்மைகளைத் தரிசிக்க முடியும்.

சாதாரண வாசகர்களுக்கு இந்த அறிவுரை தேவையில்லை எப்போதும் திறந்த மனத்துடன் அவர்கள் இருப்பதால் இக்கட்டுரைகள் மூலம் நிச்சயம் அவர்கள் பயன் அடைவார்கள். வரலாற்று ஆய்வில் ஒரு திருப்பு முனையை அவர்கள் காண்பார்கள்.

இரா. நாகலிங்கம்

மட்டக்களப்பு (அன்புமணி)

1.11.96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவோர் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை எனப்பல்வேறு வடிவங்களில் தமது ஆக்க இலக்கியத் திறனை வெளிப்படுத்துகின்றனர்.

ஆனால் ஆய்வுக்கட்டுரை எழுதுவோருக்கு மேற்படி ஆக்க இலக்கியத் திறனுடன், நுண்ணறிவு, அவதானிப்பு, ஆய்வு நோக்கு ஒரு சட்டத்தரணியின் தர்க்கரீதியான பார்வை என்பனவும் தேவை. இவை எல்லாவற்றையும் விட உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற தவிப்பும், தாகமும், நீரில் மூழ்கும் ஒருவன் வெளியேவரத் துடிக்கும் தீவிரத்துடன் இருக்க வேண்டும். இவற்றுக்கும் மேலாக பொறுமையும் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், கடின உழைப்பும் இருக்க வேண்டும்.

இக்காரணங்களினாலேயே ஒரு ஆய்வுநூல் எழுதுவதற்குப் பல வருடங்கள் ஆகின்றன. ஆய்வுநூல் எழுதுவோர் இந்த உலகை மறந்து அவர்களுக்கு பழக்கமான வேறு ஒரு உலகிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆக, புனைகதைகளை எழுதுவதைவிட ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவது கடினமானது, கடும் உழைப்பின் பயனாய் சித்திப்பது என்பதை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

வரலாற்று ஆய்வு நூலாசிரியர்கள் பலர் நமக்கு பரிச்சயமானவர்கள்,தென்னிந்தியாவின், கே. ஏ. நீலகண்டசாஸ்திரி, ரி.வி. சதாசிவப்பண்டாரத்தார், மா. இராசமாணிக்கனார், எஸ். சேதுராமன் போன்றவர்களை நாம் நன்கு அறிவோம். ஆனால் இவர்களின் நூல்கள் பெரிதும் இந்திய வரலாறு பற்றி அறிந்து கொள்ள நமக்கு உதவுகின்றன.

இவ்வாறே இலங்கையில் எஸ். பரணவிதான, அமரதாச லியனகமகே, ஜி.சி. மெண்டிஸ், போன்ற சிங்கள வரலாற்று ஆசிரியர்களும்,பாதர் குவேரோஸ், H. W. கொட்டிங்ரன் வில்ஹாம், போன்ற பல ஆங்கில வரலாற்று ஆசிரியர்களும் இலங்கை வரலாறு பற்றிய நூல்களை எழுதியிருக்கின்றனர். இவற்றிலிருந்து இலங்கையின் சிங்கள வரலாறுபற்றியே பெரிதும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் சிலரும் வரலாற்று ஆய்வு நூல்களை எழுதியுள்ளனர். பேராசிரியர் எஸ். பத்மநாதன், கலாநிதி இந்திரபாலா கலாநிதி எஸ். குணசேகரம், கலாநிதி சி. க. சிற்றம்பலம், டி. புஷ்பரெத்தினம், ரகுபதி, போன்றோர் பயனுள்ள பல வரலாற்று நூல்களை எழுதியுள்ளனர்.

இந்த நூல்களில், யாழ்ப்பாண வரலாறு பற்றியே அதிகம் பேசப் படுகிறது. கிழக்கிலங்கை வரலாறு பற்றி ஆங்காங்கே சில **Passing remarks** மட்டுமே காணமுடிகிறது. எனவே இவர்களது நூல்களிலிருந்தும் கிழக்கு இலங்கை பற்றிய பூரணமான வரலாற்றுத்தகவல்களை அறிந்து கொள்ள முடிவதில்லை.

கிழக்கிலங்கை வரலாறு தொடர்பான நூல்களை எழுதப் புகுந்த சிலர் (இவர்கள் வரலாற்றாசிரியர்கள் அல்லர்) கர்ணபரம்பரைக் கதைகளையும், புராண, இதிகாச குறிப்புகளையும் ஆதாரமாகக் கொண்டு அவற்றை எழுதினர். அதனால் அவையும் பூரணத்துவமான வரலாற்றுச் சான்றாதாரங்களைக் கொண்ட நூல்களாக அமையவில்லை.

இந்தப் பின்னணியில் தான் நாம் திரு. நா. நவநாயக மூர்த்தியின் ஆய்வுக் கட்டுரைகளை நோக்க வேண்டும்.

"பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்" என்ற தலைப்பில் வெளிவரும் இந்நூலில் 12 ஆய்வுக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவற்றை ஒட்டுமொத்தமாகப் படித்து முடித்ததும் நமக்கு ஏற்படும் மனப்பதிவு இதுதான்-

அ). தென்கிழக்கிழங்கையின் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை மக்கள் முன் வைக்க வேண்டும் என்ற துடிப்பு.

ஆ). பண்டைத் தமிழர்களின் வரலாற்றுத் தொன்மை, பண்பாட்டுப் பாரம்பரியங்கள் என்பவற்றின் சிறப்பை இன்றைய தமிழ் மக்கள் உணர வேண்டும் என்ற இதய தாபம்.

இ). தென்கிழக்கிழங்கையில் விரவிக் கிடக்கும் இடிபாடுகளையும் வரலாற்று எச்சங்களையும் முறையாக ஆய்வு செய்யும் வாய்ப்பு இல்லையே என்ற ஆதங்கம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சத்தியவேட்கையுடன் இக்கட்டுரைகள் அமைந்திருப்பதால், கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் ஆதாரபூர்வமான தகவல்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன.

அன்பர் நா. நவநாயகமூர்த்தி பட்டதாரியாக இல்லாமல் இருக்கலாம், பல்கலைக்கழகத் தொடர்பு அற்றவராக இருக்கலாம் பயனுள்ள பெரும் நூல்நிலையங்களை அணுகும் வாய்ப்பு இல்லாதவராக இருக்கலாம். அதுவல்ல நாம் பார்க்கவேண்டியது.

அவர் கட்டுரைகளில் வெளியிடும் வரலாற்றுத் தகவல்கள் ஆதார பூர்வமானவையா? தர்க்கரீதியானவையா? ஏற்றுக்கொள்ளக்கூடியவையா என்பதையே நாம் பார்க்க வேண்டும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

இன்னும் சொல்லப்போனால், மேற்படி இடர்பாடுகளுடன், வசதிக்குறைவுகளுடன் திரு. நவநாயகமூர்த்தி, பல்வேறு வரலாற்றுச் சான்றுகளைத் தேடித் தனது கட்டுரைகளை எழுதியிருப்பது இன்னும் வியப்படைய வேண்டிய செய்தி.

இவ்வகையில் பார்க்கும் போது திரு. நவநாயகமூர்த்தி இக் கட்டுரைகளை எழுதியுள்ள முறையும் அவற்றுக்கு ஆதாரமாகச் சமர்ப்பித்துள்ள சான்றாதாரங்களும், நம் கவனத்தை பெரிதும் ஈர்க்கின்றன. வரலாறு தொடர்பான முதல் 5கட்டுரைகளும் மிகுந்த பிரயாசையுடன் எழுதப்பட்டிருப்பதை நம்மால் அவதானிக்க முடிகிறது.

தென்னிலங்கை தொடர்பாக தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டு டாக்டர். எஸ். பரணவிதான அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட பல பிரஹ்மிக் கல் வெட்டுக்கள் Inscriptions of Ceylon(Vol1)...... என்ற பாரிய நூலில் இடம் பெறுகின்றன. இவற்றுள் கதிர்காமக் கல் வெட்டு தென்னிலங்கையில் ஒரு காலத்தில் தமிழர் ஆட்சி பரவியிருந்ததை வெளிப்படுத்துகின்றது. அதை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இப்போதும், அக்கரைப்பற்று, சங்கமன்கண்டி, உகந்தை, தீகவாபி, திருக்கோவில் முதலிய இடங்களில் பழைய இடிபாடுகளும், வரலாற்றுச் சின்னங்களும் நிறைந்து கிடக்கின்றன. இவை முறையாக ஆய்வு செய்யப்படவில்லை. 'மொட்டைய கல்' போன்ற கல் வெட்டுக்கள் இன்னும் விரிவாக ஆராயப் படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாரை மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களமும் தொல் பொருட்காட்சிச் சாலையும் ஒரு சில வரலாற்றுச் சின்னங்களை மட்டுமே கண்டுபிடித்து காட்சிக்கு வைத்துள்ளன. இவையும் பௌத்த வரலாறு தொடர்பானவையாக மட்டுமே காணப்படுகின்றன.

முறையான நடுநிலையான, மேலாய்வு, அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே இப்பகுதியின் உண்மையான வரலாற்றுத் தகவல்களை வெளிக் கொணர முடியும். இன்றுள்ள சூழ்நிலையில் என்றுமே அதற்கான வாய்ப்பு கிடைக்கும் சாத்தியம் இல்லை.

ஆனாலும் திரு.நவநாயகமூர்த்தி அவர்கள் பலவருடங்களாகத் தான் சேகரித்த சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு தனது கட்டுரைகளை எழுதியுள்ளார். இதுமிகவும் பாராட்டத்தக்கது. இவருடைய முந்திய கட்டுரைகளைவிட (தொல்லில் சிந்தனைகள் நூல்) இக்கட்டுரைகள் வரலாற்று விழிப்புணர்வும் வரலாற்று அணுகுமுறையும் கொண்டவையாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

இக்கட்டுரைகள் அவர்தனது வரலாற்று ஆய்வில் ஒருபடி முன்னேறியிருக்கிறார் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. அவை அவரது கடின உழைப்புக்கும் தீவிர முயற்சிக்கும் சான்றாய் அமைகின்றன. இக்கட்டுரைகள் உண்மையிலேயே தென்கிழக்கிலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இந்நூலைத் தொடர்ந்து இவ்வரலாறு தொடர்பாக மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டும் வரலாற்று ஆர்வலர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும் இந்நூலில் இடம் பெறும் தமிழர்கலைகள் சமயம் தொடர்பான கட்டுரைகளும் பயனுள்ளவையே என்பதில் சந்தேகம் இல்லை. வாசக அன்பர்கள் இந்நூலுக்குக் கொடுக்கும் ஆதரவு அவரை இத்துறையில் மேலும் ஊக்குவிக்கும் என்பது நிச்சயம்

க. தங்கேஸ்வரி B.A.(தொல்) சிறப்பு

மட்டக்களப்பு 3. 11. 96.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

நமது முன்னோர்கள் போற்றி வந்த கலைகள், பண்பாடு, சமயகலாச்சார மரபுகள்(விழுமியங்கள்) என்பன சமகால நிகழ்வுகள் காரணமாக, எம்மிடையே அருகி வருகின்றன. இவற்றை மங்கவிடாது பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். குறிப்பாக, இன்றைய இளம் சந்ததியினரின் இதயங்களில் இவற்றைப் பதிவு செய்வதன் வாயிலாகவே, இவற்றைப் பாதுகாக்க முடியும் என்பது எனது பணிவான கருத்தாகும்.

இதனை இலக்காகக் கொண்டே எனது ஆக்கங்கள் அமைந்துள்ளன. இதனை வாசகர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள் தமிழரது பண்டைய வரலாற்றுச் செய்திகளும் இதில் அடங்கும். ஆதலால் ஒவ்வொரு ஆக்கமும்,(கட்டுரைகள்) எனது உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடுகள் என்றால் மிகையாகாது. இதனை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் உள நிறைவு பெறுகின்றேன். எனது ஆக்கங்கள் யாவும் நமது தமிழ் சமூகத்துக்குப் பயனளிக்குமெனில் எனது ஆத்மா திருப்தியுறும் என்பதில் ஐயமில்லை.

எனது 'தமிழரும் முருக வழிபாடும்' தொல்லியல் சிந்தனைகள் ஆகிய நூல்களைத் தொடர்ந்து அச்சுவடிவில் வெளிவரும் மூன்றாவது நூல் இதுவாகும். இதில் வீரகேசரி, தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் திருஒளி சஞ்சிகையிலும் பிரசுரமான பன்னிரண்டு கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவற்றைத் தேர்ந்தெடுத்து இக்கட்டுரைத் தொகுதிக்கு "பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள்" என்ற பெயரிட்டு நூல் வடிவில் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளில் தவறுகள் இருப்பின் தமிழறிஞர்கள் பெருமனதுடன் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொள்வதுடன் அவை தொடர்பான கருத்துக்கள், குறிப்புகள் என்பனவற்றைத் தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். இவை எதிர் காலத்தில் எனக்குப் பெரும் பயனளிக்குமென்பதில் ஐயமில்லை.

நன்றி!

***"வானதி பவனம்"*** ***நா. நவநாயகமூர்த்தி***

*பனங்காடு*
*அக்கரைப்பற்று*
*15. 12. 1996*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்குரியவர்கள்

1. இந்நூலில் அடங்கியுள்ள பன்னிரண்டு கட்டுரைகளையும் தேர்ந்தெடுத்து இக்கட்டுரைத் தொகுதிக்கு, "பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கோலங்கள், என்று பெயரிடுமாறு, ஆலோசனையும் கூறி நூலுக்கு அணிந்துரையும் வழங்கிய எனது அன்புக்குரிய, திரு. இரா நாகலிங்கம் (அன்புமணி) ஐயா அவர்கள்.

2. இந்நூலுக்கு சீரிய முறையில் சிறப்புரை வழங்கிய அன்புச் சகோதரி செல்வி க. தங்கேஸ்வரி (பீ.ஏ. தொல்லியல் சிறப்பு. மட்டக்களப்பு மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர்) அவர்கள்.

3. எனது எழுத்துப்பணிக்கு உறுதுணையாக விருந்து ஆதரவு நல்கிவரும் வீரகேசரி, தினகரன் ஆகிய நாளிதழ்கள் குறிப்பாக, இவற்றில் பணியாற்றிவரும் திரு.பொன். இராஜகோபால் (வீரகேசரி) ஐயா, திரு:ஆர்.இராஜலிங்கம் (வீரகேசரி) ஐயா, திரு.எஸ் ஜோன்ராஜன் (தினகரன்) ஐயா ஆகியோர்.

4. இந்நூலினை வெளியிடுவதற்கு பல வகையில் உதவியவரும் அச்சுப்பிரதியை ஒப்புநோக்கித் தந்தவருமான எனது அன்புக்குரிய திரு.மா.லோகநாதன் (ஆசிரிய ஆலோசகர்) அவர்கள்.

5. எனது கட்டுரைகளை அவ்வப்போது கையெழுத்துப் பிரதி பண்ணித்தந்துதவும். மைத்துனர், திரு.ஆர். டபிள்யூ. கமலராஜன் (இலிகிதர். அ.ப.தெ.ப.நோ.கூ.சங்கம்) அவர்கள்.

6. "மறைந்த நகரம்" "தமிழ் பழமையும் புதுமையும்" போன்ற பழந்தமிழ் நூல்களை தேடித்தந்துதவிய செல்வி, செ.கிரிஜா அவர்கள்.

7. ஆதரவும்,ஊக்கமும் அளித்து வரும் எனது காரியாலய பொது முகாமையாளர், திரு.கே.எஸ். பஞ்சாட்சரம். சக ஊழியர்கள் ஆகியோர்.

8. இந்நூலுக்கு பொருத்தமான முறையில் அட்டை தயாரித்து வழங்கிய தம்பி, திரு.நா.அருட்செல்வன் (அருள்) அவர்கள்.

9. இந்நூலினை அழகானமுறையில் அச்சிட்டுத்தந்த அக்கரைப்பற்று செலக்ஷன் அச்சக உரிமையாளர் அவர்கள்.

10. எனது எழுத்துப் பணிக்கு ஆதரவும் ஊக்கமும் தந்துவரும் எனது அன்புக்குரிய வாசகர்களாகிய நீங்கள்.

15 - 12 - 1996. நா. நவநாயகமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு நகரம் தோன்றிய காலம்.

மீன்பாடும் தேனாடு என்று புகழ்ந்துரைக்கப்படுவது பண்டைய மட்டக்களப்பு மாவட்டமாகும். வடக்கே வெருகல் தொடக்கம், தெற்கே குமுக்கன் ஆறுவரையுள்ள இப்பிரதேசம் தென்கிழக்கிலங்கை என்று குறிக்கப்படுகின்றது, பண்டைய இலங்கையின், நாகரீகம் நிலவியிருந்த இப்பிரதேசம், இயற்கை வளங்கள் நிறைந்த அழகிய பிரதேசமாகும். இப்பிரதேசத்திற்கு எழில் ஊட்டுவதாக அமைந்துள்ளது மட்டக்களப்பு வாவியாகும். இவ்வாவி தென்திசை நோக்கிப் பரந்திருக்கின்றது. இவ்வழகிய வாவியின் தென்திசை முனைக்கப்பாலுள்ள நிலப்பரப்பிலேயே இற்றைக்குச் சுமார் இரண்டாயிரத்தி இருநூறு வருடங்களுக்கு முன், மட்டக்களப்பு நகரம் உருவானது. இதனை வரலாற்றாய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தென்கிழக்கிலங்கையில் தமிழருக்கெனத்தனியரசொன்றை (இராசதானி) அமைத்தவன் கூத்திகன் என்ற தமிழ் மன்னனாவான். இம்மன்னனே மட்டக்களப்பு என்ற நகரையும் நிர்மாணித்து, இந்நகரைச் சேர்ந்த பகுதிகளில் தமிழ்க்குடிகளையும் பெருமளவில் குடியேற்றினான், செழிப்பும், வனப்பும், பொருந்திய தென்கிழக்கிலங்கையை அபிவிருத்தி செய்தவனும் இவனேயாவான். [1] கூத்திகனும், இவனது சகோதரனுமான சேனன் என்பவனும், அனுரதபுரியைத் தலை நகராகக் கொண்டு இலங்கையில் கி.மு. 237 -215 வரை ஆட்சிபுரிந்தனர். இதனை எச்.டபிள்யு. கொடிறின்றன் எ( னும் வரலாற்றாசிரியர் உறுதி செய்கின்றார்.[2]

இம்மன்னர்களைப் பற்றி மகாவம்சம் என்னும் பௌத்த வரலாற்று நூல் தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் என்னும் சகோதரர்கள் பெரும்படையுடன் வந்து அப்போது அனுரதபுரியில் ஆட்சிபுரிந்த சூரத்தீசன் என்னும் மன்னனை வெற்றி கொண்டு இருவருமாக இருபத்திரண்டு வருடங்கள் நல்லாட்சி செய்தனர் என்று கூறுகின்றது [3] இதனை, தீபவம்சம் என்ற வரலாற்று நூலும் உறுதி செய்கின்றது. [4] இத்தமிழ் மன்னர்கள் இலங்கை முழுவதையும் இருபத்திரண்டு வருடங்கள் ஆட்சிபுரிந்ததைப் பேராசிரியர் பரணவிதான அவர்களும் உறுதிசெய்கின்றார். [5]

இம்மன்னர்களது ஆட்சிக்காலத்தில் இலங்கையில் தமிழர்கள் பெருமளவில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் வடஇலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் குடியமர்ந்தனர். திராவிடரான இவர்களது பேச்சு மொழியாகத் தமிழ் மொழி இருந்தபோதும் எழுத்து வரிவடிவாகத் தமிழ்ப் பிராமி பயன்படுத்தப்பட்டது. இதனை ஆய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது. [6] இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில், குமுக்கன் ஆறு தொடக்கம் சாகாமம் வரையுள்ள பிரதேசத்தில் தமிழர்கள் பரவலாக வாழ்ந்து வந்தனர். இதனை குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மீன் இலச்சினை பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் (கி.மு. 3ம் நூ) உறுதி செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிராமிச்சாசனங்கள் பதினைந்தும் பேராசிரியர் பரணவிதான அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவைகளாகும். இதேகாலத்தைச் சேர்ந்த பிராமிச்சாசனங்கள் அம்பாந்தோட்டை, மொனராகலை, ஆகிய மாவட்டங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சாசனம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் கதிர்காமப் பகுதியிலிருந்த பாண்டியர் கூட்டாட்சி பற்றிக் குறிப்பிடுகின்றது. இச்சாசனங்களும் பேராசிரியர் பரணவிதான அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டவைகளாகும். இச்சாசனங்களின் வாயிலாக கி.மு. 3ம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் தொடர்ச்சியாக இம்மாவட்டங்களில் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனரென்பதும் கதிர்காமம் இவர்களது பிரதான வழிபாட்டுத்தலமாக விளங்கி வந்துள்ளதும் தெளிவாகின்றது.'

இதற்கு முந்திய காலத்தில் காடடர்ந்த பிரதேசமாகவிருந்த தென்கிழக்கிலங்கையின் சில இடங்களில் இந்தியாவிலிருந்து வந்து திராவிடமக்கள் பெருமளவில் குடியேறி வாழ்ந்து வந்தனர் இவர்கள் விவசாயம் , மீன் பிடித்தல், ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். இவர்களில் சிலர் ஒரு சமயம் வாவியில் ஓடம் செலுத்திச் சென்றனர். அவ்வேளையில் வாவியின் தென்திசைக்கப்பால் ஓடம் செல்லவழியில்லாததால் அக்களப்பானது அதுவரையுந்தான் என்பதையறிந்து இதுமட்டும் மட்டடா, மட்டக்களப்படா எனக்கூறி அந்த இடத்திற்கு மட்டக்களப்பு என்று பெயரிட்டனர். ஆகவே வாவியின் தென்பகுதிக் களப்பே முதன் முதலாக மட்டக்களப்பு என்ற பெயரைப் பெற்றது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ் மன்னனான, கூத்திகன் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் தென்கிழக்குப்பகுதியில் நகர்வலம் செய்வதற்காக சிங்காசன மண்டபம் ஒன்றை நிர்மாணித்ததுடன், அதனருகில் அழகியதொரு பூஞ்சோலையையும் உருவாக்கினான். இப்பூஞ்சோலைக்கு சிங்காரத்தோப்பு என்று பெயரிடப்பட்டது. இம்மன்னன் அடிக்கடி அனுராதபுரியிலிருந்து இங்கு வந்து தங்கியிருந்து வேட்டையாடி மகிழ்ந்தான். இச்சிங்காரத் தோப்பானது கூத்திகனது பொழுதுபோக்கு வாசஸ்தலமாகவே விளங்கியது. மேலும் இம்மன்னன் சிங்காரத் தோப்புக்கு அருகிலிருந்த இடங்களையெல்லாம் அபிவிருத்தி செய்து குடியிருப்புக்கள் பலவற்றை உருவாக்கி மக்களைக்குடியேற்றினான்.

இதன் பின்னர் இம்மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் சிங்காரத் தோப்புக்கு மேற்கிலிருந்த வாவியின் தென்பகுதியான மட்டக்களப்பை அருகில் மண், கல், மேடாகவிருந்த பகுதியிலிருந்து மண், கல், வெட்டி எடுத்து மூடுவித்தான். பின்னர் அந்த இடப்பரப்பில் அழகிய அரசமாளிகையொன்றை நிர்மாணித்து தனது படைப்பிரிவொன்றைக் களப்பு முனையில் காவலுக்கு வைத்தான். அத்துடன் அப்பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகள் பலவற்றையும் அமைத்தான். காவல் அரண் அமைந்திருந்த களப்பு முனை, வீரர்முனை என்ற பெயரினைப் பெற்றது கூத்திகன் தனது அரசமாளிகை அமைந்திருக்கும் பகுதிக்கு மட்டக்களப்பு என்ற பெயரைச் சூட்டினான்.

இதே போன்று வாவியின் தென் பகுதியான களப்புமுனையை நிரப்பிமூடுவதற்கு மண், கல், எடுத்த மேட்டுப்பகுதிக்கு "மண்கல் புட்டி" என்ற பெயரை இட்ட இம்மன்னன் அந்த இடத்தை இராசதானியாக்கி தனது உறவினர்களை (தமிழர்) அப்பகுதியில் குடியேற்றினான். இவ்வாறு, அக்காலத்திலேயே (கி.மு. மூன்றாம் நூற்) தமிழருக்கென தென் கிழக்கிலங்கையில் இராசதானியொன்றை உருவாக்கியவன் அனுரதபுரியிலிருந்து இலங்கையை ஆட்சிபுரிந்த தமிழ் மன்னனான கூத்திகனேயாவான். அக்காலத்தில், மட்டக்களப்பு இராசதானி அமைந்திருந்த இடம் இன்றைய வீரமுனைக்கும், மலுக்கம்பிட்டிக்கும் அருகாய் அமைந்திருந்தது. தமிழ்ச்சைவனான, கூத்திகன் தென்கிழக்கிலங்கையில் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டிப்பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தான்.

தமிழ் மன்னனான இவனது ஆட்சிக் காலத்தில் தென் கிழக்கிலங்கையில் இராசநூல், உலகநூல், என்பன வழக்கில் இருந்தன. இவனால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரமும் இந்நகரைச் சேர்ந்த பகுதிகளும் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையும் சிறப்புடன் விளங்கியமைக்குத் தொல்லியல் சான்றுகள் உண்டு.[8] கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையை சேனன், கூத்திகன் ஆகிய தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் (கி.மு.237-217) மன்னன் கூத்திகனால் நிர்மாணிக்கப்பட்ட 'மட்டக்களப்பு நகரம்' கி.மு.முதலாம் நூற்றாண்டில் துட்டகாமினியின் ஆட்சிக்காலத்தில் தனது பொலிவை இழந்திருந்தது. இதன் பின்னர் மீண்டும் இந்நகரம், சோரநாகன் என்னும் அரசனின் காலத்தில் தென்கிழக்கிலங்கை அரசியலில் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. அனுரதபுரி மன்னனான சோரநாகனின் ஆட்சிக்காலம் தொடங்கி மட்டக்களப்பு நகரைத் தலைநகராகக் கொண்டு தமிழ்ச்சிற்றரசர்கள் இப்பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்தனர்.

கி.பி ஆறு, ஏழு, எட்டாம், நூற்றாண்டுகளில் இலங்கை உள்நாட்டுப் போர்களாலும், அரசியல் நெருக்கடிகளினாலும் அல்லல் பட்டிருந்தது. இதனை வரலாற்று நூல்கள் தெளிவுறுத்துகின்றன.[9] இக்கால கட்டத்தில் 'மட்டக்களப்பு நகரமும்' இந்நகரைச் சேர்ந்த பகுதிகளும் செழிப்புற்றிருந்தன. கி.பி. எட்டாம், ஒன்பதாம், நூற்றாண்டுகளில் இலங்கை பாண்டிய நாட்டுடன் நெருங்கிய அரசியல், சமய, கலாசாரத் தொடர்புகள் கொண்டிருந்தது. இக்காலத்தில் இந்நகரத்திற்கும் பாண்டிய நாட்டுக்கும் இடையில் நெருங்கிய சமய, கலாசாரத் தொடர்புகள் இருந்து வந்ததும் வரலாற்றுண்மையாகும், கி.பி. பத்தாம், பதினோராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுகளில் இலங்கையில் சோழரது ஆட்சி நிலவியிருந்த வேளையிலும் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் மாகன் என்னும் கலிங்கமன்னன் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்திலும் தென்கிழக்கிலங்கையில். முக்கிய நகரங்களிலொன்றாக இப்பண்டைய மட்டக்களப்பு நகரம் விளங்கியது கி.பி 15ம் நூற்றாண்டு வரையும் (கி.பி. 1455)இந்நிலை நீடித்திருந்ததெனலாம்.

கி.பி 14ம் நூற்றாண்டளவில் வடஇலங்கையில் செயவீரசிங்கம் என்னும் தமிழ் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான் (கி.பி. 1370 - 1417) இவனது சிங்காசனப் பெயர் செகராசசேகரனாகும். இவன் இயற்றிய கண்ணகி வழக்குரை என்ற காவியத்தில் (துரியோட்டு காதை: 151ம் பாடல்) இப்பண்டைய மட்டக்களப்பு நகரைப்பற்றிய குறிப்புக்கள் உண்டு .இதேபோன்று, வீரமுனைச் செப்பேடு சீர்பாத வரன்முறைச் செப்பேடு என்பனவும் இந்நகரினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. கி.பி பதினாறாம் நூற்றாண்டு ஒல்லாந்தர் காலம் வரையும் வாவியின் தென் எல்லைப்பகுதியே மட்டக்களப்பு என்ற பெயரினைப் பெற்றிருந்தது. ஒல்லாந்தர் கிழக்கிலங்கையைக் கைப்பற்றி, கோட்டையொன்று கட்டுவதற்கு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் கோட்டையொன்றை நிர்மாணித்தனர். அன்று தொடக்கம் வாவியின் வடபகுதி மட்டக்களப்பு என்ற பெயரைப்பெற்றது.

சுமார் பதினெட்டு நூற்றாண்டு காலமாக தென்கிழக்கிலங்கையில் சிறப்புடன் விளங்கிய பண்டைய மட்டக்களப்பின் பெருமைகள் கால வெள்ளத்தால் மறைந்து போயுள்ளன. ஆயினும் தென்கிழக் கிலங்கையில் பல நூற்றாண்டுகளாக உயர்ந்து நிற்கும் பண்டைய சைவ ஆலயங்கள் உள்ளவரை, தென்கிழக்கிலங்கை தமிழர்களின் இதயங்களில் நிலைத்திருக்கு மென்பதில் ஐயமில்லை. காரணம் இவ்வாலயங்களின் வரலாற்றுடன் இப்பண்டைய நகரின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளதேயாகும். இத்துணை சிறப்புக்கள் பொருந்திய பண்டைய மட்டக்களப்பு பற்றி இலங்கை வரலாற்று நூல்கள் மௌனம் சாதித்துள்ளமை வியப்புக்குரியதேயாகும்.

## வரலாற்றுத்தடயங்கள்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மன்னன் கூத்திகனது காலத்தில், சிங்காசன மண்டபம் அமைந்திருந்த பகுதியானது பிற்காலத்தில் சிங்காரபுரம் என்ற பெயரினைப் பெற்று இன்று அட்டப்பள்ளம் என்ற கிராமமாக விளங்குகின்றது. இங்கு மிகப்பழமை வாய்ந்த மாரியம்மன் ஆலயமொன்று உண்டு. இவ்வாலயம் மட்டும் சிங்காரபுரமாரியம்மன் ஆலயம் என இன்றும் அழைக்கப்படுகின்றது. அக்காலத்தில் அழகிய பூங்காவிருந்த சிங்காரத்தோப்பு என்ற பகுதி சிங்காரத்தோப்பு (சிங்காரவத்தை) என்ற பெயரால் இன்றும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் மண்கல்புட்டி என அழைக்கப்பட்ட பகுதி மண்கற்புட்டி எனமாறி இன்று மலுக்கம்பிட்டி எனப் பெயர் வழங்குகின்றது.

இதேபோன்று, காவல் அரண் அமைந்திருந்த களப்புமுனையான 'வீரர் முனை' இன்று வீரமுனை என்ற தமிழ்க்கிராமமாகக் காட்சியளிக்கின்றது. இக்கிராமத்தைச் சேர்ந்த 'நாவற்காடு' என்னுமிடத்தில் வீடுகட்டுவதற்காக அண்மையில் அத்திவராமொன்று வெட்டியபொழுது ஐம்பொன்னிலான சுமார் ஒரு அடி உயரமான பிள்ளையார் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. பழமை வாய்ந்த(கி.பி 8,9ம், நூற்) இப்பிள்ளையார் சிலை, இன்று வீரமுனைப்பிள்ளையார் ஆலயத்தில் உள்ளது. மற்றும் இக்கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம், கண்ணகி ஆலயம் என்பனவும் இப்பகுதியின் தொன்மைச் சிறப்புக்குச்சான்றுகளாகும். சில வருடங்களுக்கு முன்னர் சம்மாந்துறைக்கு அண்மையிலுள்ள 'கைகாட்டி' என்னும் மலைப்பகுதியில் பண்டைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில், மட்டக்களப்பு இராசதானியை ஆட்சிபுரிந்த ஒரு தமிழ்மன்னனின் மாளிகை அமைந்திருந்த இடம் பிற்காலத்தில் காடாக மாறியபொழுது, அந்த இடம் மாளிகைக்காடு எனப் பெயர் பெற்றது. இன்றும் இப்பகுதி மாளிகைக்காடு என அழைக்கப்படுகின்றது. திகவாபி என்னும் நகரை உருவாக்கியவன் துட்டகாமினியின் சகோதரனான சதாதீசன் என்பவனாவான். இவன் 'திகவாபி' விகாரத்தையும் சேதியத்துடன் கட்டினான். இதனை மகாவம்சம் என்னும் பௌத்தவரலாற்று நூலின் வாயிலாக அறியமுடிகின்றது.

சதாதீசன் திகவாபியில் வாழ்ந்த காலத்தில் இந்நகரைச் சூழவுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்களேயாவர். இவர்களில் பௌத்த தமிழர்களும் அடங்குவர். இதனை வரலாற்றாய்வுகள் மூலமாக அறிய முடிகின்றது. பண்டைய மட்டக்களப்பு நகரப் பகுதியானது தற்காலத்தில் திகவாபி எனக்குறிப்பிடப்படும் இடத்திற்குச் சற்றுத் தொலைவிலேயே அமைந்திருந்தது. ஆதலால் திகவாபியும், இதனைச் சேர்ந்த பகுதிகளும், மன்னன் கூத்திகனது காலத்தில் அவனது மட்டக்களப்பு இராசதானியைச் சேர்ந்த பகுதியாக இருந்துள்ளதென்பது தெளிவாகின்றது. இப்பகுதிகளில் அக்காலத்தில் வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்களேயாவர்.

* 27-08-95, தினகரன் வாரமலரில் பிரசுரமான கட்டுரையின் விரிவாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்:

1. மட்டக்களப்பு மான்மியம்-பக், 19,20, பதிப்பாசிரியர், எப்.எக்ஸி. நடராசா-1952.
2. இலங்கையின் சுருக்க வரலாறு-பக்,13 எச்.டபிள்யு. கொடிறின்றன்-1960.
3. மகாவம்சம்-பக், 142,143, கைகர்-பதிப்பு-1986.

4. சேனன், கூத்திகன், போன்ற தமிழ்ப் பெயர்களை நாம் பாளிநூல்களிலிருந்து மேற்கோள் காண்பிக்க முடியும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்.(கி.மு. 237-215) அனுரதபுரியில் சேனன், கூத்திகன் என்ற இருசேரநாட்டுத் தமிழர்கள் ஆட்சி புரிந்தனர்.(தீபவம்சம்-அத்தியாயம் 18:47)

5. Aconcise history of ceylon-page:54. **C.W.Nicholas and S.Paranavidana-Col-1961.**
6. Aconcise history of ceylon- page: 55-58. **C.W.Nicholas, and S.Paranavidana. Col-1961.**
7. தமிழர் சமய வரலாறு-பக். 225,226 டாக்டர். ஆ.வேலுப்பிள்ளை - 1980.

8. முதலாம் புவனேகபாகு காலத்தில் (1273 - 1284) பாண்டியர். இலங்கையைக் கைப்பற்றி தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். கி.பி. 1310ம் ஆண்டு வரையும் பாண்டியர் இலங்கையை ஆட்சிபுரிந்தனர். (நம்முன்னோரளித்த அருஞ்செல்வம், பக் 149,150,151, ஜி.சி மெண்டிஸ். - 1954) இக்காலத்தில் பாண்டியரது செல்வாக்கு தென்கிழக்கிலங்கையில் நிலவியிருந்தது. பாண்டிய நாட்டுக் குடிகள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர். இந்து மதம் வளர்ச்சியுற்றது. மட்டக்களப்பு நகருக்கும், பாண்டிய நாட்டு மதுரைக்குமிடையே நெருங்கிய சமூக, சமய, கலாச்சாரத் தொடர்புகள் இருந்து வந்தன. இக்காலத்தில் திருக்கோவில்துறை (கந்தப்பாணந்துறை) இப்பிரதேசத்தின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. இவற்றை வரலாற்று ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன.

9. இந்திய வரலாறு - பக்,463,464, ஆர்.சத்தியநாதய்யர், வரலாற்றுத்துறை விரிவுரையாளர். டி.பாலசுப்பிரமணியம் - 1958.

10. மகாவம்சம் - தமிழாக்கம், (அத்தியாயம் :33) பக் :347,348. எஸ்.சங்கரன் மல்லிகை பதிப்பகம் சென்னை-17 பதிப்பு - 1962.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கமன் கண்டி நகரம்

கண்டி என்றதும் நமது நினைவில் வருவது இலங்கையின் எழில்மிகு நகரங்களில் ஒன்றாக விளங்கும் கண்டி நகரமாகும். ஆனால் பண்டைக்காலத்தில் கண்டி என்ற தமிழ்ச் சொல் ஒரு அரசியல் (ஆட்சி) பிரிவில் அமைந்திருந்த தலை நகரத்தை குறிப்பதற்கே பயன்பட்டு வந்தது. கண்டி என்றால் தலை நகர் என்று பொருள்படும். இதனைப்பழைய சாசனங்கள் வாயிலாக நாம் அறிய முடிகின்றது. சாசனங்கள் என்று நாம் குறிப்பிடும் பொழுது செப்பேடுகள், கல்வெட்டுக்கள் என்பன இதில் அடங்கும். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரை கல்வெட்டுக்கள் என்று குறிப்பிடும் பொழுது அது கல்லில் செதுக்கப்பட்ட எழுத்துக்களுடன் செப்புத்தகடுகளில் எழுதப்பட்ட எழுத்துக்களையும் குறிக்கும்.

இவ்வாறான செப்பேடுகள் (சாசனங்கள்) கிழக்கிலங்கையில் உள்ள பண்டைய சைவாலயங்களில் சேமிக்கப்பட்டுள்ளன. இவற்றில், வீரமுனை சித்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம், துறைநீலாவணைக்கோவில் போன்ற சைவாலயங்களிலுள்ள செப்பேடுகள் சிலவற்றில் கண்டி என்ற சொல் ஒரு ஆட்சிப்பிரிவின் தலை நகரத்தை குறிப்பதற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. மேலும் இச்செப்பேடுகளில் குறிப்பிடப்படும் சம்பவங்கள்(இலங்கை) வரலாற்றுடன் தொடர்புடையதாகவுள்ளன.

வீரமுனைப் பிள்ளையார் ஆலயத்திலுள்ள ஒரு செப்பேட்டில் பதினேழு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் ஒரு பாடலில் 'கண்டி' என்ற சொல் கி.பி. 795ல் யாழ்பாண அரசின் தலைநகராக விளங்கிய கதிரமலையைக் குறிக்கின்றது. இதனை

1. கலிங்க தேசத்தின் கண்ணின் மணியாய்,
இலங்கப் பிறந்திடும் இராசாதி இராசனாம்
உக்கிரசிங்கனின் உறைவிடம் கண்டி
மிக்க புகழ் நின்ற விற்பன கன்னிகை
மாருதப் புரவீக வல்லி என்பாளை
பேருற மணந்து பெற்றிடு மகனாம்.
(1ம்பாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வாலசிங்கனென வலிவுறு சிங்கம்
வேல்விழி மாடவர் விரும்பிடு சிங்கம்

(2ம் பாடல் 1,2, வரிகள்)

என்ற செப்பேட்டுப் பாடல் வரிகள் மூலமாக அறிய முடிகின்றது. அக்காலத்தில் கதிரமலை என வழங்கிய இடம் இன்று கந்தரோடை என வழங்குகின்றது.

இச்செப்பேடுகளில் குறிப்பிடப்படும் மன்னர்களில் உக்கிரசிங்கன் என்பவன் கி.பி. 8ம் நூற்றாண்டில் வட இலங்கையில் ஆட்சி புரிந்த மன்னனாவான். இவனது ஆட்சிக்காலத்தில் கதிரமலையே தலை நகராக விளங்கியது. இவனுக்குப் பின் இவனது மகனான பாலசிங்கன் என்பவன் மன்னனானான். இவன் சிங்கை நகரைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். இவனது ஆட்சிக் காலத்திலேயே ஸ்ரீமாற வல்லபன் என்ற பாண்டியனின் இலங்கைப் படையெடுப்பு நிகழ்ந்தது.

இப்படையெடுப்பினைப் பற்றி வரலாற்று நூலொன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது. முதலாம் வரகுணன் (கி.பி. 765-815) என்பவனின் மகனான சிறிமாறவல்லபன் (கி.பி. 815-862)இலங்கை மீது படையெடுத்தான். இக்காலத்தில் இலங்கையில் முதலாம் சேனன் ஆட்சி புரிந்து வந்தான். சிறிமாறவல்லபன் இலங்கை மீது படையெடுத்து போர் தொடுத்து வட மாகாணத்தை நாசம் செய்து, தலை நகரத்தையும் கொள்ளையிட்டான். இவ்வாறு இந்நூல் குறிப்பிடுகின்றது. இதில், வட மாகாணம் என்பது வட இலங்கையையும் தலைநகர் என குறிப்பிடுவது சிங்கை நகரினையுமே(வல்லிபுரம்) குறிக்கும்.

இக்காலத்தில் ஆட்சிபுரிந்துவந்த, சிங்கள மன்னனான சேனன், சிறிமாறவல்லபனுடன் சமாதானம் செய்து கொண்டான் என்பதை அறிய முடிகின்றது. சிறிமாற வல்லபனின், தாக்குதலுக்கு முதலாவதாக இலக்கானது பாலசிங்கனின் தமிழரசாகும். பின்னர் பாண்டியன் சேனனையும் புறமுதுகிடச் செய்து திறை பெற்றுச் சென்றான். இவ்வாறு வரலாறுகள் குறிப்பிடுகின்றன.2

திருக்கோயிலில் உள்ள செப்பேட்டில் சுமார் பத்தொன்பது பாடல்கள் உண்டு. இப்பாடல்களில் 'கண்டி' என்ற சொல், மூன்று வரிகளில் இடம் பெறுகின்றது. இதனை முறையே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி நகரை கனம் பெற வகுத்து (பாடல்:3-வரி-2)
கண்டியரசன் கணேசப்பெருமானை (பாடல்:16-வரி-1)
கண்டி மாநகரை கனம் பெற வந்தடைந்தார்(பாடல்:19-வரி-5)

என்னும் வரிகளில் கண்டு தெளியலாம். இவற்றில் கண்டி எனக் குறிப்பிடப்படுவது 'சிங்கை' நகரினையேயாகும். காரணம், இச்செப்பேடு, சிங்கை மன்னனான பாலசிங்கனுடன் தொடர்புடையதாகவுள்ளது.

இதே போன்று துறை நீலாவணைக் கோயில் செப்பேட்டில் உள்ள ஒன்பதாவது பாடலில்

'வால சிங்கனை வழுத்தினருலகோர்,

அன்னான் இலங்கையை யண்டியே கண்டி'

(வரி,9,10)என்னும் வரிகள் மூலமாக 'சிங்கை நகர்' கண்டி எனக் குறிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இச்செப்பேடு இன்று இலங்கை நூதன சாலையில் உள்ளது. இச்செப்பேட்டினை 'SPOLIAZEYLANICA.VOL:27Part1 என்னும் நூதனசாலை வெளியீட்டில் ஆங்கில மொழி பெயர்ப்புடன், (24-10-1953ல்) அப் போது நூதனசாலையில் A.E.D. ஆகப் பணிபுரிந்த திரு.எம்.டி.இராகவன் அவர்கள் வெளியிட்டுள்ளார் அத்துடன் அவர் இச்செப்பேடு துறை நீலாவணை என்னும் ஊரில் கிடைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இச் செப்பேடும் பாலசிங்கனுடன் தொடர்புடையதாகவுள்ளது.

இச்செப்பேடுகளின் வாயிலாக வடஇலங்கை மன்னனான பாலசிங்கனது செல்வாக்கு தென் கிழக்கிலங்கை வரையும் நிலவியிருந்தமை தெளிவாகின்றது. மேலும் கொக்கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலுள்ள,

'துரைபேர் வீரகண்டன் சிந்தாத்திரன்' என்று தொடங்கும் செப்பேடும்[4] இதனை உறுதி செய்கின்றது.

மேலும் இவற்றின் வாயிலாக வீரமுனையிலுள்ள சிந்து யாத்திரைப்பிள்ளையார் ஆலயம் மன்னன் பாலசிங்கனாலேயே (முதன் முதலாக) நிர்மாணிக்கப் பட்டதென்பதை அறிய முடிகின்றது. இவனது காலத்தில் தென்கிழக்கிலங்கையை கலிங்க குலத்துச் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் சுதந்திரமுள்ள மன்னர்களாகவே விளங்கினர். இதனை மட்டக்களப்பு மான்மியம் உறுதிசெய்கின்றது. ஆதலால் கலிங்ககுலத்து மன்னனான, பாலசிங்கனது செல்வாக்கு தென்கிழக்கிலங்கை வரை நிலவியிருந்ததில் ஆச்சரியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ள ஜெயதுங்க பரராசசிங்கன் என்ற விருதினைப் பெற்ற பாலசிங்கனது காலத்தில், (கி.பி. 8ம் நூ.) தற்போதைய கண்டி நகரம் உருவாகவில்லை, இதனை வரலாறுகள் மூலமாக அறிய முடிகிறது. தற்போதைய கண்டிநகரம் பிற்காலத்திலேயே உருவானதாகும். பழைய கண்டி இராச்சியத்தின் பெயர் 'உடரட்டை' என்பதாகும். இதன் தலைநகராகக் கம்பளை விளங்கியது. கி.பி. 1540ம் ஆண்டிலேயே, 'மகாநுவர' என்னும் கண்டி நகரத்தை தலைநகராகக் கண்டியரசர்கள் அமைத்துக் கொண்டனர்.[5] இதன் பின்னரே தற்போதைய கண்டிநகரம் புகழ்பெறத்தொடங்கியது.

## சங்குமன் கண்டி (சங்கமன்கண்டி)

தென் கிழக்கிலங்கையிலுள்ள திருக்கோவில் (பிரதேசசபைக்குட்பட்ட) பிரதேசம் மிகப்பண்டைக் காலத்தில் 'நாகர் முனை' என்று வழங்கியது. இப்பிரதேசத்தில் விஜயன் காலடி எடுத்து வைத்த வேளையில் இலங்கையின் பூர்வீகக் குடிகளில் ஒரு பிரிவினரான நாகர் இனத்தவரே வாழ்ந்து வந்தனர். இக்காலத்தில் நாகர் குல முதல்வர்கள் இப்பகுதியைப் பரிபாலனம் செய்து வந்தனர். இவர்களது இராசதானியாக 'சங்கமன் கண்டி' இருந்து வந்தது. இந் நகரத்தை நாகர் குலத்து குறு நில மன்னனான சங்கமன் என்பவனே நிர்மாணித்தான். ஆதலால் இந்நகரம் சங்கமன் கண்டி (சங்கமனால் நிர்மாணிக்கப்பட்ட நகரம்) எனப் பெயர் பெற்றது இதனை மரபுரைகள் மூலமாக அறிய முடிகின்றது.

கி.மு. 3ம் நூற்றாண்டளவில் கலிங்கன் என்ற திராவிடக் குடியினர் இப்பிரதேசத்தில் பெருமளவில் குடியேறினர். இதன் காரணமாக, பூர்வீகக் குடியினரான, நாகரது செல்வாக்கு படிப்படியாகக் குறைந்தது. இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில், கலிங்க குலத்தவரால் நிலையான தொரு அரசியல் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு நிலை பெற்றிருந்த காலத்தில் சங்குமன் கண்டி சிறப்புடன் விளங்கியது. கி.பி.2ம் நூற்றாண்டளவில் தற்போதைய திருக்கோவில் பிரதேசம் (செயலகப்பிரிவு) சங்குமன் கண்டி தொடக்கம் வடக்கே தாடகிரி (சாகாமத்தின் வடபகுதி) வரையும் பரந்திருந்தது.[6] இவ்வெல்லைகளையே இன்றும் இப்பிரதேசம் கொண்டிருக்கின்றது.

இக்காலத்தில் அடர்ந்த காடாகக் காட்சியளிக்கும் பழைய சங்கமன் கண்டிப் (நகரப்) பகுதியில் கட்டிட இடிபாடுகள் கற்றூண்கள் அழிவுற்ற ஆலயங்களின் அடித்தளங்கள் செங்கற்கள் உடைந்த மட்பாண்டங்களின் துண்டுகள் போன்ற தொல்லியல் சான்றுகளை இன்றும் நாம் காணமுடியும். அத்துடன் சிறிய குளங்களும் இவற்றில் அடங்கும் இவற்றின் வாயிலாக தொடர்ச்சியான நாகரீகம் நிலவியிருந்த ஒருபண்டைய நகரம் இது என்பதை அறிய முடிகின்றது. கி.பி. 9ம் 10ம், 11ம், 12ம், நூற்றாண்டுகளில் சங்குமன் கண்டி நகரம் உன்னத நிலையில் இருந்துள்ளதென்பதை தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்காரக்கண்டி

கிழக்கிலங்கையில் பழங்கிராமங்களிலொன்றாக விளங்கும் பளுகாமத்தின் பண்டையபெயர் சிங்காரக் கண்டி என்பதாகும் அக்காலத்தில் பளுகாமம், அழகியதொரு நகராக விளங்கியது. நாயக்க மன்னர்கள் (தமிழ்மன்னர்) கண்டியை ஆட்சிபுரிந்த காலத்தில் இம்மன்னர்கள் சிங்காரக் கண்டி என்ற இந்நகரினைத் தமது. கோடைக்கால வாசஸ்தலமாக கொண்டிருந்தார்கள். அக் காலத்தில் தலைநகரான, கண்டியையும் சிங்காரக் கண்டியையும் இணைப்பதற்கான பாதையொன்று இருந்தது. இதன் நினைவாக 'கண்டியன்கட்டு' என்ற பெயர் இன்றும் விளங்குகின்றது.

இவ்வாறு வரலாற்றில் இடம் பெற்றுள்ள பளுகாமம் என்ற சிங்காரக்கண்டியின் வரலாற்றினை நோக்குமிடத்து கி.பி. 15ம் நூற்றாண்டளவில் இச் 'சிங்காரக்கண்டி' ஒரு அரசியல்(ஆட்சி) பிரிவின் தலை நகராக விளங்கியதை அறிய முடிகின்றது. பண்டைய மட்டக்களப்பு மாவட்டமான தென்கிழக்கிலங்கையை 'எதிர்மன சிங்கன்' என்பவன் ஆட்சிபுரிந்த காலத்தில்(கி.பி. 15ம் நூற்) போர்முனை நாடு' என்ற ஆட்சிப்பிரிவின் (சிற்றரசு) தலைநகராக சிங்காரக் கண்டி விளங்கியது. இவனது நாற்பத்தி நான்கு வருட ஆட்சியின் பின்னர் தென்கிழக்கிலங்கை கண்டி மன்னரின் கீழ் வந்தது.

இக்காலந் தொட்டு பளுகாமம் என்ற சிங்காரக் கண்டியைத் தலை நகராகக் கொண்டு வன்னியர் என்ற சிற்றரசர் இப்பிரதேசத்தில் ஆட்சி புரிந்து வந்தனர். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில் 'பளுகாமம்' சிற்றரசின் தலைநகராக இருந்ததென்பதையும் இதனை வன்னியர் என்ற சிற்றரசர் ஆட்சி புரிந்ததையும் திரு எஸ்.ஜி.பெரேரா அவர்கள் எழுதிய 'இலங்கை வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

கண்டி மன்னர் காலத்தில் மட்டக்களப்பிருந்து கண்டிக்குச்சென்ற பாதை பளுகாமம் மண்டூர் ஊடாகச் சென்றது. இப்பாதை பற்றி இலங்கை வரலாற்று நூல்களில் காணலாம்[8] கண்டி மன்னர் காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் பொலிவுடன் காட்சியளித்த 'சிங்காரக் கண்டி' அந்நியரது ஆட்சியின் விளைவாக தனது பொலிவை இழந்தது மாடமாளிகைகள் அழிவுற்று அவ்விடங்கள் மண்மேடுகளாக மாறின. இன்று அழகியதொரு தமிழ்க் கிராமமாக காட்சியளிக்கும் பளுகாமத்தில் சிங்காரக் கண்டி, சின்னச் சிங்காரக் கண்டி போன்ற பெயர்கள் வழக்கில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புக்கள்


1. தென்னிந்திய வரவாறு பக்கம் - 173
   நீலகண்டசாஸ்திரி .எம்.ஏ

2. நல்லை நகர் பக்கம் - 11
   திரு. க. குணராசா

3. சீர்பாத குல வரலாறு பக்கம் - 60
   திரு. அருள் செல்வநாயகம் - 1982

4. சீர்பாத குல வரலாறு பக்கம் - 56,57
   திரு. அருள் செல்வநாயகம் - 1983

5. புதுமுறைச் சரித்திரம் பக்கம் - 08
   திரு. வி.எஸ். ராம், திரு. ரி.வி.கே. மூர்த்தி -1961
   'இலங்கைச் சரித்திரமும் உலகச் சரித்திரமும் II
   பக்கம் - 02, திரு. மு. இளையதம்பி - 1954

6. மட்டக்களப்பு மான்மியம் பக்கம் - 27
   பதிப்பாசிரியர் வித்துவான் எப்.எக்சி நடராசா

7. 'நறுமலர் மாலை'- டி.ரி. செல்வநாயகம்
   பக்கம் - 186-189, பதிப்பு - 1957

8. இலங்கைச் சரித்திரம் I, பக்கம் - 92,93
   திரு. எஸ்.எவ்.டி. சில்வா - 1952.


❋. 18-02-1996ல் வீரகேசரி வாரமலரில் பிரசுரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனையிலிருந்து ஆட்சிபுரிந்த உலக நாச்சியார்

விஜயன், இலங்கைக்குள் நுழைவதற்கு முன்புவரை, இலங்கை முழுவதிலும் பரந்து வாழ்ந்து வந்தவர்கள் நாகர் இயக்கர் என்று குறிப்பிடப்படும் திராவிட இனத்தவரேயாவர். நாகர், இயக்கர் என்பது சாதிப்பெயர்களாகும். இவர்களது இனப் பெயர் தமிழரென்பதாகும். பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும்.

இவர்கள் ஆரியரது வருகையின் காரணமாக, இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து படிப்படியாக வடக்குக் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்து தங்கள் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டனர். அக்கால இயக்கரின் ஒரு பிரிவினரே தற்கால வேடுவராகும், இதில் சந்தேகமில்லை. காரணம் யாலப்பகுதியில் வாழும் வேடுவர் பேசும் மொழியில் கணிசமான அளவு தமிழ்ச் சொற்கள் உண்டு.

பண்டைய இலங்கையின் தென்கிழக்குப்பகுதியாக விளங்கியது மட்டக்களப்பாகும். உறுகுணைப் பகுதியின் வடக்குக் கிழக்கில் அமைந்திருந்த இப்பிரதேசம், தெற்கே குமுக்கன் ஆற்றையும், வடக்கே வெருகல் ஆற்றையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. கி.மு. 5ம் நூற்றாண்டு வரை இப்பகுதியில் நாகர் இனத்தவரின் (தொல்குல்) அரசுகள் நிலைத்திருந்தன. இதனை வரலாறுகள் தெளிவுறுத்துகின்றன.

கி.மு. 3ம் நூற்றாண்டளவில் அனுரதபுரியை ஆட்சிபுரிந்த சேனன், கூத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களது காலத்தில், கூத்திகன் என்னும் தமிழ் மன்னனால், தென்கிழக்கிலங்கையில் புதிய அரசியல் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டு, இவ்வரசின் தலைநகராக மட்டக்களப்பு என்ற நகரமும் உருவாக்கப்பட்டது. [1] இந்த நகரிலிருந்தே தென்கிழக்கிலங்கையைத் தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இம்மட்டக்களப்பு நகரம்: இன்றைய வீரமுனைப் பகுதியில் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில், உறுகுணைப் பகுதியில் மேலும் பல தமிழ்ச் சிற்றரசர், பலபகுதிகளிலும் ஆட்சி புரிந்துவந்ததைப் பண்டைய வரலாறுகள் மூலமாக அறிய முடிகின்றது. கி.மு. 2ம் நூற்றாண்டில் அனுரதபுரியை எல்லாளன் என்னும் தமிழ்மன்னன் ஆட்சி புரிந்த காலத்தில், உறுகுணைப்பகுதியில் தமிழ் மக்கள் பரவலாக வாழ்ந்து வந்ததையும், தமிழ் மன்னர்கள் பலர் ஆட்சி புரிந்ததையும் மகாவம்சம் உறுதிசெய்கின்றது. [2] கலாநிதி மென்டிஸ் அவர்களும் இதனை உறுதிசெய்கின்றார். [3]

கி.பி. 1ம் நூற்றாண்டளவில் பிரசன்னசித்து என்ற தமிழ் மன்னனால், மட்டக்களப்பு அரசின் தென்பகுதியில் (தென்கிழக்கிலங்கையின் தென்பகுதி) 'உன்னரசுகிரி' என்ற புதிய அரசியல் பிரிவு உருவாக்கப்பட்டு, கலிங்க இளவரசனான புவனேய கஜபாகுவுக்கு அளிக்கப்பட்டது, இக்காலம் முதல் தென்கிழக்கிலங்கையில் இருஅரசுகள் இயங்கிவந்தன. ஆயினும், சுயாட்சியுள்ள (சுதந்திரமான) மட்டக்களப்புக்கு (அரசுக்கு) ஆதரவான தனியரசாய் உன்னரசுகிரி அரசு இயங்கிவந்தது. [4]

கி.பி. 3ம் நூற்றாண்டில், தென்கிழக்கிலங்கையான மட்டக்களப்பை குணசிங்கன் என்னும் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். இவனது காலத்தில் உன்னரசுகிரி, மட்டக்களப்பு ஆகிய நகரங்கள் தலை நகரங்களாக விளங்கின. இக்காலத்தில் தமிழும், சிவவழிபாட்டைப் பேணும் சைவ மதமும் செழிப்புடன் விளங்கின. இதேகாலப்பகுதியில் அனுரதபுரியை மகாசேனனின் மகனான மேகவண்ணன் (கி.பி. 362 - 391) என்பவன் ஆட்சி புரிந்து வந்தான். மட்டக்களப்பு மன்னனான குணசிங்கனும், மேகவண்ணனும் நண்பர்களாகவிருந்தனர்.

இம்மன்னர்களது காலத்தில் தென்கிழக்கிலங்கையில் மண்முனை என்ற புதிய அரசியல் பிரிவொன்று உருவானது. (மட்./ மான்மியம். பக். 170, 171) இதேகாலப் பகுதியில், கலிங்க தேசத்தை குகசேனன் என்பவன் ஆட்சிபுரிந்து வந்தான். இவனை சிலவரலாறுகள் 'குகசிவன்' என்று குறிப்பிடுகின்றன. [5]

இம்மன்னனது புத்திரியாகிய உலகநாச்சி என்பவள், கயிலையில், குகவம்சத்தார், முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும், கௌதம புத்தருடைய பற்சின்னத்தையும் எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டு வர்த்தகர் படகுமூலம் மணிபுரத்தில்[6] வந்து இறங்கினாள்.

பின்னர் இவள் மலை நாட்டுப் பட்டினமான 'விஜயதூவீபம்' என்ற இடத்தில் தங்கியிருந்த அனுரதபுரி மன்னனான மேகவண்ணனைச் சந்தித்தாள். அவனிடம் தனது குலம், கோத்திரம் என்பனவற்றை விளக்கித் தான் கொண்டு வந்த புத்தரின் பற் சின்னத்தை அவனுக்கு அன்பளிப்புச் செய்தாள்.[7] மேக வண்ணனும் மகிழ்ச்சியுற்று அன்பளிப்புகள் வழங்கித்தனது நண்பனான குணசிங்கனுக்குக் கடிதம் ஒன்று வரைந்து உலக நாச்சியிடம் கொடுத்தான்.

மேகவண்ணனிடம் விடைபெற்றுக் கொண்ட உலகநாச்சி, தான் கொண்டு வந்த சிவலிங்கத்தையும், கடிதத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரனுடன் கொங்குகாசியப்பன்புட்டி[8] வழியாக வந்து உன்னரசுகிரியில் தங்கியிருந்த குணசிங்கன் கையில் கடிதத்தைக் கொடுத்தாள். கடிதத்தை வாசித்த மன்னன் உறவு முறை கொண்டாடி, தனது அரசின் தலை நகரான மட்டக்களப்பின் வடபாக மாயுள்ள மண்ணேறி முனைவளர்த்து, காடுசெறிந்து, குடிவாழ்வற்ற பகுதியைத் திருத்தி மாளிகையொன்று கட்டி உலகநாச்சிக்குக் கொடுத்தான்.

மட்டக்களப்பு நாட்டு மக்கள் (தென்கிழக்கிலங்கை) புகழ்ந்து போற்ற நல்லாட்சி புரிந்து வந்த குணசிங்கனிடமிருந்து பெற்ற பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய உலகநாச்சி விரும்பினாள், இதன் பொருட்டு பல நடவடிக்கைகளை அவள் மேற்கொண்டாள். தனது தம்பியாகிய உலகநாதனைக் கலிங்க நாட்டிற்கு அனுப்பி ஏராளமான குடும்பங்களை வரவழைத்து தனது மாளிகை அமைந்திருந்த இடத்திற்கு அருகில் அவர்களைக் குடியேற்றினாள்.

பின்னர் இவர்கள் வழிபடுவதற்காக ஆலயம் ஒன்று நிர்மாணித்துத் தான் கொண்டுவந்த சிவலிங்கத்தை அவ்வாலயத்தில் பிரதிஸ்டைசெய்தாள். பின்னர், ஓரிஸாவிலிருந்து மேலும் ஏராளமான திராவிடக் குடும்பங்களை வரவழைத்தாள். 'காப்பு முனைக்காடு' என்னும் காட்டுப்பகுதியை அழித்துத்துப்பரவு செய்து, அப்பகுதியில் இக்குடும்பங்களைக் குடியேற்றினாள்[9] பின்னர், அப் பிரதேசத்திற்குத்தானே அரசியானதுடன், இப்புதிய அரசியல் பிரிவுக்கு மண்முனை என்றபெயரையும் இட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகநாச்சி, மட்டக்களப்பு மன்னனான குணசிங்கனின் சகோதரரான 'கிரசரன்' என்பவனை மணம்புரிந்தாள். மண் முனைப்பிரிவை இவள் ஆட்சி புரிந்த காலத்தில், திடகன் என்பவன் களப்பு முனைக்குத்தென் பகுதியிலிருந்த 'கொக்கு நெட்டி மரம் ஒன்றை வெட்டினான். அப்போது அம்மரத்திலிருந்து இரத்தம் பெருகியது. இதனைக் கண்ட திடகன் தனது உடைத்துணியால் மரத்தின் வெட்டு வாயைக் கட்டிவைத்து விட்டு, அரசிக்கு இதனை அறிவித்தான்

உலகநாச்சி இதனைக் கேள்வியுற்று ஆச்சரியமுற்றவளாக அம்மரத்தடி சென்று பார்வையிட்டாள். அக்கொக்குநெட்டி மரத்தடியில் ஒரு 'சுயம்பு இலிங்கம்' தோன்றியிருப்பது அவள் கண்களுக்குத் தெரிந்தது. உடனே அம்மரம் நின்றிருந்த காட்டுப் பகுதியை வெட்டித் துப்பரவு செய்து தான்தோன்றீஸ்வரருக்கு அந்த இடத்தில் ஆலயம் ஒன்றைக் கட்டுவித்தாள். இவ்வாலயத்தின் தொடர்ச்சியே இன்று கொக்காட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வரசி சைவ மதவளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியதுடன், நெற்பயிர்ச் செய்கையிலும் ஆர்வம் காட்டினாள். உலக நாச்சிக்குப் பின்னர், மண்முனைப் பிரிவை மட்டக்களப்பு மன்னரே ஆட்சி புரிந்து வந்தனர். இந்நிலை கி.பி. 12ம் நூற்றாண்டு மாகோன் என்னும் தமிழ் மன்னன் காலம்வரை நீடித்ததெனலாம்.

வரலாற்று ஆய்வுகள் மூலமாக நோக்குமிடத்து, தென்கிழக்கிலங்கையில் ஆட்சிபுரிந்த குணசிங்கனும், பெண்ணரசியான உலகநாச்சியும், அனுரதபுரிமன்னனான மேகவண்ணனன் என்பவனும் சமகாலத்தவர் என்பதை அறியமுடிகின்றது. அத்துடன் இதேகாலத்தில் கலிங்க நாட்டை ஆட்சிபுரிந்தவன் உலகநாச்சியின் தந்தையான குகசேனன் (குகசிவன்) என்பதையும் அறியமுடிகின்றது.

இதேகாலப்பகுதியில் வடஇந்தியாவை சமுத்திர குப்தன் என்பவன் ஆட்சிபுரிந்தான். இவனும், அனுரதபுரி மன்னனான மேகவண்ணனும் நெருங்கிய நண்பர்கள் என்பதை சீனச்சான்றுகள், வரலாறுகள் என்பவற்றின் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. [10] ஆதலால், இம்மன்னர்கள் சமகாலத்தவர் என்பது தெளிவாகின்றது.

1995, தமிழ்தின விழாமலர் 'பார்த்தேனில்' பிரசுரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. மட்டக்களப்பு மான்மியம்
பக் : 20 பதிப்பாசிரியர் : எப். எக்ஸி. நடராசா
2. மகாவம்சம் கைகர் பதிப்பு
1986 பக் : 170, 171
3. 'நம்முன்னோரளித்த அருஞ்செல்வம்'
பக் : 40,42 பதிப்பாசிரியர்: கலாநிதி ஜி.சி. மெண்டிஸ்
பதிப்பு 1964.
4. 'மட்டக்களப்பு மான்மியம்'
பக் : 25, : பதிப்பாசிரியர் : எப்.எக்ஸி. நடராசா
5. 'முன்னைச் சிங்கள ஓவியம்: பக் : 33 நந்ததேவ விஜயசேகர
தமிழாக்கம் : ஞானகலாம்பிகை இரத்தினம்
6. கி.பி. 13ம் நூற்றாண்டுவரை, யாழ்குடா நாடு 'மணிபுரம்' என்ற பெயராலும் அழைக்கப்பட்டது. இதனை ஆதாரங்களுடன் முதலியார் சி. இராசநாயகம் அவர்கள் நிறுவியுள்ளார். (பூர்வீக யாழ்பாணம். ஆங்கில மூலம். பக் : 36 - 39)
7. இவ்விளவரசியின் வரலாற்றினை இந்தியக் கல்வெட்டும் (EPINDXU 246), மகாவம்சமும் உறுதிசெய்கின்றன. பரணவிதான எழுதிய (History of Ceylon. Page - 89) வரலாற்று நூலிலும் கண்டுதெளியலாம்.
8. இந்த இடம் இன்று 'சியம்பலாந்தை' எனப்பெயர் வழங்குகின்றது. (பூர்வீக சப்தஸ்தவங்கள் - பக் : 19. திரு. ரி. கணபதிப்பிள்ளை) திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் பெரியவர்கள் இன்றும் இந்த இடத்தை 'ஓங்காசிப்பிட்டி' எனக் குறிப்பிடுகின்றனர்.
9. இவளால் ஒரிஸாவிலிருந்து தருவித்து குடியமர்த்தப் பட்ட குடிகளே, இன்று உலகநாச்சிகுடி அல்லது உலகிப்போடிகுடி என அழைக்கப் படுகின்றனர் (மட்டக்களப்பு மான்மியம் ஆராய்ச்சி - பக் 116,117. ஜி. தனபாக்கியம், பி.ஏ சிறப்பு வட மொழி, எம்.ஏ தொல்லியல்
10. உலக வரலாறு - பக் - 145. கு. இராமநாதப்பிள்ளை
இந்திய வரலாறு - பக் - 214 ஆர். சத்தியநாதய்யர்
- எம்.ஏ. பதிப்பு - 1959
இலங்கையின் சுருக்க வரலாறு - பக் 26
எச்.டபிள்யூ. கொடின்றின்

✷ மட்டக்களப்பு நகரம் தோன்றிய காலம் கட்டுரையில் முழு விபரங்களைக் கண்டு தெளியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தமிழரிடையே சூரிய வழிபாடு.

உலகம் தோன்றுவதற்கு காரணகர்த்தாவாகவிருந்தவன் சூரியன் ஆவான். இவனே இவ்வுலகம் முழுவதிலும் வியாபித்து இருக்கின்றான். சூரியனுடைய உருவம், ஞானம், வைராக்கியம் தர்மம், ஐஸ்வரியம் ஆகியவற்றிற்கு இருப்பிடமாக உள்ளது. சூரியனுக்கு பன்னிரண்டு பெயர்கள் உண்டு இவை முறையே ஆதித்தன், ஸவிதா, சூரியன், மிஹிரன், அர்க்கன், பிரபாகரன், மார்த்தாண்டன், பாஸ்கரன், பானு, சித்திரபானு, திவாகரன், ரவி என்பனவாகும். இவ்வாறு சூரியபுராணம் உரைக்கின்றது.

ஆதிகாலத்திலிருந்து இந்துக்கள் சூரியனைவழிபட்டுவருகின்றனர். உலகத்திற்குக் கண்ணாகவும், கண்கண்டதெய்வமாகவும் விளங்கும் சூரியனைப்பற்றி வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பன விதந்துரைக்கின்றன. குறிப்பாக வேதம் பல ரிக்குகளில் சூரியனைப்புகழ்கின்றது. இந்துக்கள் சிவனுக்கும் விஷ்ணுக்கும் ஆலயங்கள் அமைத்து வழிபடுவது போன்று சூரியனுக்கு ஆலயங்கள் அமைத்து வழிபடுவதில்லை. ஆயினும் சந்தியா வந்தனம், காயத்திரி, சூரிய நமஸ்காரம் போன்ற வழிபாடுகள் மூலம் சூரியனை நாள்தோறும் வழிபட்டுவருகின்றனர்.

இந்துமதத்தில் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம் கௌமாரம், சௌரம் போன்ற பிரிவுகளுண்டு. இவற்றில் சூரியனைமுதல் தெய்வமாகவணங்கும் சௌரமும் ஒரு பிரிவாகும்.ஆயினும் சூரியனுக்காக தனியான கோயில்கள் மிகக்குறைவாகவே உள்ளன. இந்தியாவில் காஷ்மீரிலுள்ள மார்த்தாண்டர் கோயில், ஒரிசாவில் உள்ள கோணார்க்கோவில், ஆந்திரத்திலுள்ள அரசவில்லி ஆகியவை பண்டைய சூரியன் ஆலயங்களாகும்.

## தமிழரிடையே சூரியவழிபாடு.

தமிழரது மதம், சிவனை முழுமுதற்கடவுளாக, வழிபடும் சைவமாகும். இச்சைவரிடையே கணபதிவழிபாடு, சக்திவழிபாடு, முருகவழிபாடு, திருமால் வழிபாடு, சூரிய வழிபாடு போன்றவை நெடுங்காலங்தொடக்கம் நிலவி வருகின்றது. இந்து சமயத்தில் பலபிரிவுகள் உண்டு. இவற்றில், சூரியனை முழுமுதற் கடவுளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கும் சௌரமும் ஒன்றாகும். இச்சமயம் தமிழரிடையே இல்லையென்றே கூறலாம். தமிழ்ச்சைவரிடையே சூரிய வழிபாடானது சைவசமயத்தின் ஒரு அங்கமாகவே இருந்து வருகின்றது. இதுபோன்றே ஏனைய வழிபாடுகளும் இருந்து வருகின்றன.

சைவ ஆலயங்களில் சூரியனுக்குத் தனியான கோயில்கள் மிகக் குறைவாகவே உள்ளன. ஆனால், சிவாலயங்களில் பரிவாரத் தெய்வங்களிலொன்றாக (தேவதைகள்) வைத்துப் பூசைசெய்வதைக் காணலாம். நவக்கிரகங்களில் ஒன்றாக சூரியனை வைத்து வலம் வரும் வழக்கத்தை யாவரும் அறிவர். சிவாகமங்கள், சிவபெருமான் சூரியமண்டலத்தின் நடுவே ஒளிர்கின்றார் என்றும், சூரியனாகவே விளங்குகின்றாரென்றும், அவருக்குரிய அட்டமூர்த்திகளில் ஒன்று சூரியன் என்றும் குறிப்பிடுகின்றன.

சூரிய வழிபாடானது, தமிழரிடையே கணபதிவழிபாடு அறிமுகமாவதற்கு முன்பே நிலவிவருகின்றது. தமிழரிடையே கணபதி வழிபாடு பல்லவர் காலத்திலேயே அறிமுகமானது (தொல்லியல் சிந்தனைகள், பக் : 21 - 29. நா. நவநாயக மூர்த்தி - பதிப்பு 1995) இன்று இவ்வழிபாடு தமிழ்ச் சைவரிடையே பின்னிப் பிணைந்திருக்கின்றது. ஆனால், திராவிடரின் நாகரீகம் என்று குறிப்பிடப்படும் சிந்து வெளிநாகரீகத்தில் (கி.மு. 5000 கி.மு. 1500) சிவ வழிபாட்டுடன், சூரிய வணக்கமும் நிலவியிருந்ததாக அறிய முடிகின்றது. பண்டைய வரலாற்றில் திராவிடம் என்பது தமிழையே குறிப்பதாகும். சூரிய வழிபாட்டின் தொன்மைச் சிறப்பினைத் தமிழ் இலக்கியங்கள் தொல்லியல் சான்றுகள் வரலாற்றாய்வுகள் என்பனவற்றின் மூலமாக அறியலாம்.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை நமக்கு இன்று கிடைக்கும் தமிழ் நூல்களில் முதலாகக் கருதப்படுவது தொல்காப்பியமாகும். இந்நூலில் சூரிய வழிபாடு கூறப்பட்டுள்ளது. 'அண்டங்கள் பல பயந்து' 'நீராகி நிலம் படைத்தனன்' ஆகிய இருசெய்யுள்கள் மூலமாக இதனை அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் (கி.பி. 2ம் நூற்.) தொடக்கத்திலேயே இளங்கோ சூரியனைப் போற்றுகின்றார்.

'ஞாயிறு போற்றுதலும், ஞாயிறு போற்றுதலும்,
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந் திரிதலான் (மங்கலவாழ்த்துப்பாடல் 4-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், அக்காலத்தில் தமிழகத்தில் தமிழரிடையே இருந்த கோவில்கள்பற்றிக் குறிப்பிடும் சிலப்பதிகாரம், சூரியனுக்கும் தனயானதொரு கோயில் இருந்ததாய் உரைக்கின்றது. இதனை,

'பகல் வாயில் உச்சிக்கிளான் கோட்டம் என்ற' "கனாத்திறம் உரைத்த காதை"ப் பாடல் வரிமூலமாக அறியலாம். இதன் பொருள், கீழ்த்திசையில் உள்ள சூரியனார் கோயில் என்பதாகும்.

அக்காலத்தில், பாலை நிலத்துமக்கள் சூரியனைத் தங்கள் தெய்வமாக வழிபட்டுள்ளனர், இதனைக் கலித்தொகைப் பாடல் வரிகள் மூலமாக அறிய முடிகிறது.

"கனை கதிர் கனலியைக் காமுறல்
வளிதரும் செல்வனை வாழ்த்தவும்"

(கலி : 147, 148) சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் சிவனை இலிங்கவடிவில் வழிபட்டுவந்ததுடன், ஏனைய தெய்வங்களுடன் சூரியனையும் வழிபட்டனர். இதனைச் சங்க இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன.

வரலாற்றாய்வுகள், தொல்லியல் சான்றுகள் என்பனவற்றின் மூலமாக சோழ, பாண்டியர் காலத்தில் தமிழரிடையே சூரிய வழிபாடு சிறப்புடன் இருந்ததை அறியமுடிகின்றது. முற்காலபாண்டியர் காலத்தில் (கி.பி. 8ம், 9ம், நூற்) பாண்டிய நாட்டில் உள்ள உக்கிரன் கோட்டை என்னுமிடத்தில், கோட்டைவாயிலில் சூரியனுக்கு ஒரு கோயில் இருந்துள்ளது. இச்செய்தியைப் பாண்டியன் சடையன்மாறனின் (கி.பி. 8ம் நூ) வட்டெழுத்துக்கல்வெட்டொன்றின் மூலமாக அறிய முடிகின்றது.

சோழர்காலத்தில் நவக்கிரக வழிபாடு தமிழகமெங்கும் பரவியிருந்தது. சூரியனுக்குப் பல கோயில்கள் கட்டப்பட்டன. முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 11ம் நூ) சூரியதேவனுக்கும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் இருக்குவேதத்திலிருந்து வேதபாராயணம் செய்வதற்காகத் 'திருநாமநல்லூரில்' அறக்கட்டளையொன்றை நிறுவினான். முதற்குலோத்துங்கன் (கி.பி. 1070 - 1120) தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சூரியனார் என்ற ஊரில் கோயில் கொண்டுள்ள சூரியனுக்கு வழிபாடுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்தான் (சோழர் வரலாறு பக் : 630 டாக்டர் கே. கே. பிள்ளை) இவ்வாலயத்தில் காணப்படும் இரண்டு கல்வெட்டுகள் இதனை உறுதி செய்கின்றன. தமிழரிடையே உள்ள பிரபல்யமான ஒரேயொரு சூரியன் ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக்காலம் முதல் தமிழரிடையே நிலவிவரும் சூரியவழிபாட்டின் தொடர்ச்சியாக தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. தை மாசப்பிறப்பன்று, தமிழர்கள் சூரியஉதயத்தில் பொங்கலிட்டு, சூரியனுக்குப் படைத்து, வழிபாடு செய்வது வழக்கமாகும். ஆதலால், அன்றையதினம் தைப்பொங்கல் எனப்பெயர் பெறுகின்றது. சூரியனைப் பற்றிப் பாடாத தமிழ்ப் புலவர்கள் இல்லையெனலாம், சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் தமிழ்க் கவிஞர்களால் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளதையும் நோக்கலாம்.

சூரியனின் அம்சமாக சாவித்திரியை வணங்கும் வணக்கம் இலங்கையில் இன்று தமிழரிடையே வெகுவேகமாக வளர்ச்சியுற்று வருகின்றது. இருக்கு வேதத்திலுள்ள மகாமுக்கிய ஜெபமாகிய சாவித்திரி அல்லது காயத்ரி மந்திரம், தமிழ்ச் சைவர்களால் தினமும் ஓதப்பட்டுவருகின்றது. இம்மந்திரத்தை இயற்றியவர் சத்திரியகுலத்தவரான விசுவாமித்திரமகரிஷியாவார். இவ் வழிபாட்டினை இலங்கைத்தமிழரிடையே அறிமுகப்படுத்தியவர் நுவரலியாவைச் சேர்ந்த காயத்ரி சித்தரான முருகேசுசுவாமிகளாவர்.

ஆதிகாலத்தில், சூரியவழிபாடு உலகில் பலபாகங்களிலும் நிலவியிருந்தது. இது ஆய்வாளர்கள் நன்கு ஆராய்ந்து கண்டமுடிவாகும். தொல்லியல் சான்றுகளும் இதனை உறுதிசெய்கின்றன. அக்கால மக்கள் சூரியனைக் குறிக்க வழங்கிய பெயர்களுள் ‘எல்’ என்பது மிகப்பழமையுடையது. ‘எல்’ தொடர்பான இடப்பெயர்களை இலங்கைமுதல், மேற்குஆசியா, அரேபியா நாடுகள்வரை காணலாம். பழம்பெரும் நாகரீகங்களிலொன்றான பாபிலோனிய நாகரீகத்தின் சிற்பிகளான சுமேரியரிடையே, சூரியவழிபாடு சிறப்புடன் விளங்கியது. (உலகவரலாறு பக்: 12 த. இராமநாதபிள்ளை - 1951) கி.மு. 16ம் நூற்றாண்டளவில், எகிப்தை ஆட்சி புரிந்த ஆமன்காத்தப்பு iv என்ற மன்னனது காலத்தில் சூரிய வழிபாடு அங்கு தோன்றி சிறப்புடன் இருந்தது. எகிப்தியர் சூரியனை இரா (RA) என்ற பெயரில் வழிபட்டதாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன. உலக மக்களால் வழிபடப்பட்ட ‘எல்’ மலை ‘சிவன் ஒளி’ மலை என்ற சிவனொளிபாத மலையாகும். இம்மலையைப் பண்டைய மக்கள் ‘எல்’ மலை என்றே குறிப்பிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துணை செய்த நூல்கள் சில :**


1. தொல்லியல் ஆய்வுகள் - டாக்டர் கே.வி. ராமன்.
2. தமிழர் சமயம் - திரு கா. சுப்பிரமணியப்பிள்ளை (M.A.M.L.O)-பதிப்பு 1969
3. நவக்கிரகம் - திரு. கி. வா. ஜகந்நாதன்
4. சோழர் வரலாறு - டாக்டர். கே. கே. பிள்ளை
5. உலக வரலாறு - திரு.த இராமநாதப்பிள்ளை-1951
6. சூரிய புராணம் - தமிழாக்கம் (வசனம்)
7. ஹிந்துமதசங்கிரகம் - ஜே.என். மாசிலாமணி.
8. சிலப்பதிகாரம் - சங்க இலக்கியம்.
9. தமிழ் பழமையும் புதுமையும் - திரு. ந.சி. கந்தையாபிள்ளை பதிப்பு - 1946.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்பிராஹ்மி எழுத்துக்குமுன் பண்டைக் காலத்தில் வழங்கிய தமிழ் எழுத்து

உலகில் தமிழ் மக்கள் தோன்றிய காலம் பற்றிக்குறிப்பிடும் பொழுது கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்தகுடியினர் என ஆசிரியர் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார். இத்தகைய மக்கள் பேசிய மொழியே இனிய தமிழ் மொழியாகும். உலகில் உள்ள மிகத்தொன்மை வாய்ந்த மொழிகளை மூன்று பெரும் பிரிவுகளாகப்பிரிப்பின் அவை முறையே துரேனியம், ஆரியம், சேமியம் என மூன்று வகைப்படும். தமிழ்மொழி துரேனியம் எனவும், வடமொழிகள், ஐரோப்பிய மொழிகள் என்பன ஆரிய இனமெனவும் அராபிய மொழிகள் சேமியம் (சுமேரிய இனம்) எனவும் வரையறை செய்யலாம்.

பழம் பெரும் நாகரீகங்களான எகிப்திய, பாபிலோனிய, மெசப்பட்டோமிய ஆகியவற்றோடு சமகால நாகரீகமாக சிந்துவெளி நாகரீகமும் விளங்குகின்றது. தொல்லியல் சான்றுகள் இதனை உறுதிசெய்கின்றன. இந்நாகரீகத்தை உருவாக்கியவர்கள் நாகர் என்ற திராவிடர்களேயாவார். பண்டைய சரித்திரத்தில் திராவிடமென்பது தமிழ் மொழியையே குறிப்பதாகும் (விபுலானந்த ஆராய்வு அருள் செல்வநாயகம்) இந்தியாவில் ஆதியில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை பல ஆதாரங்களுடன் சேர். எர்பேர்ட் ரிஸ்லி என்பவர் தனது இந்தியமக்கள் (People of India) என்ற நூலில் குறிப்பிடுகின்றார். ஆதலால், ஆரியர் வருமுன் இந்தியாவின் இமயம் தொடங்கி (இந்தியதுணைக்கண்டம்) இலங்கைவரை (கி.மு.1500 வரை) வாழ்ந்தவர்கள் தமிழ் மொழி பேசியதிராவிடரேயாவர்.

சிந்துவெளி நாகரீக காலத்தில் தமிழ் மொழிக்கு உருவ எழுத்து வழக்கிலிருந்தது, இச்சிந்து வெளி எழுத்துக்கள் திராவிடஇனமொழி எழுத்துக்கள் என்றே ரஷ்ய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிந்து வெளி எழுத்துக்களை கொண்ட மொழி பழைய திராவிடமேயாகும் என்று ஹிரோஸ் பாதிரியார் கூறுவதையும் நோக்கலாம். (மறைந்த நகரம் - பக், 48- மா, இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் பதிப்பு 1949) உலக ஆய்வாளர்கள் பொதுவாக இவ்வெழுத்துக்கள் அக்காலத் தமிழ் மொழி எழுத்துக்கள் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(இக்கால கட்டத்தில் வாழ்ந்த அரேபிய மொழிபேசிய சுமேரிய இனத்தினர் பேசிய பாஷையும் திராவிட மொழியோடு ஒத்திருப்பதாய் சுவாமி விபுலானந்தர் கூறுகின்றார்.)

ஆதலால், தமிழ் மொழியில் முதன் முதலாகத் தோன்றிய எழுத்து உருவ எழுத்தாகும். உதாரணமாக வீடு என்ற சொல்லுக்கு வீடு வரையப்படும் மரம் என்றால் மரம் வரையப்படும். அதாவது, தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை வரைந்து அதனையுணர்த்த முயன்றதே முதல் எழுத்து முயற்சியாகும். எகிப்து சிந்துவெளி மக்கள் இம்முறையில்தான் எழுதினார்கள். சிந்துவெளிமொழி தமிழ் என்பதை உறுதிப்படுத்திய 'ஹிரொஸ்' பாதிரியார் இங்குள்ள எழுத்துக்களைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நான் மொகஞ்சதரோ முத்திரைகளிற் பொறித்துள்ள எழுத்துக்களை ஒலிமுறையாக வாசித்து எழுதிவைத்திருந்தேன். யான் வாசித்திருந்தவைகளை யாழ்ப்பாணம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் காட்டினேன். அவை செய்யுட்களின் பகுதிகளாயிருப்பதை அறிந்த போது நான் எய்திய வியப்புக்கு அளவில்லை. இப்பாடல்கள் பல அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. அவைகளுள் ஐந்து குறள்வெண்பா அடிகளில் இயன்றுள்ளன. இவற்றில் ஒன்று (எழுத்துக்களின் ஒலிமுறையான வாசிப்பில்)

2 நண்டு றுறு தூக்கு அடு கார்முகில் ஊர் வேலி ஒ ரூர்
எடு எட்டு று உயர் எல் இர் ஆர் இரி பேர் கடவுள்

(இதன் பொருள்) ஓர் ஊர் என்னும் ஆண்டை அடைகின்ற ஓசையிட்டு உயரச் செல்கின்ற ஞாயிற்றின் இரண்டு வழிகளையுடைய பச்சை (பயிர்) கடவுள் மழைமுகில்களும் சுத்தமுடைய நாட்டுக்கு வெளியேயுள்ளது.



2 .(முதல் வரி கடைசியிலிருந்து வலம் இடமாக இரண்டாவது வரி இடமிருந்து வலம்)

இவ்வாறு ஹிரோஸ் பாதிரியார் தனது இந்திய வரலாற்று இதழில் குறிப்பிடுகின்றார்.

தமிழில் உள்ள தொன்மையான கல்வெட்டுக்கள் (கி.மு. 3ம் நூற்) பிராமியில் அமைந்தவையே ஆனால் தொல்காலத்தில் சித்திர எழுத்தையே திராவிடர்கள் பயன்படுத்தினர் என்பதை 'எழுதுதல்' என்ற சொல்லின் பொருளிலிருந்தே அறியலாம். அட்சரம் வரைவதைக் குறிப்பதோடு, சித்திரம் வரைவதையும் குறிப்பதால் ஒருகாலத்தில் சித்திர எழுத்து ஆண்டமரபை எழுது என்னும் சொல் புலப்படுத்துகின்றது எனலாம். மேலும் யாப்பருங்கல உரையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“காணப்பட்ட உருவம் எல்லாம்
மாணக்காட்டும் வகைமை நாடி
பழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்”

எனவரும் மேற்கோள் செய்யுளும் தொல்லோர்கள் உருவெழுத்தாண்ட நினைவைப் போற்றுகின்றது. எனவே பண்டைய திராவிடம் (தமிழ் மொழி) உருவெழுத்தையாண்டது என்று துணிவது நேரிதே. நம் நாட்டில் (பாரதநாட்டில்) சிந்துவெளி நாகரீகமே சித்திர எழுத்தைக்கண்டது என்பதால் அது முன்னைய திராவிட மொழிக்குரியதே என்ற கொள்கை மேலும் வலுப்படுகின்றது எனலாம்.

ஆரியர் இந்தியாவிற்குள் நுழைந்த காலத்தில் பூர்வீகக் குடியினரான நாகர் அல்லது திராவிடர் நாகரீகமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களைப் படிப்படியாக வெற்றிகொண்ட ஆரியர் விந்தியத்துக்கு வடக்கே பலகுடியிருப்புக்களைத் தங்களுக்கென அமைத்துக் கொண்டனர். இவ்வேளையில் ஆரியர் தங்களுக்கென்று எழுதும் முறையினை வழக்கத்தில் கொண்டிருக்கவில்லை.

ஆகவே எழுதத் தெரியாத ஆரியர் தங்கள் வேதங்களை நெட்டுரு செய்து பாதுகாத்து வந்துள்ளனர். இதனாலேயே வேதங்களுக்கு எழுதாமறை என்ற பெயர் குறிப்பிடப்படுவதையும் அறியலாம். இக்கால கட்டத்தில் நாகர் அல்லது திராவிடர் நகர நாகரீகத்தில் வாழ்ந்த தோடன்றி நாகரி என்னும் எழுத்து முறையினையயும் அறிந்திருந்தனர். ஆரியர் முதன் முதலாக எழுத்துக் கலையைக் கற்றது நாகர்களிடமிருந்தேயாகும். இதனால்தான் வடமொழி எழுத்து தேவநாகரி என்று அழைக்கப்படுகின்றது. வேதகாலத்தில் வடமொழிக்கு எழுத்து உருவம் இருக்கவில்லை ஆகவேதான் வேதங்கள் அனைத்தும் வாய்மொழியாக ஒப்புவிக்கப்பட்டு வந்தன எனலாம்.

தமிழ்த்திராவிட எழுத்துக்களிலிருந்தே ஆரியர் வரிவடிவத்தைப் பெற்றனர் என்பதற்கு வடமொழியின் தொன்மைக்குச் சான்றான இருக்கு வேதத்தில் திராவிடச் சொற்கள் பல காணப்படுவதாக, அறிஞரான “சுனிதிகுமார் சட்டர்ஜி” கூறுகின்றார். அணுகபி (குரங்கு), கர்மார (கருமான்), கால (காலம்), குட (குடில்), நீல (நீலம்), புஷ்ப (புஷ்பம்), பூஜை (பூசை), பல (பழம்), பீஜ (வித்து), மயூர (மயில்), ராத்திரி (இரவு), முதலியன திராவிட மொழியிலிருந்து வடமொழி பெற்ற சொற்களாகும். இதேபோன்று ட, ண, ள, என்பன போன்ற ஒலிகள் திராவிட மொழிகட்கேயுரியனவாகும் என மேலும் அவர் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் முதன் நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்திற்கு முற்பட்டகாலத்தில் தமிழ் மொழிக்கு இலக்கியம் இல்லையென்ற காரணத்தினால், தமிழ் மொழிக்கு அக்காலத்தில் எழுத்து இல்லையென்று கூறிவிட முடியாது. இன்று நமக்குக்கிடைக்கும் பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் கி.மு. 6ம் நூற்றாண்டுக்கும் கி.மு. 3ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியதாகும்

இக்காலத்தில் தமிழ் மொழியில் உயிர் எழுத்துப் பன்னிரண்டு மெய்எழுத்து பதினெட்டு என்பன சேர்ந்து முப்பது எழுத்துக்களே இருந்தன. இவற்றைக் கொண்டே சொற்களை அமைத்தனர். இவற்றுடன் சார்பெழுத்துக்களான எ,ஒ,கு, என்பன புள்ளிபெற்று விளங்கின. ஆகவே தமிழ்மொழியில் தமிழ்ப்பிராமி எழுத்து அறிமுகமாகு முன்பே தமிழில் எழுதும் முறை வழக்கில் இருந்துள்ளது.

தென்னிந்திய மொழிகள், பண்டைய திராவிடம் என்ற மொழியிலிருந்து பிறந்தவைகள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு துளுவு மொழியில் இருபத்தைந்து சதவீதமும், கன்னட மொழியில் முப்பது சதவீதமும் தெலுங்கு மொழியில் நாற்பது சதவீதமும் மலையாள மொழியில் ஐம்பது சதவீதமும் தமிழ்ச் சொற்கள் கலந்திருப்பதை இன்றும் காணமுடியும் என முத்தமிழ்காவலர் திரு. கி. ஆ.பெ. விஸ்வநாதம் கூறுகின்றார்.

திராவிட மொழிகளான இவற்றை ஒப்பு நோக்கி நுணுகி ஆராய்ந்த திராவிட இயல் வல்லுனர்கள் சுபிலபில்-(Zvelebil) ஆண்டிரோநாவ் (Andronw) எஸ்.கே. சட்டர்ஜி ஆகியோர் பண்டைத் திராவிடம் கி.மு.1500 வரையில் ஒரே மொழியாக விளங்கிய தென்று ஊகிப்பதால் பண்டைய திராவிடத்தின் காலமும் சிந்து வெளிநாகரீகத்தின் காலமும் ஒன்றே எனக் கொள்ளலாம். ஆரியர் இந்தியதுணைக் கண்டத்தில் நுழையும் போது திராவிடம் (பண்டையதமிழ்) என்றபெயருடன் ஒரே மொழியாகப் பண்டைய திராவிடம் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

* 1993ம் ஆண்டு வைகாசித் திங்கள் 'திருஒளி' சஞ்சிகையில் பிரசுரமான கட்டுரையின் விரிவாக்கம்.

## துணைசெய்த நூல்கள்.


1. தமிழே முதன்மொழி - இரா, வெங்கிடகிருட்டினன்.
2. தமிழரும் தமிழும் - கோ, இராமச்சந்திரன்.
3. தமிழர் பண்பாடு - ந.சி. கந்தையாபிள்ளை
4. மொழியியற் கட்டுரைகள் - டாக்டர் மு. வரதராசன்.
5. இந்தியப்பண்பாடும் தமிழரும் - எஸ், இராமகிருஷ்ணன்.
6. 1900 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் - திரு.ப. கனகசபைப்பிள்ளை
7. விபுலானந்த ஆராய்வு - அருள் செல்வநாயகம்.
8. மறைந்த நகரம் - மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள்- பதிப்பு - 1946.
9. தமிழ் பழமையும் புதுமையும் - ந.சி. கந்தையா பிள்ளை - 1946.
10. சங்ககாலச் சிறப்புப்பெயர்கள் - டாக்டர். துரை அரங்கசாமி (MA,MOL, Phd)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலம்பு சொல்லும் கலைகள்.

சுமார் ஆயிரத்தி எண்ணூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த தமிழரிடையே கலைகள் எவ்வாறு சிறப்புற்றிருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் ஓரளவு தெளிவுறுத்துகின்றன. சங்க இலக்கியங் களிலொன்றான சிலப்பதிகாரத்தில் கலைகள் பற்றியகுறிப்புக்கள் நிறையக் காணப்படுகின்றன.

கி.பி.2ம் நூற்றாண்டில் தோன்றியதென நம்பப்படும் சிலப்பதிகாரத்தில் (ஆரியதிராவிடரும் அழிந்து போன சங்கங்களும் - துரைஜெகநாதன் - பக் - 88,89) அக்காலத் தமிழரது வாழ்க்கை, தமிழ்மூவேந்தரின் பெருமை, தமிழகத்தின் சிறப்பு என்பன நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளன. கலைகள் பற்றிய தகவல்களை அரங்கேற்று காதைப்பாடல் மூலமாக அறியமுடிகின்றது.

அக்காலத்தமிழர்கள் ஆடலுக்கும் இசைக்கும் அளித்திருந்த முக்கியத்துவத்தை இப்பாடல்கள் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றன. பெண்கள் நாட்டியம் கற்கத்தொடங்கும் காலம் (வயது) பற்றியும் அதன்பின் நாட்டிய அரங்கேற்றம் நடத்த வேண்டிய காலம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை

"ஆடலும் பாடலும் அழகும் என்று இக்
கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்
ஏழு ஆண்டு இயற்றி ஓர் ஈர்-ஆறு ஆண்டில்
சூழ்கழன் மன்னற்கு காட்டல் வேண்டி."

(அரங்கேற்றுகாதை 8-11) என்ற பாடல் வரிகள் மூலமாக அறியமுடிகின்றது.

நடன அரங்கேற்றத்திற்கு அமைக்கப்படும் அரங்கம்பற்றிய வர்ணனைகளும் சிலப்பதிகாரத்தில் உண்டு. தூண்கள், உருவுதிரைகள், மேற்கட்டிகள் அதில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், ஓவியவிதானம் என்ற மேற்கட்டிகள் என்பன பற்றிய செய்திகள் இவற்றில் அடங்கும். இவை ஓவியக்கலை வளர்ச்சிக்கு எவ்வாறு வழிகாட்டிகளாக விளங்கின என்பதையும் (அரங்கேற்று காதை - 95-113) அறியக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கலை பற்றிய குறிப்புக்களும் சிலம்பில் உண்டு. பலவிதமான இசைக்கருவிகள்பற்றிக் குறிப்பிடும் பொழுது புல்லாங்குழல், யாழ் ஆகிய வாத்தியக் கருவிகளின் இசைக்கேற்ப மத்தள இசை அமைவதாகவும் இவற்றுடன் குடமுழா, ஆமந்திரிகை என்னும் இடக்கைக் கருவி ஓசையும் கூடிஒலிப்பதாகவும் (குழல் வழிநின்றது யாழே, யாழ்வழித்.... அரங்கேற்று காதை - 139-142) குறிப்பிடப்பட்டுள்ளது.

பலவிதமான ஆடல்கள்பற்றிக்குறிப்பிடும் சிலப்பதிகாரம் மொத்தமாகப் பதினொரு வகையான ஆடல் (பதினோர் ஆடலும் பாட்டும் கொட்டும் - அரங். 14) உண்டென்றும் இவற்றில் முறையே திருமால் ஆடல்கள் மூன்றும், சிவனுக்குரியவை இரண்டும், முருகனுக்கு இரண்டும், திருமகள், துர்க்கை, இந்திராணி, காமன், ஆகியவர்களுக் குரிய ஆடல்கள் ஒவ்வொன்றும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் திருமாலுக்குரியவை முறையே அல்லியத்தொகுதி, மல்லாடல், குடம் ஆகிய ஆட்டங்களாகும் கண்ணனைக் கொல்வ தற்காக அவனது மாமனான கம்ஸன் பலவிதமான சூழ்ச்சிகள் செய்தான். இவற்றை வெல்வதற்காகக் கண்ணன் ஆடிய ஆடலே அல்லியத் தொகுதியாகும். இதேபோன்று வாணாசுரன் என்னும் அரக்கனை மல்லர் கூட்டத்தினருடன் சேர்ந்து மாயவன் கெட்டியாகப்பிடித்து அவனது உயிர் பிரியும் வரை நெரித்து அழித்தொழித்த ஆடல் மல்லாடல் எனப்படும்.

இதேபோன்று வாணாசுரன் என்பவன் தனது சோவென்னும் பட்டணத்தில் காமன் புத்திரனாகிய அநிருத்தன் என்பவனைச் சிறைவைத்த பொழுது திருமால் அவனை எதிர்த்து ஆடிய கூத்துக்கள் குடக் கூத்து என்று கூறப்படும். (வாணன் பேர் ஊர்மறுகிடை நடந்து- கடல் ஆடுகாதை - 54 , 55) இவ்வாறு திருமால் ஆடிய கூத்துக்கள் பற்றி அறியமுடிகின்றது.

சிவன் ஆடிய கூத்துக்கள் முறையே கொடுகொட்டி, பாண்டரங்கம் ஆகியவைகளாகும். முப்புரங்கள் எரிவதைக் கண்டும் மனமிரங்காது சிவன் ஆடிய கூத்து கொடுகொட்டி எனப்படும். ஆனந்தத்தாற் கை கொட்டிச் சிவன் ஆடிய இக்கூத்து கொடுங்கொட்டி என்றும் கூறப்படும். பிரமனது துயரினைப் போக்குவதற்காக அவன் காணும்படியாக சரஸ்வதி வடிவம் கொண்டு சிவன் ஆடிய ஒருவகை ஆடலே பாண்டரங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் ஆடிய ஆடல்கள் துடி என்றும், குடைஎன்றும் கூறப்படும். (நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன் நின்ற - கடல் ஆடு காதை - 50-53) மாமரவடிவங் கொண்டு நின்ற சூரபத்மனை வெற்றி கொள்வதற்காக கடலின் நடுவே கடல் அலைகளை அரங்கமாக அமைத்து முருகன் ஆடிய ஆடல் " துடி" எனப்படும். இதே போன்று தேவர்களைக் காத்தற் பொருட்டு முருகன் அசுரர்களுடன் போர் புரிந்தார். இவ்வேளையில் அசுரர்களால் ஏவப்பட்ட பல வகையான ஆயுதங்களும் அவரது பாதத்தில் மலர் போல விழுந்து துகள் துகள்களாய் மறைந்தன. நிராயுதராய் நின்ற அவர்களைத் தப்பியோடுமாறு முருகன் குடையைக் கையில் பிடித்து ஆடிய ஒருவகை ஆட்டம் குடைக் கூத்து என்று கூறப்படும்.

திருமகளுக்குரிய ஆடலாகக் குறிப்பிடப்படுவது பாவைக் கூத்தாகும். "சோ" என்னும் நகரத்தில் அசுரர்கள், திருமகளான இலக்குமியை எதிர்த்தனர். இவ்வேளையில் தன்னைக் கண்டு மோகித்து விழும்படி கொல்லிப்பாவை வடிவங் கொண்டு திருமகள் ஆடிய ஆட்டம் இதுவாகும். இதே போன்று தேள், பாம்பு முதலிய உருவெடுத்து வந்த அசுரர்களை வெற்றி கொள்வற்காகத் தூர்க்கை ஆடிய ஒரு வகை ஆடலே மரக்கால் ஆடலாகும்.

காமன் தன் மகன் அநிருத்தனைச் சிறைமீட்பதற்காகப் பெண்மைக் கோலம் கொண்டு ஆடிய ஆடல் பேடிக் கூத்து எனப்படும் கடைசிக்கூத்து என்று குறிப்பிடப்படும் கடையம் இந்திராணி ஆடிய ஆடலாகும். இது உழவர் குலப் பெண்களுக்குரியதாகும். இவ்வாறு பதினொரு ஆடல்கள் அக்காலத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இப்பதினொரு ஆடல்களையும் முறைப்படி ஆடவல்லவளாக மாதவி விளங்கினாள் என்றும் சிலம்பு உரைக்கின்றது. (கடல் ஆடு காதை- 66-69)

✷ வீரகேசரி ."இசையும் கலையும்" பகுதியில் பிரசுரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத்தமிழரின் ஓவியக்கலை

கண்ணால் கண்டமாத்திரத்தில் கண்களுக்கு விருந்தினை அளிக்கவல்லது ஓவியமாகும். கலைவடிவங்களிலொன்றாக விளங்கும் இது கருத்திற்கும் இன்பத்தை அளிக்கின்றது. கற்றவராயினும், கல்லாதவராயினும் ஓவியத்தை அனுபவித்து இன்பமடைவர். மக்களிடையே ஓவியம் வரையும் வழக்கானது பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே இருந்து வருகின்றது. வரலாற்றுக்கு முந்திய குகைஓவியங்கள் அக்கால மனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டுகின்றன.

ஓவியக்கலையானது தமிழரிடையே தொன்று தொட்டுச்செழிப்புடன் விளங்கிவந்துள்ளதைத் தொல்லியல் சான்றுகள், வரலாறுகள், தமிழ் இலக்கியங்கள் என்பனவற்றின் மூலமாக அறியமுடிகின்றது. சிந்துவெளி நாகரீகம் என்று குறிப்பிடப்படும் திராவிடரின் நாகரீகத்தில் மட்பாண்டங்கள் போன்றவற்றில் சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. பண்டைய வரலாற்றில்திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும்.

மொகஞ்சொதரோவிற் கிடைத்துள்ள ஓவியங்கள் மிகத்தெளிவாக அக்கால நிலையையும் நாகரீகத்தையும் உணர்த்த வல்லவையாக இருக்கின்றன. அவை பிற்கால ஓவியக்கலையின் பிறப்பிடம் எனலாம். ஒரு வட்டத்திற்குள் பல வட்டங்கள் பிழைபடாமல் இட்டுள்ளமுறை போற்றுதற்குரியது. பல பாண்டங்கள்மீது மரங்கள், இலைகள், இலைக்கொத்துக்கள், சதுரக்கட்டங்கள், குறுக்கும் நெடுக்குமாக உள்ள முக்கோணங்கள், பறவைகள், பாம்புகள், மீன்கள், மலையாடுகள், காட்டுடெருமைகள் முதலியவற்றின் உருவங்கள் செவ்வையாகத் தீட்டப்பட்டுள்ளன. (மறைந்த நகரம்-வித்துவான் மா.இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் BOL, LDMOL - 1945-பக், 30)

அக்காலத்தில் அரை அங்குலத்திற்கும் உட்பட்ட அளவுடைய முத்திரைகள் மீதும் அழகிய ஓவியங்கள் தீட்டும் தொழில் நிபுணர் இருந்தனர் என்பது வியப்பிலும் வியப்பன்றோ. ஆதலால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் ஓவியக்கலையில் சிறப்புற்றிருந்தமை தெளிவாகின்றது.

தமிழில் முதல் நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் (கி.மு. 5ம் நூ-கி.மு. 3ம்நூ) ஓவியம் பற்றிய குறிப்புக்களைக் காணக் கூடியதாகவுள்ளது. போரில் வீரமரணம் எய்திய வீரர்க்கு கல்நடுதல் அக்கால வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லில் அவ்வீரனது உருவத்தைப பொறிக்கும்போது சிற்பம் செதுக்குவோன் அவ்வீரனது உருவத்தை வரைந்த பின்னரே உருவத்தை செதுக்குவது வழக்கமாகும். ஆதலால் சிற்பக் கலைக்கு ஓவியக்கலையே அக்காலத்தில் முதற்படியாக இருந்தது.

அத்துடன் அக்காலத்தில் தான்விரும்பிய மங்கையை அடையமுடியாத காதலன் அம்மங்கையின் உருவத்தை ஒரு துணியில் ஓவியமாக வரைந்து மடலேறுதல் வழக்கம் என்பதையும் தொல்காப்பியம் உரைக்கின்றது. இவற்றின் மூலமாகத் தமிழரிடையே ஓவியம் வரையும் வழக்கு நெடுங்காலங்தொடக்கம் இருந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது.

சங்க இலக்கியங்கள் வாயிலாக அக்காலத்தமிழரின் (கி.மு. 3ம் நூ- கி.பி. 5ம் நூற்) ஓவியக்கலை நிலைபற்றி அறியக்கூடியதாகவுள்ளது. அக்காலத்தில் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் பற்றி இவை விபரமாக எடுத்தக் கூறுகின்றன. அவ்வோவியங்கள் இன்று காணுவதற்கு இல்லாவிடினும் தமிழரின் ஓவியக்கலை பற்றி அறிவதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றுகளாக உள்ளன.

பரிபாடல் என்ற சங்க இலக்கியம் மதுரை திருப்பரங்குன்றத்திலுள்ள மண்டபங்களில் வரையப்பட்டிருந்த அக்கால ஓவியங்கள் பற்றி விபரமாக எடுத்தியம்புகின்றன. ஓவியங்கள் வரையப்பட்டிருந்த இம்மண்டபங்களை எழுத்து நிலை மண்டபங்கள் என்று இந்நூல் குறிப்பிடுகின்றது.

“ஒன்றிய படியிதென் றுரைசெய்வோரும்.

இன்ன பல பல எழுத்து நிலை மண்டபம்”

என்ற பரிபாடல் வரிகள் மூலமாகக் கண்டு தெளியலாம். மேலும் இங்குள்ள எழுத்து நிலை மண்டபங்களில் ஞாயிறு முதலிய கோள்கள் பற்றிய ஓவியமும், மன்மதன், ரதிதேவி, கௌதமர், அகலிகை, இந்திரன், ஆகியயோரின் உருவங்களும் தீட்டப்பட்டிருந்தன என்றும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் வாழ்ந்த நடன மங்கையர் நடனக் கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக் கலையும் ஒன்றாகும். அத்துடன் அக்காலத்தில் ஓவியக் கலை பற்றிய ஓவியச் செந்நூல் ஒன்றும் இருந்துள்ளது. இதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமகளிர்க்கு நன்கனம் வகுத்த

ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்

கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை.

என்ற மணிமேகலைப் பாடல் (ஊரவர் உரைத்த காதை - 30,31,32) அடிகள் மூலமாக அறியமுடிகின்றது. மணிமேகலையில் ஓவியம் பற்றிய குறிப்புக்கள் நிறையக் காணப்படுகின்றன. சித்திரச் சாலைகள் என்ற பெயருடன் ஓவியக் கூடங்கள் பல இருந்தன என்றும் இந்நூல் குறிப்பிடுகின்றது.

அக்கால நடன அரங்கத்தில் 'ஓவியவிதானம்' என்ற பெயர்கொண்ட மேற்கட்டி கட்டப்படுவது வழக்கமாகும். அதில் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும். அவையாவும் ஓவியக்கலையின் வளர்ச்சிக்கு வழிகாட்டிகளாகவும் மக்கள் உள்ளங்களை மகிழ்விக்க வல்லவைகளாகவும் அமைந்திருந்த தென்பதை அறிய முடிகின்றது. இதே போன்ற மேல்விதானம் ஒன்று மாதவி தலையரங்கேறும் நாடக அரங்கத்தில் கட்டப்பட்டிருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதனை,

"ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து

மாலைத்தாமம் வளைவுடன் நாற்றி"

என்ற அரங்கேற்று காதைப் பாடல் (111,112) அடிகள் மூலமாக அறியலாம். இவற்றின் வாயிலாக சங்க காலத்து தமிழரின் ஓவியக்கலைச் சிறப்பினை அறியக் கூடியதாயுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரை இன்று காணக்கிடைக்கும் ஓவியங்களில் காலத்தால் பழையனவாகக் கருதப்படுவன பல்லவர் (கி.பி. 6ம்நூ - கி.பி. 9ம்நூ) கால ஓவியங்களேயாகும். இவை மகாபலிபுரம், பனைமலை, காஞ்சிகைலாயநாதர் கோவில் ஆகியனவற்றில் காணப்படுகின்றன. மற்றும் பல்லவ மன்னர்கள் அமைத்த குகைக் கோயில் சுவர்களிலும் கூரைகளிலும் பல நிறச் சாந்துகள் காணப்படுகின்றன. இவை அக்காலத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததை அறிவிக்கும் சான்றுகளாகும்.

பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 590-630) ஓவியக் கலையில் கைதேர்ந்தவனாவான். ஆதலினால் அவன் 'சித்திரகாரப்புலி' என்ற பட்டத்தினைப் பெற்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பல்லவன் கண்ட பனைமலைக் கோவில் -பக் -67 புலவர், ந. வெங்கடேசன்) மகேந்திரவர்மனுக்குப்பின் ஓவியக் கலை வளர்ச்சி எவ்வாறிருந்த தென்பதை வெளிப்படுத்தும் ஓவியச் சின்னங்களைப் பனைமலை, காஞ்சிபுரம், ஆகிய இடங்களிலுள்ள பல்லவர் கட்டிய கோயில்களில் காணலாம்.

பல்லவமன்னனான இராஜசிம்மனால் (இரண்டாம் நரசிம்மன்) கட்டப்பட்ட காஞ்சி கயிலை நாதர் ஆலயத்தில் கோயிற்பிரகாரத்ததைச் சுற்றியுள்ள அறைகளில் காணப்படும் ஒரு அரச உருவம், ஒரு சோமாஸ்கந்தர் ஆகியவற்றின் ஓவியச்சிதைவுகள் ராஜசிம்மன் காலத்து (கி.பி. 700-728) ஓவியனின் கைத்திறமையை வெளிப்படுத்துகின்றன. இவனால் கட்டப்பட்ட இன்னொரு கற்கோயிலான பனைமலைத் "தாளகிரீஸ்வரர்" கோயிலில் காணப்படும் வண்ண ஓவியங்கள் அஜந்தா, பாதாமி, ஆகிய இடங்களிலுள்ள ஓவியங்களுக்கு நிகரானவை. இவ்வாலயத்தில் சிற்பக்கலையைக் காட்டிலும் ஓவியத்துக்கே இராஜசிம்மன் முதலிடம் கொடுத்துள்ளான்.

கி.பி. 7ம் நூற் - கி.பி. 9ம் நூற்றாண்டுவரையுள்ள முற்கால பாண்டிய காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் பல திருமலைபுரம் குகைக் கோயிலில் காணப்படுகின்றன. பல்லவர் காலத்தவை என்று கருதப்பட்டு வந்த சித்தன்ன வாசல் ஓவியங்களும் முற்காலப் பாண்டியர் காலத்தவைகளே என்று டாக்டர் கே.கே.பிள்ளையவர்கள் (சோழர்வரலாறு-பக் - 674) குறிப்பிடுகின்றார். திருமலைபுரம் குகைக் கோயிலில் காணப்படும் ஓவியங்களைக் கண்டு பிடித்தவர் பேராசிரியர் "மூவோதுப்ராயல்" என்பவராவர் (இந்திய ஓவியம்-பக் - 68.)

சித்தன்னவாசல் ஓவியங்களில் ஒரு பாண்டிய அரசனுடன் அவனது மனைவியான அரசியின் உருவங்களும் அழகாகக் காட்சியளிப்பதாக டாக்டர் கே.வி ராமன் (பாண்டியர் வரலாறு-பக் -45) குறிப்பிடுகின்றார். திருச்சிக்கு தெற்கே புதுக்கோட்டையை அடுத்துள்ள சித்தன்ன வாசல் குகைக் கோயிலில் காணப்படும் இவ்வோவியங்கள் அக்காலத் தமிழரின் ஓவிய அறிவின் நுட்பத்தை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் இவை நாகரீக உலகம் கண்டு வியக்குமாறு செய்திருக்கின்றன.

சோழப்பேரரசர் காலத்தில் (கி.பி 9ம்நூ-கி.பி 13ம்நூற்) வரையப்பட்ட ஓவியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கை, நாகரீகம் பண்பு இவற்றைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. பல்லவர் காலத்திற்குப்பின் சோழர் காலத்து ஓவியங்களே நம்முன்னோரின் ஓவியக் கலைத்திறனுக்குச் சான்றாக விளங்குகின்றன. நார்த்தாமலை, மலையடிப்பட்டி முதலிய இடங்களில் மிகவும் முற்காலச்சோழ ஓவியச் சின்னங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் சோழர்காலத்து ஓவியக்கலைக்குச் சான்றாக விளங்குவது 1ம் ராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலாகும். இங்கு காணப்படும் ஓவியங்கள் வரையப்பட்டு பல நூற்றாண்டுகளாகியும் வர்ணம் இன்னும் அழியவில்லை. கோயிலின் மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள மண்டபத்தில் காணப்படும் இவ்வோவியங்கள் பல்லவ ஓவியங்களின் தொடர்ச்சியாக உள்ளன.

சோழர் காலத்தின் பின் தமிழகத்தை விஜயநகரமன்னர் ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி. 14ம் நூ-கி.பி. 17ம் நூ) ஏனைய கலைகளைப் போன்று ஓவியத்திற்கும் ஊக்கமளிக்கப்பட்டது விஜயநகர மன்னர் ஆந்திர கன்னட நாடுகளைச் சேர்ந்தவர்களாதலால் அந் நாடுகளின் ஓவியக் கலை மரபுகள் தமிழகத்திலும் பின்பற்றப்பட்டன காஞ்சிபுரம் திருவண்ணாமலை, சிதம்பரம் , ஸ்ரீரங்கம், திருவாரூர் ஆகிய இடங்களில் இவர்களது ஓவியங்களைக் காணலாம்.

காஞ்சிபுரம் வரதராஜர் கோயிலில் சிறு மண்டபங்களிலுள்ள அழகிய ஓவியம் பிற்கால விஜயநகர ஓவியக்கலையின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. 17ம் நூற்றாண்டில் விஜயநகர ஆட்சி நலிவுறத் தொடங்கியதன் விளைவாகத் தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டது. இவர்கள் ஓவியக்கலை வளர்ச்சிக்குப் போதிய ஆதரவை நல்கினர் ஆனால் விஜயநகர காலத்தில் ஏற்பட்ட மரபுபடுத்தப்பட்ட வரன்முறையே (வரைமுறை) இக்காலத்திலும் தொடரப்பட்டது.

திருவாரூர் தியாகராஜர் கோயில், சிதம்பரம், திருவொற்றியூர், திருவலஞ்சுழி முதலிய இடங்களில் இவர்களது ஓவியங்கள் காணக்கிடக்கின்றன. இவை புராண இதிகாச சம்பவங்களையும் சைவ நாயன்மார்களின் கதைகளையும் சித்திரிக்கின்றன. இதே போன்று நாயக்கர் கால ஓவியங்கள் பலவற்றை மதுரையிலும் காணக் கூடியதாகவுள்ளது. திருக்குற்றாலத்தில் உள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கு) உள்ள ஓவியங்களும் நாயக்கர் காலத்தவைகளாகும்.

* 30-09-1994ல் வீரகேசரியில் பிரசுரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைசெய்த நூல்கள்.


1. மறைந்த நகரம் - வித்துவான், மா.இராசமாணிக்கம் பிள்ளையவர்கள், பி.ஓ.எல்.எல்.டி.எம்.ஓ.எல் - 1945.

2. தமிழக வரலாறு - டாக்டர், மா.இராசமாணிக்கனார், பதிப்பு - 1959.

3. மணிமேகலை - காப்பியம்.

4. இந்திய ஓவியம் - க.சிவராம மூர்த்தி (தமிழாக்கம், சு.இராமசுவாமி)

5. தமிழரும் கலையுணர்வும் - பி.ஸ்ரீ.இரண்டாம் பதிப்பு - 1982.

6. சோழர் வரலாறு - டாக்டர் கே.கே. பிள்ளை, பதிப்பு - 1977.

7. பல்லவன் கண்ட பனைலைக்கோவில் - புலவர் ந.வெங்கடேசன்.

8. பரிபாடல் - சங்க இலக்கியம்.

9. சிலப்பதிகாரமும் கலையும் - (கட்டுரை)கலைதீபாவளி மலர் - 1961. டாக்டர். அ.சிதம்பரநாதன்.

10.தமிழகக் கலைகள் - டாக்டர். மா.இராசமாணிக்கனார்.பதிப்பு, 1980.

11.சிலப்பதிகாரம் - காப்பியம். சங்கஇலக்கியம் புலியூர்க் கேசிகன் - பதிப்பு. 1982.

12 பாண்டியர்வரலாறு - டாக்டர் கே.வி. ராமன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பக்கலையின் தோற்றம்.

ஒருமனிதனின் உள்ளத்தில் நிரம்பிப் பெருக்கெடுத்து வெளிப்படும் பேராற்றலே கலை என்று கூறப்படும். இவ்வாற்றலானது பல வடிவங்களில் வெளிப்படும். இவற்றிலொன்றே சிற்பமாகும். இக்கலையின் மூலவளங்கள் கல், மண், மரம், செங்கல், உலோகம், மெழுகு, அரக்கு என்பனவாகும். இவற்றைக் கொண்டு உருவங்களை அமைக்கும் கலையே சிற்பக் கலை என்று கூறப்படும்.

தமிழரிடையே சிற்பக்கலையின் தோற்றம் மிகப் பண்டைக்காலத்திலிருந்து ஆரம்பமானதென்றே கூறலாம். காரணம் தமிழரின் சிற்பக்கலை உலகெங்கும் புகழ் பெற்றதாக விளங்குவதுடன் அதுகட்டிடக்கலையிலும் உயர்ந்ததாக விளங்குவதேயாகும்.

தமிழரின் சிற்பக் கலையானது ஆதிகாலத்தே போரில் இறந்த வீரனின் ஆற்றலுக்கு அறிகுறியாக (அவனது நினைவாக) ஒரு கல்லை நாட்டி அவனது உருவத்தை அக்கல்லில் பொறிப்பதன் வழக்கிலிருந்தே ஆரம்பமானது. இதை நடுகல் என்று கூறுவதுண்டு இது பற்றிய செய்திகள் தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

பொருத்தமான கல்லைத் தேர்ந்தெடுத்தல், அதனை நீராட்டல், அதில் வீரனது உருவத்தைப் பொறித்தல் குறிப்பிட்ட இடத்தில் அதனை நடுதல் என்பன அக்காலத்தில் இருந்ததாக தொல்காப்பியம் கூறுகின்றது. இவ்விபரங்களிலிருந்து பண்டைத் தமிழரின் சிற்பத்திறனை அறியக் கூடியதாகவுள்ளது.

இதேபோன்று சங்ககாலத்தில் கண்ணகியின் ஞாபகார்த்தமாக கண்ணகி சிலை அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது சங்க காலத்திலிருந்த கோயில்களில் பல தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனை சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்கள் மூலமாக அறிய முடிகின்றது. இக்காலத்தில் தமிழரின் சிற்பத்திறன் வியக்கத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் அவர்கள் மண்ணாலும், மரத்தாலும் கோயில்களையும், கட்டிடங்களையும் கட்டியிருந்தனர். இதனைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. அக்காலத்தில் சிற்பக் கலை பற்றி ஆராய்ந்து வகுத்துரைக்க சிற்பநூலோர் வாழ்ந்துள்ளதைச் சிலப்பதிகாரம் உறுதிசெய்கின்றது. இதனை.

"எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது

மண்ணகம் ஒரு வழி வகுத்தனர் கொண்டு"

என்ற அரங்கேற்று காதைப் பாடல் (95,96) வரிகள் மூலமாக அறியலாம்.

இந்து மதத்தின் பெரும் பிரிவுகளிலொன்றான வைணத்தின் பெரிய கோயிலாக விளங்கும் திருவரங்கத்தில் அரங்கநாதன் கிடந்த கோலத்தைச் சிலப்பதிகாரம் இவ்வாறு வர்ணிக்கின்றது.

"நீலமேகம் நெடும் பொற் குன்றத்துப்

பால் விரிந்துகலாது படிந்ததுபோல

ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்

பாயற்பள்ளிப் பலர் தொழுதேத்த

விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்

திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்.

(காடு காண்காதை 35-40)

ஆதலால் சங்க காலத்தில் தமிழரின் சிற்பக்கலை சிறப்புற்றிருந்தமை தெளிவாகின்றது.

கி.பி.6ம் நூ-கி.பி.9ம் நூற்றாண்டு வரையான பல்லவர் காலப்பகுதில் தமிழகம் முழுவதும் ஒருகுடையின் கீழ் ஆளப்பட்டது. பல்லவ மன்னர்களான முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.590-630), முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668) ராஜ சிம்மன் (கி.பி. 700-728) என்போர் கற்கோயில்கள் குடைவரைக் கோயில்கள் என்பனவற்றை அமைத்து அழியாப் புகழ்பெற்றனர். இவற்றிலுள்ள சிற்பங்கள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

மகாபலிபுரத்தில் மகேந்திரன் தொடங்கி வைத்த வேலையை அவனது மகனான நரசிம்மவர்மன் தொடர்ந்து நடத்தி அழியாப் புகழைப் பெற்றான். உலகம் போற்றும் தமிழரின் சிற்பத்திறனுக்கு மாமல்லபுரத்துச் சிற்பங்கள் பெரும் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராசசிம்மனால் நிர்மாணிக்கப்பட்ட காஞ்சி கைலாச நாதர் ஆலயமும் பனைமலைக் குன்றுடைநாதர் கோயிலும் காஞ்சி வைகுந்தநாதர் கோவிலும் சிற்பக் கலைக் கூடங்கள் என்று கூறலாம். காஞ்சிகைலாசநாதர் கோவிலில் சிவபெருமான் ஆடிய நாதாந்த நடனம், தூக்கிய திருவடி நடனம் ஆகியன சிற்பவடிவில் செதுக்கப்பட்டுள்ளன. இவை அக்காலச் சிற்பக் கலை வளர்ச்சியை நன்கு அறிவிக்கும் சான்றுகள்.

இதேபோன்று, பனைமலை குன்றுடைநாதர் கோயிலில் உள்ள தூண்களில் காணப்படும் சிற்பங்கள், இடம்புரி வினாயகர் உருவம் என்பன பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாலயத்திலுள்ள பலவகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள துர்க்கைச் சிற்பம் இராசசிம்மனின் சிற்பக்கலையை வெளிப்படுத்தும் சான்றாக அமைகின்றன.

1ம் மகேந்திரவர்மன், 1ம் நரசிம்மவர்மன் ஆகிய மன்னர்கள் தாம் அமைத்த குகைக் கோயில்களில் வாயிற்காவலா், விஷ்ணு, சிவன், இலிங்கம், இசைவாணர், ஆதிவராகர், மகிஷாசுரமத்தினி, வராக அவதாரம், அர்ச்சுனன்தவம் முதலான காட்சிகளைச் சிற்பங்களாக அமைத்துள்ளனர்.

கி.பி. 9ம் நூ. கி.பி. 13ம் நூற்றாண்டு வரையுள்ள சோழர்காலச் சிற்பங்களில் சிறந்தவை சைவ உருவச் சிற்பங்களாகும். அழிபட்டுவரும் இச்சிற்பங்கள் சில கல்லிலும் சில உலோகத்திலும் அமைந்துள்ளன. சோழர் காலத்தில் சைவ உருவச்சிலைகள் மிகுதியாக உள்ளன. காரணம் சோழமன்னர்கள் பெரும்பாலும் சிவபக்தர்களாக இருந்ததேயாகும். 1ம் ராஜேந்திரனால் நிர்மாணிக்கப்பட்ட சோனிசுவரம் சிற்பக்கலையின் தலைசிறந்த கோயிலாகத்திகழ்கின்றது.

இவ்வாலயத்தில் சுவாமி சன்னதிக்கு இடது, வலது புறமாகவுள்ள வாயில்களுக்கு அருகே பெரிய ஆள் உயரத்தில் எழுப்பப்பட்டு வீற்றிருக்கும் கலைமகள் இலக்குமி, சண்டேசுவரர் முதலிய சிற்பங்கள் அத்தனையும் அற்புதமான படைப்புக்களாகும். இச்சிற்பங்கள் தெய்வாம்சம் பொருந்திய அருள் வடிவான சிற்பங்களாகும். அதனாலேயே தமிழரின் சிற்பக்கலை உயர்வாயுள்ளது.

பொதுவாகச் சோழ உருவச் சிற்பங்கள் அக்கால நடை, உடை, தலைமயிர்க் கொண்டை, நகைகள் இவற்றைக் குறிக்கின்றன. அரச குடும்பத்தவரின் சிற்ப உருவங்களுக்கும், தெய்வ உருவங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு சில சிற்பங்களில் தெரிய வில்லையெனலாம். இலங்கையின் பொலநறுவையில் சோழர் காலச் சிற்பக்கலையினை (கி.பி.10ம் நூ) இன்றும் காணலாம்.

பாண்டிய நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான கற்கோயில்கள், மண்டபங்கள், அவற்றிலுள்ள சிற்பங்கள் இவையெல்லாம் வரலாற்றுச் சின்னங்களாகத் திகழ்கின்றன. கி.பி.750 கி.பி. 950ம் ஆண்டு வரையுள்ள முதற் பாண்டியப் பேரரசு காலத்தில் ஏராளமான கோயில்கள் பாண்டிய நாட்டில் கட்டப்பட்டன. இவற்றில் எழில்மிக்க சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் நெடுஞ்சடைப் பராந்தகன் காலத்தே அவனது சேனாதிபதியான சாத்தன் கணபதி என்பவனால் (கி.பி. 773) அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலுள்ளது. பாண்டியர் குகைக் கோயில்களுள் சிற்ப அமைப்பிலும், செறிவிலும் இது சிறந்து விளங்குவதுடன் திருமால், சுப்பிரமணியர், கணேசர், துர்க்கை போன்ற ஈடு இணையற்ற சிற்பங்களையும் இது கொண்டுள்ளது.

இதேபோன்று திருச்சி மலைக்கோட்டை அடிவாரத்திலுள்ள குகைக் கோயில் சிற்பங்கள் (தெய்வ விக்கிரகங்கள்) கழுகு மலையிலுள்ள வெட்டுவான் கோயில்சிற்பங்கள் என்பன முற்காலப் பாண்டியரின் கலைத்திறனுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன. அத்துடன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருவாலீஸ்வரர் கோயில் சிற்பங்கள் என்பனவும் முற்காலப்பாண்டியரின் சிற்பக் கலையைத் தெளிவுறுத்துகின்றன.

கி.பி 12ம், 13ம், நூற்றாண்டுகளில் பாண்டியர் செல்வாக்கு மீண்டும் பிரகாசித்த காலத்தில் அவர்களது கலைப்படைப்புக்களும் புதுப்பொலிவு பெற்றுத்துலங்கின. குலசேகரப் பாண்டியன் (1168-1175), சடையவர்மன், பராக்கிரமபாண்டியன், முதலாம் மாறவர்மன், குல சேகரன் (1268-1311) ஆகிய மன்னர்கள் சிற்பங்கள் நிறைந்த கோபுரங்களை அமைத்தனர். சிதம்பரத்திலுள்ள மேலைக் கோபுரம் சிற்பங்கள் நிறைந்த பாண்டியர் கோபுரப்பணிக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் 1ம் புவனேகபாகு காலத்தில் (கி.பி 1273-1284) தம்பதெனியா ராஜதானியாக விருந்த இக்காலத்தில் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்துவந்தனர். பாண்டிய மன்னனான குலசேகரனால் தோற்கடிக்கப்பட்ட இலங்கையில் இருபது வருடங்கள் பாண்டியர் ஆட்சி நிலவியது. இக்காலத்தில் கட்டப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவையிலுள்ள முதலாவது சிவாலயம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பாண்டிய சிற்பமுறையை அனுசரித்திருக்கின்றதென கலாநிதி ஜி.சி.மென்டிஸ் (நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பக் - 149) குறிப்பிடுகின்றார்.

இதேபோன்று பேராசிரியர் இந்திரபாலா அவர்களால் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதென கருதப்படும் கற்கோயிலான திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயத்தில் காணப்படும் யாழிச்சிற்பங்கள் பிற்காலப் பாண்டியரின் சிற்பக்கலைக்குச் சான்றாக விளங்குகின்றன.

தமிழகத்தை விஜய நகரமன்னர் ஆட்சிபுரிந்த காலத்தில் விஜய நகரப் பேரரசின் ஆதரவில் சிற்பக்கலையின் தொடர்ச்சிக்குச் சான்றுகள் காணக்கூடியதாகவுள்ளது. இக்காலத்தில் நெடுங்காலமாகத் தனித்துவத்துடன் மிளிர்ந்து வந்த தமிழரின் சிற்பக் கலையுடன் ஆந்திர நாட்டுச் சிற்பக் கலையும் கன்னட நாட்டுச் சிற்பக்கலையும் கலந்தன. இவர்களுக்குப் பின்னர் தமிழகத்தை ஆட்சிபுரிந்த நாயக்கர்கள் விஜய நகர வேந்தர்களுக்கு உட்பட்டவராதலால், இவர்கள் காலத்தில் விஜயநகர சிற்பமுறை வளர்ச்சியடைந்தது.

* 08/07/1994. வீரகேசரி-இசையும் கலையும் பகுதியில் பிரசுரமானது.


துணை செய்தவை.

1. சோழர்வரலாறு - டாக்டர்.கே.கே.பிள்ளை.
2. பாண்டியர்வரலாறு - டாக்டர் கே.வி.ராமன்.
3. சிலப்பதிகாரம் - சங்க இலக்கியம் - புலியூர்க்கேசிகன். பதிப்பு. 1982.
4. பல்லவன் கண்ட பனைமலைக் கோவில் புலவர். ந.வெங்கடேசன்.
5. தமிழின் சிறப்பு - முத்தமிழ் காவலர். கி.ஆ.பெ.விசுவநாதம்.
6. தமிழகவரலாறு - டாக்டர். மா. இராசமாணிக்கனார்.
7. தமிழரும் கலையுணர்வும் - பி.ஸ்ரீ
8. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் - கலாநிதி ஜி.சி.மெண்டிஸ்.
9. சோளீசுவரம் - (கட்டுரை) புஸ்பந்துறை - சுப்பிரமணியம் கலை தீபாவளி மலர் - 1961.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிசை பற்றி சங்க இலக்கியங்கள்

பண்டைக்காலம் தொடங்கி இக்காலம் வரையும் தமிழரது வாழ்வில் இசைக்கலை முக்கிய இடத்தினை வகித்து வந்துள்ளமை பற்றி சங்க நூல்கள் வாயிலாகவும் , அதற்குப் பிந்திய காலங்களில் தோன்றிய பல்லவ, சோழ, பாண்டிய, நாயக்கர் காலங்களைச் சேர்ந்த தமிழ் நூல்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

தமிழும், இசையும் இயைந்து வந்தது மட்டுமன்றி பிரிக்க முடியாததாகவும் திகழ்ந்து வந்துள்ளன. பிறந்த குழந்தையைத் தாலாட்டும் போது ஆரம்பிக்கும் தமிழிசையானது அக்குழந்தை ஒவ்வொரு பருவத்தையும் கடந்து ஈற்றில் மரணமடையும் போது வைக்கும் ஒப்பாரி இசையுடன் முடிவடைகின்றது. இடையில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வொரு விதமான இசை இடம்பெறுகின்றது. இதனால் தமிழர்கள் தமிழிசையின் அருமைகளையும், பெருமைகளையும் உணர்ந்தே முத்தமிழின் நடு நாயகமாக இசைத்தமிழை வைத்துள்ளனர்.

தமிழனான இராவணன் இசையில் வல்லவனாய் இருந்துள்ளான் என்பதைப் புராணங்கள் இயம்புகின்றன. இவன் தன் இசையால் இறைவனை மெய்யுருகச் செய்த பெருமையினைப் பெறுகின்றான். அக்காலந் தொடங்கி இக்காலம் வரையும் தமிழர்கள் இசையால் இறைவனைப் பாடித் தொழுது வருகின்றனர் என்பதை நமது சைவத் திருமுறைகள் மட்டுமன்றி அதற்குப் பிந்திய காலங்களில் வாழ்ந்த சிவனடியார்களின் வரலாறுகளும் சான்று பகருகின்றன. தமிழிலக்கிய நூல்கள் யாவும் இசைத்தமிழிலேயே இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சங்க காலத்தில் இசைக்கருவிகளின் வகை எண்ணிறைந்தன. அவற்றுள் யாழ்கள் நான்கு. அவை பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்பனவைகளாகும். தமிழ்ப்பாடல்கள் பண்ணுக்கு இசையப் பாடப்பட்டன. பண் ஏழு சுரங்களைக் கொண்டது. அவை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்கின. அக்காலத்தில் பாணரும், விறலியரும் தமிழ் வேந்தர் மூவரிடமும் வேளிர்களிடமும் சென்று தம் பாடற்திறமையினைக் காட்டி பரிசில்களைப் பெற்றனர். அரசர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணர்களை வரவேற்று பட்டாடை பரிசளித்து பொற்கிண்ணத்தில் மதுவளித்து அரச சபையிலிருத்தி யானைகளும், ஊர்களும் அளித்தார்களெனின் இசைத்தமிழின் சிறப்பு அக்காலத்தில் எத்துணை சிறப்பு வாய்ந்ததென்பதை அறியலாம்.

இசைத் தமிழ் சங்ககாலத்தில் நன்கு வளர்க்கப்பட்டது. பெருநாரை, இசை நுணுக்கம் முதலிய இசைத்தமிழ் இலக்கண நூல்களும் சிலப்பதிகாரம், பரிபாடல், கலித்தொகை போன்ற இசைத்தமிழ்ச்செய்யுள் நூல்களும் சங்ககாலத்தவைகளாகும்.

இசையைப்பற்றி சங்க இலக்கியங்களில் நிறைய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் நடனத்திற்கு இசையே முக்கிய காரணியாக இருந்தது. இசையாசிரியர்கள் பலர் அக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். இதனைச் சிலப்பதிகாரம் உறுதி செய்கின்றது.சிலப்பதிகாரம் கடலாடு காதையில் கானல் வரிப் பாடல் மூலம் அக்காலத்தில் தமிழிசை இருந்தமை பற்றியும் கோவலனும், மாதவியும் மகிழ்ந்திருந்த வேளையில் யாழிசை மீட்டி மகிழ்ந்திருந்தனர் எனவும் அக்காலத்தில் எட்டுவகை இசைக்கரணங்கள் இருந்தமை பற்றியும் அறியமுடிகின்றது.

"யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையும் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்குத்
தேசிகத் திருவின் ஓசைகடைப்பிடித்து"

என்னும் அடிகள் மூலம் இத்துணை சிறப்புக்கள் பொருந்திய இசையாசிரியன் மாதவிக்கு இசையாசிரியனாய் இருந்தமைபற்றி சிலம்பு குறிப்பிடுகின்றது.

பல்லவர் காலத்தில் (கி.பி. 6-9 நூ.வரை) தேவார ஆசிரியர்களும், சைவப் பெரியார்களும் தமிழிசை பாடியே இறைவனை வழிபட்டனர். இளம் பெண்கள் பூக்கொய்தல் போன்றவேலைகளைச் செய்துகொண்டு இறைவனை வழிபட்டதைத் திருவாசகப் பாடல்கள் உணர்த்துகின்றன. பல்லவப் பெருங்கோயில்களில் தமிழிசையானது கரைபுரண்டோடியது என்பதை திருமுறைப் பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இசையும், கூத்தும் முதலிடம் பெற்றன. அத்துடன் தமிழிசையானது தமிழரது வாழ்க்கையோடு இணைந்து அனைவரையும் வயப்படுத்தியது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் அடியார்கள் புடைசூழ இறைவனை ஏழிசையாகவும் இசைப்பயனாகவும் கண்டனர்.

நாயன்மார்களின் பதிகங்களில் சாதாரி, குறிஞ்சி, நட்டபாடை, இந்தனம், வியாழக்குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக்காந்தாரம், செவ்வழிக்கொல்லி, பாலை போன்ற பண்கள் பயன் படுத்தப்பட்டன. இசைப்பேரறிஞர்கள் கருவி இசை வழியாக சமயத்தை வளர்த்தனர். இக்காலத்தில் இசைக்கலையானது சிறப்புற்று விளங்கியது. பல்லவப் பேரரசனான மகேந்திரவர்மன் "சங்கீரண சாதி" என்று அழைக்கப்பட்டான். இராசசிம்மன் என்னும் பல்லவ மன்னன் "வாத்ய வித்யாதரன்" "வீணாநாரதன்" எனப் பலவாறு அழைக்கப்பட்டான்.

குடுமியான்மலை என்னும் பகுதியில் இசை மாணவர்களது நன்மைக்காகப் பணிகளை வகுத்துத்தந்த உத்திராச்சிரியர் என்பவர் மாணாக்கனான அரசன் கட்டளைப்படி கல்வெட்டு அமைக்கப் பட்டது. இங்கு மாணாக்கன் என்று குறிப்பிடப்படுபவன் மகேந்திர பல்லவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே பல்லவர் காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ்ப் பண்களும், தமிழிசையும் சிறப்புற்றிருந்தன எனத்தெளிவாகிறது.

சோழர் காலத்தில் (கி.பி 900-1300) வடநாட்டவர்களின் தொடர்புகள் அதிகரித்தமையால் பலவகையான இசைகள் தமிழில் புகுவதற்கு ஏதுவாக இருந்ததெனலாம். இக்காலத்தில் இசையையும்,கூத்தையும் விளக்கிய பல நூல்கள் வழங்கிவந்தன. கூத்திற்கு இசையே முக்கியமாக விளங்கியது. வாய்ப்பாட்டிற்கு குழலும், யாழும், வீணையும் பக்கவாத்தியங்களாக நின்றன. பண்கேட்டல் மக்களின் பொழுது போக்குகளில் ஒன்றாகும்.

சோழர் காலக் கல்வெட்டுக்கள் பல இசைபற்றிய செய்திகளை நமக்கு உணர்த்துகின்றன. அக்காலத்தில் பாணர்கள், பாடகர்கள் என்போர் மன்னர்களின் அரண்மனை வாசல்களில் எப்போதும் காத்து நிற்பர். பாணரும், விறலியரும் தமது இசைக்கருவிகளுடன் ஊர் ஊராய்ச்சென்று பிழைப்பு நடத்தினர். இசைக் கச்சேரியானது இன்ன முறையில் இயற்றப்பட வேண்டுமென்று இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களுள் கூறப்பட்ட யாழ் வகைகளும், பண்வகைகளும் தொடர்ந்து பயிற்சியில் இருந்து வந்தன. நாட்டியத்திற்குப் பதம் பாடிய பெண்களும், பின் பாட்டுப்பாடிய பெண்களும் தோரிய மடந்தையர் என்று பெயர் பெற்றனர். வீணைவாசிக்கத் தொடங்குவதற்குமுன் அவ்வீணைக்கு மாலை சூட்டுவதும், முழவுக்கு இரு புறமும் மண்பூசுவதும் இக்கால மரபாகும்.

ஒவ்வொரு பெரியகோயில்களிலும், சமய சார்பான பாடல்களுக் கேற்ப நடனமங்கையர் இருந்து நடித்தனர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நடனத்திற்கு இசை உயிர்நாடியானதால் இசைக் கலையானது சோழர்காலத்தில் மிகவும் உன்னத நிலையிலிருந்தது என்று துணிந்து கூறக்கூடியதாகவுள்ளது.

இதேபோன்று பாண்டியர் ஆட்சிக்காலத்திலும் இசைக்கலை போற்றப்பட்டமைக்குக் கல்வெட்டுச்சான்றுகள் உண்டு. தேவரடியார்கள் நடனக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தமைக்கு இசைக்கலையே காரணமாகும். "மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத" என்ற ஆண்டாளின் பாடல் மூலம் திருமணக்காலங்களில் இசைக்கருவிகள் முழங்கியதை அறியக்கூடியதாக உள்ளது.

பாண்டிய மன்னர்கள் தமிழிசையைப் போற்றினர். "ஏழுவகைப் பாடலுமியலுடன் பரப்புவது" அவர்களது குறிக்கோளாக விருந்ததை அவர்களது மெய்க்கீர்த்தி குறிப்பிடுகின்றது. பாண்டிய அரசன் நெடுஞ்சடையப்பராந்தகனுக்கு "கீதகின்னரன்" என்ற விருது இருந்தது. சங்கீதத்தில் அவனுக்கிருந்த ஈடுபாட்டினை இது காட்டுகின்றது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பணியாற்றிய ஒரு இசைக் கலைஞருக்கு மானியமாக நிலங்கள் கொடுக்கப்பட்ட செய்தியை அங்குள்ள கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது.

இசைக் கலைஞர்கள் வீரமத்தளம், மத்தளம், திமிலை, சேமக்கலம், திருச்சின்னம் போன்ற இசைக்கருவிகளை வாசித்தனர். அக்கால இசைக் கருவிகளைக் காட்டும் சிற்பங்களை மதுரை மீனாட்சி அம்மன் கோயில், கழுகுமலை கல்வெட்டுவான் கோயில் ஆகியவற்றில் இன்றும் காணலாம். ஆகவே பாண்டிய மன்னர்கள் தமிழிசையை வளர்த்ததோடன்றி அதனைக் கடவுளுக்கே அர்ப்பணித்தனர் என்றும் அறியக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சங்க காலந்தொடக்கம் விஜய நகர ஆட்சிக்காலம் வரையும் செல்வாக்குடன் திகழ்ந்த தமிழிசையானது விஜயநகர ஆட்சியில் தமிழகத்தில் நாயக்கர் ஆட்சியானது மதுரை, செஞ்சி, தஞ்சாவூர், என்பனவற்றில் ஏற்பட்டவேளையில் விஜய நகர வேந்தர் ஆந்திர இசையையும், கர்நாடக இசையையும் வளர்த்தனர். அதுமட்டுமன்றி ஆந்திரர், கர்நாடகர் என்போர் தமிழகத்தில் அரச உத்தியோகத்தர்களாகக் குடியேறியதால் கர்நாடக இசை பரவத்தொடங்கியது.

புதிய மன்னர்களை மகிழ்விப்பதற்காக தமிழிசை வாணர்கள் கர்நாடக இசையைக் கற்கலாயினர். இதன் காரணமாக பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த தமிழிசை தமிழ் நாட்டில் மறைந்துபோன தெனலாம். விஜய நகர ஆட்சியில் தமிழிசை மறைந்து போனாலும் 1948ல் மறைந்த செட்டி நாட்டரசர் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார், டாக்டர், ஆர்.கே.சண்முகம், சர். முத்தையா செட்டியார் போன்ற அறிஞர்களின் முயற்சியால் தமிழர்களிடையே தமிழிசையானது புதிய மெருகுடன் மீண்டும் ஒளிவீசத் தொடங்கியது நாம் அறிந்ததேயாகும்.

## துணைசெய்த நூல்களில் சில:

1. பாண்டியர் வரலாறு - டாக்டர். கே.வி. ராமன்.
2. சிலப்பதிகாரம் - புலியூர்க்கேசிகன் உரையுடன்.
3. சோழர்வரலாறு - டாக்டர். கே. கே. பிள்ளை.
4. பல்லவன் கண்ட பனை மலைக்கோயில்
   புலவர் ந. வெங்கடேசன்.
5. தமிழகக் கலைகள் - மா. இராசமாணிக்கனார்.
6. உலகவரலாறு - திரு. த. இராமநாதபிள்ளை. BA
   (பதிப்பு - 1951)
7. தமிழர் வாழ்வியல் - முல்லைமுத்தையா (பதிப்பு-1981)

★ வீரகேசரி "இசையும் கலையும்" பகுதியில் 08.06.93, 15.6.93 ஆகிய இதழ்களில் தொடராகப் பிரசுரமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் கதிர்காமம்

இலங்கையின் தென்கோடியில் பழமைமிக்க முருக தலங்களிலொன்றாக விளங்குவது கதிர்காமமாகும். இத்தலத்தின் மகிமை பற்றி கந்தப்புராணம் மகேந்திரயுத்த காண்டத்திலும், தெட்சணகயிலாய புராணம், மச்சபுராணம், சுப்பிரமணிய புராணம், வாமனள் புராணம், ஆகிய புராணங்கள் வாயிலாகவும் அறியலாம். கதிர்காமத்தின் பழம் பெருமையானது பாரத நாடு இலங்கை மட்டுமன்றி உலகெங்கும் வாழுகின்ற இந்து மக்களின் இதயங்களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

பூலோக கந்தபுரி, ஏமகூடம், வரபுரி எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறும் கதிர்காம தலத்தின் தோற்றம் பற்றி புராணங்கள் நன்கு தெளிவுறுத்துகின்றன. புராணகாலத்தில் கதிர்காமத்திற்குத் தென்கிழக்கே அமைந்திருந்த மகேந்திரபுரியை பத்மசூரன் என்பவன் ஆட்சிபுரிந்து வந்தான். இவன் வடக்கே சென்று குபேரனின் அளகாபுரிப்பட்டணத்தைக் கொள்ளையிட்டது மட்டுமன்றி அங்குள்ளவர்கட்கும் பெரும் இன்னல்களை விளைவித்துவந்தான்.

இவனது கொடுமைகளை நீக்குவதற்குவேண்டி இவனை வதம்புரிவதற்காகத் திருச்செந்தூரிலிருந்து முருகன் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டுக்கதிர்காமம் வந்தடைந்தார். இங்கு மாணிக்க கங்கைக்கருகில் விசுவகர்மாவைக் கொண்டு 'ஏமகூடம்' என்னும் பாசறை அமைத்துத்தங்கியிருந்தார். இதன் பின்னர் பத்மாசூரனுக்கும் முருகனுக்கும்யுத்தம் தொடங்கியது. முருகனை எதிர்த்துப் போரிடவந்த பத்மாசுரன் இரதத்தில் வந்தான். சூரனின் இரதத்திலிருந்து கொடியை அறுத்து முருகன் கடலில்தள்ளினார் [1].

பின்னர், சூரனுடன் போர் புரிந்து அவனை வெற்றி கொண்டு திருச் செந்தூரைச் சென்றடைந்தார். மாணிக்க கங்கைக் கரையில் முருகன் தங்கியிருந்த போர்ப் பாசறையே இன்று கதிர்காமம் என வழங்குகின்றது. போர்ப்பாசறை இருந்த இடத்திலேயே கதிர்காமமுருகன் ஆலயம் அமைந்துள்ளது. கதிர்காமம் என்பது கதிர் - ஒளி, காமம் - இன்பம் எனப் பொருள்படும். பரஞ்சுடராகிய கந்தக்கடவுள் விரும்பி உறையும் இடம் எனவும் கூறுவர். சூரனை வெற்றி கொண்ட முருகன் கதிர் காமக்கிரியில் நவகங்கா தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாக்கிச் சிந்தாமணி ஆலயத்தில் தேவர் சூழ வீற்றிருந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன[2]

சூரனை வெற்றி கொண்ட முருகன் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருந்த காலத்தில் இந்திரனின் மகளான தெய்வயானையை மணம் புரிந்தார். இக்காலத்தில் செல்லக் கதிர்காமப் பகுதியில் வாழ்ந்த வள்ளி என்னும் வேடுவப் பெண்ணை நாரதர் மூலமாக அறிந்து முருகன் திருமணம் புரிந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனை தலவரலாறுகள் உறுதி செய்கின்றன. இன்று வரையும் முருகன் வள்ளி திருமணம் செல்லக் கதிர்காமத்தில் நடந்ததென்பதே இலங்கையில் வாழும் இந்து பௌத்த மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்

கதிர்காம முருகன் ஆலய வரலாற்றினை நோக்குமிடத்து கதிர்காம மூலஸ்தானம் மூவாயிரம் வருடங்கள் பழமையுடையது. அகத்தியர், போகர் முதலிய முனிவர்கள் கேசரி மார்க்கமாகக் கதிர்காமத்தைத் தரிசித்தார்கள். என்று 'கதிர்காமதத்துவம்' உரைக்கின்றது. இலங்கையை சைவ மன்னனான இராவணன் ஆட்சி புரிந்த காலத்திலேயே கதிர்காம முருகன் ஆலயம் இருந்ததாய் கூறப்படுகிறது. இம்மன்னது ஆட்சியின் போது மதவாட்சிப் பகுதியை ஆட்சி புரிந்த குறுநில மன்னனான மதுவகரன் என்பான் கதிர்காம முருகன் மீது அளவற்ற பக்தியுடையவனாக இருந்தான். [4] சீதையைத் தேடிவந்த அனுமன் கதிர்காமமுருகனையும் வணங்கிச் சென்றான்.

கி.மு. 5ம் நூற்றாண்டில் விஜயனால் கதிர்காம முருகன் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாக யாழ்பாணவைபவமணிமாலை கூறுகின்றது. கி.மு. 3ம் நூற்றாண்டில் கதிர்காமப் பகுதியை ஆட்சி செய்த பாண்டியத்தமிழ்க் குறுநில மன்னர்களால் கதிர்காம முருகன் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டதைத் தமிழ்ப் பிராமிக் கல் வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. கி.மு. 101ல் துட்டகாமினி என்னும் மன்னனால் கதிர்காம முருகன் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாக ஆலய வரலாறு கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 10ம் நூற்றாண்டு வரையும் சிங்கள மன்னர்களால் கதிர்காம முருகன் ஆலயம் பேணப்பட்டு வந்தது. அக்காலத்தில் பரிபாலனத்தை வேடர்களும் அவர்கள் பரம்பரை வழிவந்தவர்களும் இந்துமத முனிவர்களும் மாறி மாறி நடத்திவநத்தாய் வரலாறு உண்டு. கி.பி. 1054ல் கதிர்காமப் பகுதியை ஆட்சி புரிந்து வந்த 'உலோகிசரன்' என்னும் போலி மன்னனை ஐந்தாம் மகிந்தனின் பேரனான 1ம் விஜயபாகு வெற்றி கொண்டான். இவன் இப்பகுதியில் சிற்றரசனாக முடிசூடிக் கொண்ட போது இவனுக்கு வயது பதினாறு ஆகும். (இலங்கையின் சுருக்க வரலாறு - பக்-51-எச்.டபிள்யு. கொடிறிற்றன்) இவன் கதிர்காம முருகனின் மீது பக்தி கொண்டவனாவான். கதிர்காம முருகனை வணங்கியே லோகிசரனை வெற்றி கொண்டு சிற்றரசனானான் என்று திரு. ரி. கணபதிப்பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றார்.[5]

கி.பி. 12ம் நூற்றாண்டில் மாகோன் என்னும் மன்னன் இலங்கையில் ஆட்சி புரிந்த வேளையில் அவனது உபராஜனான ஜயபாகு என்ற குளக்கோட்டனால் இவ்வாலயம் திருப்பணி செய்யப்பட்டதாக 'சீர்மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு செல்வமும்' என்று தொடங்கும் இவனது கல்வெட்டுப் பாடல் ஒன்றின் மூலமாக அறிய முடிகின்றது. மாகோன், ஜயபாகு ஆகிய மன்னர்களது செல்வாக்கு மாணிக்ககங்கை வரை பரவியிருந்தமை வரலாற்று உண்மையாகும். ராஜவலிய போன்ற நூல்கள் இதனை உறுதி செய்கின்றன.[6]

கி.பி. 1581ல் கண்டிய மன்னனான 1ம் இராச சிங்கனால் கட்டப்பட்ட புதிய முருகன் ஆலயத்தில்(16ம் நூற்றாண்டில்) கொள்ளையிடுவதற்காக போர்த்துக்கேயர் எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. இது கதிர்காம முருகனின் பேரருளேயாகும். இதுபற்றி 1640ல் இலங்கையில் வாழ்ந்த போர்த்துக்கேயரான 'ரிபேயிரோ' என்பவர் தனது 'இலங்கைச்சரித்திரம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சிபுரிந்த காலத்தில் கதிர்காம முருகன் ஆலயம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுச் சிறப்புடன் விளங்கியது. 'றொபட் நொக்ஸ்' என்னும் ஆங்கிலேயரது குறிப்பில் கதிர்காம முருகனின் மகிமை பற்றிப் புகழ்ந்துரைக்கப் பட்டுள்ளது. ஆதலால், கதிர்காமம் என்னும் இந்துக்களின் புனிதத்தலமானது இதிகாச காலந்தொட்டு சிறப்புடன் விளங்கி வந்துள்ளதெனலாம். 'தக்கிணகந்தபுரி' என்ற இந்த தலத்தில் குமரக்கடவுள் கணப்பொழுதும் நீங்காதிருந்து வள்ளி, தெய்வயானை(இச்சாசக்தி, கிரியாசக்தி) ஆகியோருடன் அமர்ந்திருந்து அருள் புரிந்துவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக் காலத்தில் கதிர்காம முருகனைத் தரிசித்து சித்தி பெற்ற சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள் எண்ணில் அடங்கா என்று கூறலாம். கி.பி. 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களில் ஒருவரான புகழேந்தி என்னும் புலவர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த(கி.பி. 1256ல் ஆட்சிக்கு வந்த) 'குலோத்துங்க சிங்கையாரியன்' என்னும் மன்னனின் உதவியுடன் கதிர்காம முருகனைத் தரிசித்து அவரது அருளினால் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட திருப்புகழ் மாலைகளையும் சாற்றியுள்ளார்.

கி.பி. 16ம் நூற்றாண்டளவில் காஸ்மீரத்தைச் சேர்ந்த கல்யாணகிரி என்னும் அந்தணர் கதிர்காமத்துக்கு யாத்திரை வந்திருந்தார். இம்மகான் இங்கு பன்னிரண்டு வருடங்கள் கடுந்தவம் புரிந்த வேளையில் ஒரு வேட்டுவச் சிறுவனும் சிறுமியும் உதவிகள் செய்து வந்தனர். இவர்கள் ஒருநாள் முருகனும் வள்ளியுமாகக் காட்சிகொடுத்தனர். முருகப்பெருமானின் அருளினைப்பெற்ற இம்மகான் இன்று பக்தர்களால் முத்துலிங்க சுவாமி என வணங்கப்படுகின்றார். கிழக்கிலங்கையில் வாழ்ந்து, காரைதீவு கிராமத்தில் சமாதியடைந்த ஆனைக்குட்டிச் சுவாமி என்ற மகானும் கதிர்காம முருகனின் பேரருள் பெற்றவராவார்.

கதிர்காமத்திற்கு யாத்திரை செல்லும் வழக்கம் பண்டைக்காலம் முதல் இந்துக்களிடையே இருந்து வருகின்றது. தமிழகத்திலிருந்தும் இலங்கையின் வட பகுதியிலிருந்தும் கால் நடையாக யாத்திரை செய்யும் இந்துக்கள் கிழக்குக் கரையூடாகக் கதிர்காமத்தைச் சென்றடைகின்றனர். இதே பாதையூடாகவே புராண காலத்தில் முருகப் பெருமான் தனது பரிவாரங்களுடன் கதிர்காமம் சென்றடைந்தார். இதன் தொடர்ச்சியே இந்து மதத்தவர்கள் செல்லும் கால் நடை யாத்திரை எனலாம்.

1995ல் வீரகேசரி நாளிதழில் பிரசுரமான உற்சவக் கட்டுரையின் விரிவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புக்கள்

1. தெட்சண கயிலாச புராணம் - யாழ்ப்பாணம்
சி. நாகலிங்கம் மொழிபெயர்ப்பு - பக்கம்-63-67

பத்மசூரனின் இரதத்தின் மேலிருந்த கொடியை முருகன் அறுத்து கடலில் தள்ளியதாய் தெட்சண கைலாச புராணம் உரைக்கின்றது. ஆதலால் போர் கடலருகே நடந்திருக்கின்றது. எனவே சூரனின் மகேந்திரபுரி கதிர்காமத்தருகேதான் இருந்திருக்கின்றது. சூரனுக்கும், முருகனுக்கும் நடந்த யுத்தம் அம்பாந்தோட்டைப்பகுதியில் நடந்ததாய் கொள்ளலாம்.(ஆரிய திராவிடரும் அழிந்து போன சங்கங்களும் - பக்-8-துரை ஜெகநாதன்-பதிப்பு-1982.)

2. இலங்கையின் புராதன சைவாலயங்கள் - குலசபாநாதன்
பதிப்பு - 1947

3. கதிர்காம தத்துவ விளக்கம் - கு. குருசாமி
பக்கம் - 07 - 1992.

4. சுப்பிர மணியபராக்கிரமம் - நா..கதிரைவேற்பிள்ளை
பக்கம் - 282,283 - பதிப்பு-விகாரிவருடம் தை

5. பூர்வீக சப்தஸ்தலங்கள் - திரு. ரி. கணபதிப்பிள்ளை
பக்கம்-09 - பதிப்பு - 1981

6. ஈழத்தில் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்த தமிழரசன் மாகோன் - (கட்டுரை) செல்வி க. தங்கேஸ்வரி பி.ஏ. -சிறப்பு தொல்லியல், இலக்கிய விழா மலர், வடக்கு கிழக்குகல்வி கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சு -1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரத்தில் இந்துமதமும், வடமொழி இலக்கியமும்.

பாரத நாட்டின் இயற்கை எழில் நிறைந்த பிரதேசங்களில் காஷ்மீரும் ஒன்றாகும். பனிமுடிய மலைகள், பசுமையான கானகங்கள், சலசலத்துப் பாய்ந்தோடும் நதிகள் இத்தனையும் கொண்டது காஷ்மீராகும். இதன் வரலாறு மிகத்தொன்மையான தென்பதை வரலாற்று ஆய்வுகள் மூலமாக அறியமுடிகின்றது. கி.பி 13ம் நூற்றாண்டு வரை பெரும்பாலும் தனியரசாக மிளிர்ந்த காஷ்மீரில் இந்துமதமும், வடமொழி இலக்கியமும் செழிப்புடன் விளங்கின இதனை வரலாறுகள் தெளிவுறுத்துகின்றன.

இன்று பண்டைய காஷ்மீரின் பெரும்பாலான பிரதேசம் இந்தியாவுடனும் எஞ்சிய பகுதியான சில இடங்கள் பாகிஸ்தானுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இந்திய உபகண்டத்தில் பாகிஸ்தான் உதயமான பின்னரே இந்நிலை ஏற்பட்டது. காஷ்மீரில் இன்று பெரும் பான்மையினராக வாழ்ந்து வருபவர்கள் முஸ்லீம்களாவர். இவர்களுடன் பண்டிட்ஸ் எனப்படும் இந்து மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் புராதன காஷ்மீரிகளின் சந்ததியினராவர்.

புராதன காலத்தில் காஷ்மீர் மக்களின் பண்பாட்டுக்கு இயைந்த முறையில் காஷ்மீரச்சைவம் வளர்ச்சி பெற்று வந்தது. காஷ்மீரப் பண்டிதரும் (பண்டிட்ஸ்) புகழ்வாய்ந்தவராக விளங்கினர். மிகப் பழமை வாய்ந்த வழிபாடுகளிலொன்றான சிவ வழிபாடே சைவம் என வளர்ச்சி பெற்றது. இந்தியாவில் பெருவழக்கிலுள்ள இச்சமயமே புராதன காஷ்மீரில் "காஷ்மீரச் சைவம்" என வளர்ச்சி பெற்றது. காஷ்மீரைச் சேர்ந்த தத்துவதரிசிகள் காஷ்மீரச் சைவத்தின் வளர்ச்சியில் பெரும்பங்கினை வகித்தனர். [1]

காஷ்மீரின் பண்டைய வரலாற்றை அறிவதற்கு கல்ஹணன் என்பவர் எழுதிய இராசதரங்கனி என்ற நூலும், பண்டைய நாணயங்கள், நினைவுச் சின்னங்கள், மற்றும் சீன முஸ்லீம் குறிப்புக்களும் உதவுகின்றன. [2] மாமன்னர் அசோகரது காலத்தில் (கி.மு.273-232) காஷ்மீர் இம்மன்னரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. அசோகருடைய குமாரர்களிலொருவனான சாலோகன் காஷ்மீரின் அரசியலை நடத்தினான். இந்து மதத்தைக் கைக்கொண்டிருந்த இவன் சிவனையும், ஈசான தேவியையும் வழிபட்டான் [3] என அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்னர் அசோகரால் ஒருபெரிய நகரம் காஷ்மீரில் நிறுவப்பட்டதாக கல்ஹணனின் மரபுரையின் மூலமாக அறியமுடிகின்றது. கி.மு 245ல் அசோகர் காஷ்மீருக்கு விஜயம் செய்ததுடன் இங்கு பல கோயில்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுத்தார்.[4] இவரது காலத்தின் பின்னர் காஷ்மீர் தனியரசாகத்திகழ்ந்தது.

கி.பி 100ம் ஆண்டளவில் "கனிஷ்கன்" என்னும் பேரரசன் காஷ்மீரைத் தனது அரசுடன் இணைத்துக் கொண்டான். இந்து, பௌத்த மதங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்த இவன் பௌத்த இந்து ஆலயங்கள் பலவற்றை கட்டினான். நான்காவது பௌத்த மகா நாடு காஷ்மீரில் இவனால் நடத்தப்பட்டது. 5 இவனுக்குப் பின் ஆட்சி புரிந்த "ஹவிஸ்கன்" என்பவனால் "ஹவிஸ்கபுரம்" என்னும் நகரம் உருவாக்கப்பட்டது.

இவனது காலத்தின் பின்னர் 6ம் நூற்றாண்டு வரை மோரிய, குஷான, ஹூணப் பேரசுகளில் காஷ்மீர் உட்பட்டிருந்தது. இக்கால கட்டத்தில் காஷ்மீரின் தனித்துவ நிலை முடிவுற்றிருந்தது. கி.பி. 626ல் துர்லபவர்த்தனன் என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவன் தென்னிந்திய நாகரின் வழித்தோன்றல் எனக் கூறப்படுகின்றது. இவனது காலத்தில் (கி.பி. 626 - 662) காஷ்மீர் மக்களிடையே இந்து மதம் செழிப்புடன் விளங்கியது. இதனை இக்காலத்தில் காஷ்மீருக்கு விஜயம் செய்த "யுவான்சுவாங்" என்பவரது குறிப்பு தெளிவுறுத்து கின்றது.

இவர் தனது குறிப்பில் காஷ்மீரில் இந்து மதச் சின்னங்கள் நிறைந்து காணப்பட்டதாகவும், நாடு செழிப்பான நிலையில் இருந்த தென்றும் குறிப்பிட்டுள்ளார். கி.பி.662 - 712 வரை "துர்வபகன்" என்பவன் காஷ்மீரை ஆட்சி புரிந்தான். இவனது நீண்டகால ஆட்சிக்கு இவனுடைய நாணயங்கள் சான்று பகருகின்றன. இவனுக்குப்பின் முறையே சந்திரா பீடன் (712 - 720) தாரா பீடன் (720 - 724) என் போர் ஆட்சி புரிந்தனர். இவர்களுக்குப்பின் "முக்தாபீடா லலிதாத்தியன்" என்னும் ஒப்பற்ற வீரன் ஆட்சிக்கு வந்தான்.

இவனது ஆட்சியில் (கி.பி.724 - 760) பல கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவனால் கட்டப்பட்ட மார்த்தாண்டன் கோயில், பரிகாசபுரம் என்பன அழிவுற்ற நிலையிலும் வியப்புறச் செய்யும் கலைச் சிறப்பு வாய்ந்தவை என்று "ஸ்டெபின்" குறிப்பிடுகின்றார். இந்தியாவில் சூரியனுக்கான கோயில்கள் மிக அபூர்வமாகவே உள்ளன. இவற்றில் காஷ்மீரில் உள்ள மார்த்தாண்டர் கோயிலும் ஒன்றாகும், இவ்வாலயம் பிரபல்யம் பெற்றது.[6]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வலிதாதித்யனுக்குப் பின்னர் இரண்டு குறுகிய கால ஆட்சிகள் நடைபெற்றன. கி.பி.775ல் ஜெயபீட வினயாதித்தன் என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவனது காலத்தில் (கி.பி 775 - 806) கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. வடமொழி இலக்கியம் வளர்ச்சியடைந்தது. பதஞ்சலியின் "மகா பாஷ்யம்" போற்றப்பட்டது புத்திஜீவிகளும் கௌரவிக்கப்பட்டனர் "லலிதாதித்யனுக்குப் பின் வந்த மன்னர்களின் திறமையற்ற ஆட்சியின் பயனாக காஷ்மீர் முன்பு பெற்றிருந்த சில பகுதிகளை இழந்தது.

கி.பி. 855ல் அவந்திவர்மன் என்பவன் மன்னனானான். சிவ வழிபாட்டில் சிறந்தவனான இவன் பல சிவாலயங்களைக் கட்டினான் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் காட்டினான். இவனது அரசவையை அனந்தவர்த்தனன், சிவசாமி இரத்தினாகரன் போன்ற புலவர்கள் அலங்கரித்தனர். சூரபுரம், அவந்திபுரம் என்பன இவனால் தோற்றுவிக்கப் பட்ட நகரங்களாகும்.

இவனுக்குப்பின் வந்த சங்கரவர்மன் (883-902) என்ற மன்னனும் சைவமதத்தவனாதலால் சைவமதவளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தான் இவனால் இரண்டு சிவாலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இம்மன்னனுக்குப் பின் முறையே சுகந்தா (பெண்ணரசி), மத்தவந்தி (937 - 939) பலஸ்கரதேவன் (939 -948) சங்கரமாதேவன் (948-949) ஷேமகுப்தன் (950-958) ஆகிய இந்து மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர்.

கி.பி. 958ல் "தித்தா" என்பவள் அரச கட்டிலேறினாள். இவளது ஆட்சி 1003 வரை நீடித்தது. மிகத்திறமையான ஆட்சி இவளது காலத்தில் நிலவியதுடன் இந்து மதமும் செழிப்புடன் விளங்கியது. இவள் விஷ்ணு ஆலயங்கள் பலவற்றைக் கட்டினாள். அத்துடன் இந்து மதம் வளர்ச்சியடைய வேண்டிப் பல மடங்களையும் தோற்றுவித்தாள். தனது பெயரில் இரு நகரங்களையும் இவள் நிர்மாணித்தாள்.

இவளுக்குப் பின் ஆட்சி புரிந்த 'சங்கமராசன்' காலத்தில் (1003-1028) கி.பி. 1015,1021 ஆகிய இரு ஆண்டுகளில் கஜினி முகம்மது காஷ்மீரைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றான். இவனுக்குப் பின் முறையே அனந்தன் (1028-1063), கலசன்(1063-1089), ஹர்சன்(1089-1101) என்போர் காஷ்மீரை ஆட்சிபுரிந்தனர். ஹர்சன் என்பவன் சிறந்த வீரனாயினும் இவனது கொடுமையான ஆட்சியின் காரணமாக நாடு கொந்தளிப்பான நிலையெய்தி இவனும் கொலை செய்யப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1128ல் ஜெயசிம்மன் என்பவன் மன்னனானான். இவனது ஆட்சிக் காலத்தில்(1128-1155)கல்யாணன் (கல்ஹணன்) என்னும் பிராமணன் அரசதரங்கனி என்னும் வரலாற்று நூலை எழுதினான். காஷ்மீரின் ஆதிவரலாற்றை அறிவதற்கு இந்நூல் பெரிதும் உதவியாக உள்ளது. இவனது ஆட்சிக்கு பின் காஷ்மீர் சிறிது சிறிதாகச் சிதைவடையத் தொடங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட வப்புதேவன என்னும் அரசனின் சந்ததியினர் கி.பி. 1286 வரை காஷ்மீரை ஆட்சி புரிந்தனர்.

இவர்களுக்குப் பின்னர் தொடர்ந்து காஷ்மீரில் இந்து மன்னர்களின் ஆட்சி நிலவியது. இறுதியில் 'கோதா தேவி' என்பவள் ஆட்சிக்கு வந்தாள். இவளது காலத்தில் (1339) இவளுக்குக் கீழ் பணிபுரிந்த"ஷாமிர்ஸர்" என்னும் முஸ்லீம் வீரனின் தலைமையில் அரசியல் சதியொன்று நடந்தது. இதன் பயனாக கோதாதேவி ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டாள். தனது குலத்தவனொருவனை மன்னனாக "ஷாமிர்ஸர்" நியமித்தான். கோதா தேவியுடன் காஷ்மீரில் நெடுங்காலமாக நிலவிவந்த இந்து மன்னர்களின் ஆட்சி முடிவுற்ற தெனலாம்.

கோதாதேவியின் ஆட்சிக் காலத்தில் நடந்த அரசியல் மாற்றம் பற்றி வரலாற்று நூலொன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது. 1315ல், "ஸூவாத்" என்ற இடத்திலிருந்து வந்த துணிச்சல் மிக்க முஸ்லீம் வீரரான "ஷாமிர்ஸர்" என்பவர் அப்போது ஆட்சியிலிருந்த இந்த அரசரின் கீழ் பணியாளராகச் சேர்ந்தார். தொடர்ந்து அவ்வரசரின் கீழ் பணிபுரிந்து வந்த இவர் மன்னர் இறக்க கி.பி. 1339ல் அல்லது 1346ல் அரசைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தார்.

வரலாற்று ஆய்வுகள் மூலமாக நோக்குமிடத்து கோதாதேவிக்குமுன் காஷ்மீரை ஆட்சிபுரிந்து வந்த இந்து மன்னரின் கீழ் ""ஷாமிர்ஸர்" ஒரு போர் வீரராகப் பணி புரிந்து வந்தாரென்றும், மன்னர் இறக்க கோதாதேவி ஆட்சிக்கு வந்தாளென்றும் இவளைச் சதிமூலமாகப் பதவியிலிந்து நீக்கிய "ஷாமிர்ஸர்" தனது குலத்தவனொருவனை (கி.பி. 1339) மன்னனாக நியமித்தான் என்றும் அறியமுடிகின்றது. ஈற்றில் கி.பி. 1346ம் ஆண்டளவில் "ஷாமிர்ஸர்" தனது குலத்தவனையும் அரசிலிருந்து விலக்கி தானே "ஷம்ஸ் உத்தீன்ஷா" என்ற பட்டப் பெயருடன் மன்னனானான்.

கி.பி. 13ம் நூற்றாண்டு வரையும் இந்து மதமும் வடமொழி இலக்கியமும் பண்பாட்டுக்கு இயைந்த முறையில் வளர்ச்சிபெற்று வந்த காஷ்மீரம், இந்தியக் கலைப் பண்புகளை நடுஆசியாவிலும், சீனாவிலும், பரப்புவதற்குப் பெருமுயற்சி எடுத்ததை காஷ்மீரின் பண்டைய வரலாறுகள் தெளிவுறுத்துகின்றன. கி.பி. 1339ல் இந்து மன்னரின் ஆட்சி முடிவடைந்ததின் காரணமாக இங்கு வாழ்ந்த மக்கள் முஸ்லீம்கள் ஆக்கப்பட்டனர். இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டன. பலர் நாடு கடத்தப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாமிர்ஸரின் ஆட்சிக்குப்பின்னர் பல முஸ்லீம் மன்னர்கள் கி.பி. 1440 வரை ஆட்சி புரிந்தனர். கி.பி. 1420ல் மன்னரான ஸெயின் உல்ஆபிடீன் என்பவரது காலத்தில் நல்லாட்சி நிலவியது. நாடு கடத்தப்பட்ட மக்களில் பலர் நாடு திரும்பினர். மதச் சுதந்திரம் பேணப்பட்டது இதனால் பலர் திரும்பவும் இந்துக்களாக மாற அனுமதிக்கப்பட்டனர். மகாபாரதம், இராசதரங்கணி என்பன பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இவரது ஆட்சிக்குப் பின்னர் மன்னர் ஆட்சி வலுவிழந்தது.

கி.பி. 1586ம் ஆண்டளவில் காஷ்மீரின் சுல்தானகவிருந்த "யசுப்ஷா" மொகலாயப் பேரரசின் ஆதிக்கத்தை ஏற்க மறுத்தார். இதன்காரணமாக அக்பர் காஷ்மீரின் மீது படையெடுத்தார். இப்படையெடுப்பிற்கு (1586ல்) "பகவான்தாஸ்" காசிம்கான் என்போர் தலைமை தாங்கினர். இவர்கள் சுல்தான் "யூசுப்ஷா" வையும் அவருடைய மகன் யாக்குப்பையும் தோற்கடித்தனர். அப்பொழுது காஷ்மீர் மொகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. [8] இதன்பின்னர் சுமார் இருநூறு வருடங்கள் மொகலாய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக காஷ்மீர் விளங்கியது. இதன்பின்னர் ஆப்கானியர், காஷ்மீரை கைப்பற்றினர் கி.பி. 1834ல் சீக்கிய மன்னரான "ரஞ்சித் சிங்" காஷ்மீரைக் கைப்பற்றித் தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டார்.

## குறிப்புகள்:-


1. சைவம் - பக், 4 - 10 - பூ.ஜெயராமன்.
2. இந்தியவரலாறு - ஆர். சத்தியநாதய்யர்.
3. உலகவரலாறு - பக், 139 - த.இராமநாதபிள்ளை - 1951
4. புண்ணியபாரதத்தில் புனிதயாத்திரை

   வி.என். சிதம்பரம்.
5. இந்தியவரலாறு - பக், 168 - ஆர். சத்தியநாதய்யர்.
6. அரசவில்லிச் சூரியன் - (கட்டுரை) மஞ்சரி - பெப்ரவரி 1975 - வேமகோடி சீதாராம.சாஸ்திரி
7. "இந்தியாவின் சிறப்பு வரலாறு" - பக், 110

   ஆர்.சி.மஜூம்கார்.
8. இந்தியாவின் சிறப்புவரலாறு - பக், 249,

   ஆர்.சி. மஜூம்கார். M.A

   மொகலாயர்களின் வரலாறு - பக்,110
   மு. அப்துல் ரஹீம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்னர் அசோகரும் பௌத்தமும்

பௌத்த மத வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவர் மாமன்னர் அசோகர் என்பதை வரலாறுகள் மற்றும் அவரால் நடப்பட்ட கல்வெட்டுக்கள் என்பன நன்கு தெளிவுறுத்துகின்றன. பௌத்தத்தை உலகெங்கும் பரப்புவதற்காகப் பல நடவடிக்கைகளை அவர் மேற் கொண்டார். இவர் தனது உறவினர்களைப் பௌத்த சங்கத்தவராக பர்மா, சீயம், இலங்கை, சீனா, தீபேத், தென்கொரியா, முதலிய நாடுகளுக்கு அனுப்பியதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

கி.மு. 247ல் தேவநம்பியதீசன் என்னும் இந்து மன்னனின் காலத்தில் அசோக மன்னனின் புதல்வரான மகிந்ததேரரால் இலங்கையில் பௌத்தம் அறிமுகம் செய்யப்பட்டதாக மகாவம்சம் போன்ற பௌத்தவரலாற்று ஆவணங்கள் மூலமாக அறியமுடிகின்றது.

புகழ்பெற்ற மௌரிய வம்சத்தில் பிறந்து பிறப்பால் இந்துவாக விருந்த அசோகர், கலிங்கத்தின் மீது படையெடுத்து வெற்றி கண்டபின்னரே மனம் மாறிப் பௌத்தமதத்தை தழுவினார் என்று வரலாறுகள் குறிப்பிடுகின்றன. போரில் பல உயிர்கள் பலியானதும் பலபெண்கள் விதவைகளானதும் அசோகரின் இதயத்தை மாற்றமடையச் செய்ததாகவும் இதன் பொருட்டே மனச்சாந்தி வேண்டி மாமன்னர் பௌத்த மதத்தினைத் தழுவினார் என்றும் வரலாறுகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஆனால், பிராகிருத மூலக்கதையில் அசோகர் பௌத்த மதத்தினைத் தழுவியதற்கான காரணம் வேறுவடிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் அவருக்கு நேர்ந்த தாங்க முடியாத துன்பமும். இதன் காரணமாகப் பௌத்த மதத்தை அவர் சார்ந்த விதமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலிங்கத்தில் போர் நடந்து கொண்டிருக்கின்றது. மன்னர் அசோகர் போர்க்களத்திலிருக்கின்றார். நெடுநாட்கள் நடந்த போரின் காரணமாக அசோகர் தனது மகன் குணாளனை பாடசாலையில் கல்வி கற்கச் சேர்ப்பதற்குத் தலைநகருக்கு வரமுடியாமல் இருக்கின்றது. இதனால் தூதுவர்கள் மூலம் ஐந்து வயது நிரம்பிய தனது மகனை உரிய காலத்தில் பாடசாலையில் சேர்த்து விடுமாறு ஓலை எழுதி அனுப்புகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனையில் அரசி, படைத்தளபதி, அதிகாரிகள் முன்னிலையில் ஓலைபடிக்கும் அதிகாரி அரசரால் அனுப்பப்பட்ட ஓலையைப் படிக்கின்றான். "குமாரம் அத்தியா பசேத்" என்பதே ஓலையின் வாசகமாகும். இதன் பொருள் குமாரனை கல்வி கற்கச் செய்க என்பதாகும் இதனைத் தவறுதலாக "குமாரம் அந்தியா பசேத்" என்று அவ்வதிகாரி படித்து விட்டார். இதன் பொருள் குமாரனை அந்தகனாகச் செய்க என்பதாகும்.

இதனை எல்லோரும் உண்மையென்று நம்பி விட்டனர். இதனைக் கேட்ட மாத்திரத்தில் அரசி அழுது புலம்பினாள். அரண்மனை யிலிருந்ததோர் அதிர்ச்சியடைந்தனர். மன்னனின் கட்டளையை நிறைவேற்றியே தீரவேண்டும். வேறு வழியின்றி ஐந்து வயதுப் பாலகனான குணாளன் அரசவைப் பெருமக்களின் ஒப்புதலின் பேரில் குருடாக்கப்பட்டான். இருகண்களையும் இழந்த அப்பாலகனைக் கண்ட அரசி மயங்கிவிழுந்தாள்.

கலிங்கத்தில் போர் முடிவடைந்ததும் தலைநகர் திரும்பிய அசோகர் தனது மகனுக்கு நேர்ந்த துயரினைக் கண்டு மதிமயங்கி விழுந்தார். தான் செய்த பாவங்களுக்காகத் தனது மகன் தண்டிக்கப் பட்டதை யெண்ணிமனம் நொந்தார். பின்தன் வாழ்நாளெல்லாம் துயரம் நிறைந்த உள்ளத்தை வெளி உலகத்திற்குக் காட்டாமல் மறைத்து வாழமுயன்றார். இம்முயற்சியில் தோற்றுப் போய் மன அமைதி வேண்டிப் பௌத்தமதத்தினைச் சார்ந்தார். இவ்வாறு பிராகிருத மூலக்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாமன்னர் அசோகர் சந்திரகுப்த மௌரியனின் பேரன் என்பதும், பிந்துசாரனின் மகன் என்பதும் வரலாறுகள் மூலமாக அறியக் கூடியதாகவுள்ளது. சந்திரகுப்தமௌரியன் பிந்துசாரன் ஆகிய மன்னர்கள் பேராசை கொண்டவர்களாவர் என்பதையும் வரலாறு கூறும் அசோகரின் தந்தையான "பிந்துசாரன்" மகத நாட்டை ஆட்சி புரிந்த காலத்தில் அக்கம் பக்கத்திலுள்ள நாடுகள் மீதெல்லாம் படையெடுத்து மகதப்பேரரசின் எல்லையை விஸ்தரித்துக் கொண்டார்.

இவ்வாறு மண்ணாசை கொண்ட பிந்துசாரனின் மகனே அசோகராவார். போர்க்குணம் நிரம்பப் பெற்ற மௌரிய மன்னர்களிடையே (சந்திரகுப்தன், பிந்துசாரன்) அக்காலத்தில் தர்ம நெறியானது நலிவடைந்திருந்தது. தனது தந்தைக்குப்பின்னர் அரசுரிமையைப் பெற்ற அசோகர் தந்தையைப் போன்று மகதப் பேரரசின் எல்லையை விஸ்தரிக்க விரும்பினார். இதன் விளைவே வளங்கொழிக்கும் நாடான கலிங்கத்தின் மீது அசோகர் மேற்கொண்ட படையெடுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்க நாடானது அக்காலத்தில் (கி.மு. 3ம் நூற்) வங்காளக் கடலருகே மகாநதிக்கும், கோதாவரி நதிக்குமிடையே அமைந்திருந்தது. இந்நாட்டின் மீது நீதியற்ற முறையில் அசோகர் போர் தொடுத்தபோது இப்போருக்கெதிராகக் கலிங்கப்படைகள் கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்தினர். இதன் விளைவாகப் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது. கலிங்க நாட்டு மக்கள் கண்டம் துண்டமாக வெட்டப் பட்டனர் இவர்களுள் துறவிகளும், அந்தணர்களும் அடங்குவர். பல இலட்சம் மக்கள் போர்க்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இறுதியில் பேரரசிடம் சிறிய நாடான கலிங்கம் தோல்வியைத் தழுவியது.

இதன் பின்னர் தன்னால் கலிங்கத்தில் நேர்ந்த துன்பங்கள் துயரங்கள் என்பனவற்றை நினைத்து அசோகர் பெருங்கவலையும் வெறுப்பும் கொண்டார். அவரது மனச்சாட்சி அவரை வருத்தியது. சில மாதங்களின் பின்னர் மன அமைதி வேண்டிப் பௌத்தமதத்தைத் தழுவினார். இவ்வாறு வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

ஆனால் பிராகிருத மூலக் கதையோ தனது மகனுக்குத் தன்னால் நேர்ந்த துன்பமே அசோகர் பௌத்தத்தைத் தழுவுவதற்கு மூலகாரணமாக அமைந்ததெனக் கூறுகின்றது. அசோகருக்கு முறையே திவாகரன், சாலோகன், குணாளன், ஆகியகுமார்கள் இருந்தன ரென்பதையும் இவர்களுள் குணாளன் என்பவனைப்பற்றிப் பல கதைகள் உலவிய தென்பதையும் "உலகவரலாறு" (பக்,139 த .இராம நாதபிள்ளை-1951) தெளிவுபடுத்துகின்றது.

அசோகரது மகனான குணாளனைப் பற்றி மேலும் பல நூல்கள் வாயிலாக அறிய முடிகின்றது. "இந்தியவரலறு" (ஆர்.சத்திய நாதய்யர் -பக். 131,132) மாமன்னர் அசோகருக்குப் பல பிள்ளைகள் இருந்தன ரென்றும், இவர்களுள் முதல்வனாகக் கருதப்படும் குணாளன் என்பவன் குருடன் என்றும் அசோகருக்குப்பின் எட்டாண்டுகள் இவன் ஆட்சிபுரிந்த தாகவும் குறிப்பிடுகின்றது.

கலிங்கப் போருக்குப்பின் அசோகர் பௌத்த மதத்தைத் தழுவச் சிலகாலம் எடுத்திருக்கின்றது. இக்காலத்தில் தனது மகனுக்கு நேர்ந்த கதியினை நினைத்து அவர் வருந்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இதனையே பிராகிருத மூலக்கதை, "தன்வாழ் நாளெல்லாம் துயரம் நிறைந்த உள்ளத்தை வெளியுலகத்திற்குச் காட்டாமல் மறைத்து வாழமுயன்றார் என்றும், ஈற்றில் அம்முயற்சியில் தோற்றுப்போய் மன அமைதி வேண்டிப் பௌத்த மதத்தினைச் சார்ந்தார் என்றும் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்கப் போருக்குப்பின் அசோகர் பௌத்த மதத்தைத் தழுவச் சிலகாலம் எடுத்ததை "இண்டியா ஏசோர்ட் கல்சுரல் ஹிஸ்ரறி" (லண்டன்) - 1937 உறுதிசெய்கின்றது. ( India : a Short Cultural History)

அசோகர் பௌத்த மதத்தைத் தழுவிய போதும் பிறமதங்களையும் ஆதரித்தார். தனது அரசவையிலிருந்த மதச்சங்கத்தை அக்காலத்தில் நிலவியிருந்த பௌத்த ,இந்து, ஜைன மதங்களைப்பற்றி ஆராயுமாறு பணிப்புரை வழங்கியிருந்தார். அத்துடன் தனது பிரஜைகள் அவரவர் விருப்பப்படி எந்த மதத்தவராகவும் இருக்கலாம் என்று சுதந்திரம் அளித்திருந்தார்.

பௌத்த மத நூல்கள் அசோகர் கொடியவராக இருந்ததாயும் பௌத்த மதத்தைச் சேர்ந்த பின்னரே முற்றும் குணம் மாறி சற்குண சீலர் ஆனதையும் கூறுகின்றன. இக்கூற்றை ஒப்புக் கொள்ளவேண்டியதில்லை. பௌத்த மதத்தின் மேன்மையை எடுத்துக் காட்டவே இவ்விதமான கதை சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு வரலாற்றுப் பேராசிரியரான த.கி.வெங்கிடராமன் (நமது பாரதம் - பக் 8) கூறுவதையும் நோக்கலாம். ஆதலால் அசோகரது மனமாற்றத்திற்கு மகனுக்கு நேர்ந்த கதியே முக்கிய காரணியாக இருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## துணை செய்தவை.


1. இந்தியவரலாறு - ஆர்.சத்திய நாதய்யர்.
2. ஹிந்துமதசங்கிரகம் - ஜே.எஸ்.மாசிலாமணி.
3. உலகவரலாறு - த. இராமநாதபிள்ளை - 1951.
4. இந்தியப்பண்பாடும் தமிழரும் எஸ். இராதாகிருஷ்ணன்.
5. இதயம் பேசுகின்றது -(சஞ்சிகை)
   பிராகிருத மூலகத்தை
6. நமதுபாரதம் - வரலாற்றுப் பேராசிரியர்
   த.கி.வெங்கிடராமன் (பக். 8-14)
7. எண்திசை விரவிய ஏழிசை - கட்டுரைத்தொடர்
   திரு.ம.க.அ. அந்தனிசில்.


✵ 15- 10- 1995ல் வீரகேசரி வாரமலரில் பிரசுரமான எனது மாமன்னர் அசோகன் மதம்மாறக் காரணம் என்றகட்டுரையின் விரிவாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர்



* பழம் பெரும்பதியான திருக்கோவில் தம்பிலுவில் கிராமத்தில் பிறந்து, அக்கரைப்பற்று பனங்காடு கிராமத்தில் வதியும் திரு. நா. நவநாயக மூர்த்தி, அக்கரைப்பற்று தெற்கு ப. நோ. கூ.சங்கத்தில் காசாளராகப் பணிபுரிகிறார்.

* ஏகலைவனாக ஆய்வுத்துறையில் ஈடுபட்டு தமிழ்மொழி, இலக்கியம், சமயம், வரலாறு, பண்பாடு முதலிய துறைகளில் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை ஈழத்தின் பிரபலமான நாளிதழ்கள், வாரமலர்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள் முதலியவற்றில் வெளிவந்து ஆய்வறிஞரின் கவனத்தை ஈர்த்துள்ளன.

* இவர் எழுதிய ஏராளமான இசைப்பாடல்களில் பல அவ்வப்போது இலங்கை வானொலி, ரூபவாஹினி ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. பல கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாயுள்ளன.

* அகிலஇலங்கை சபரிமலை சாஸ்தா பீடம், இந்துசமய கலாசார முத்தமிழ்ச் சங்கம் இணைந்து 14-3-93ல் நடாத்திய பட்டமளிப்பு விழாவில் இவருக்கு "ஆய்வார்வலர்" பட்டம் வழங்கப்பட்டது.

* கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, இந்துசமய கலாசார திணைக்களம் 30-11-96, 1-12-96, ஆகிய திகதிகளில் கொழும்பில் நடத்திய அருள் நெறி விழாவில் இந்து சமய நூல் எழுத்தாளரான இவரைப் பாராட்டி ஐயாயிரம் ரூபா அன்பளிப்பும் விருதும் வழங்கப்பட்டன.

* "தமிழரும் முருக வழிபாடும்", "தொல்லியல் சிந்தனைகள்" "பண்டைத்தமிழர் பண்பாட்டுக்கோலங்கள்" இது வரை அச்சில் வெளிவந்த நூல்கள் "திராவிட வேந்தன்", "கிழக்கிலங்கை வரலாறு" முதலியன நூலுருவிலுள்ள எழுத்துப்பிரதிகள்.

* காலச்சேற்றில் புதைந்து போன தமிழ்ப் பாரம்பரியங்களை, பண்பாட்டுக் கோலங்களை, தொன்மைச் சிறப்புகளை வெளிக்கொணர்ந்து அவற்றை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில் இவர் ஆத்மார்த்தமாக ஈடுபட்டுள்ளார்.

-மணி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org